# அகதி

நான்காம் வருடச்சிறப்பிதழ்

# யாழ்ப்பாணம் முஸ்லிம்களின் சொந்த மண்

- பிரபாகரன் -

* வடமாகாண முஸ்லிம்களின் எதிர்காலம்
* அகதிகளுக்கு அஷ்ரப்பின் வாக்குறுதிகள்
* நினைவுகள் அழிவதில்லை.
* அகதி மாணவர்களின் மாலை நேரக்கல்வி

விலை ரூபா ஐந்து

எம்முடைய தாயகமும் வடக்கே

# விசுவாசங் கொண்டோர் பாதுகாக்கப்படுவர்

நிச்சயமாக அல்லாஹ் விசுவாசங் கொண்டவர்களை (நிராகரிப்போரின் தீங்கிலிருந்து) பாதுகாத்துக் கொள்கிறான். நிச்சயமாக அல்லாஹ் நன்றி கெட்ட மோசக்காரர் எவரையும் விரும்புவதில்லை.

(நிராகரிப்போரால்) அநியாயத்திற்குள்ளானவர்களுக்கு (அவர்களை எதிர்த்து) யுத்தம் செய்ய அனுமதியளிக்கப்பட்டுவிட்டது. நிச்சயமாக அல்லாஹ் இவர்களுக்கு உதவி செய்யப் பேராற்றலுடையோனாக இருக்கிறான்.

இவர்கள் (எத்தகையோரென்றால்), நியாயமின்றித் தங்கள் வீடுகளிலிருந்து (விரோதிகளால்) துரத்தப்பட்டார்கள். எங்களுடைய இறைவன் அல்லாஹ் ஒருவன் என்று கூறியதுதான் இவர்கள் செய்த குற்றம். மனிதர்களில் (அக்கிரமம் செய்யும்) சிலரை சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருந்தால் கிறிஸ்தவர்களின் ஆலயங்களும் அவர்களுடைய மடங்களும், யூதர்களுடைய ஆலயங்களும், அல்லாஹ்வுடைய திருநாமம் அதிகமாக ஸ்தோத்திரம் செய்யப்படும் மஸ்ஜித்களும் அழிக்கப்பட்டே போயிருக்கும். அல்லாஹ்வுக்கு எவன் உதவி செய்கின்றானோ அவனுக்கு நிச்சயமாக அல்லாஹ்வும் உதவி செய்கிறான். நிச்சயமாக அல்லாஹ் மிக்க பலவானும்,யாவரையும் மிகைத்தோனுமாக இருக்கிறான்.

(அன்றி) அவர்கள் எத்தகையோரென்றால், நாம் அவர்களுக்குப் பூமியில் ஆதிக்கம் கொடுத்தால் அவர்கள் தொழுகையைக் கடைப்பிடித் தொழுகுவார்கள். ஸகாத்தும் கொடுப்பார்கள். நன்மையான காரியங்களைக் கொண்டேவி, பாவமான காரியங்களைத்தடை செய்வார்கள். சகல காரியங்களின் முடிவும் அல்லாஹ்விடமே இருக்கிறது.

அல்குர்ஆன்: அல்ஹஜ்ஜு வசனம் 38:41

# அகதி

அகதி
இதழ் 6; 1994

தொடர்புகள்

வடக்கு முஸ்லிம்களின்
உரிமைக்கான அமைப்பு
15 A, ரோஹினி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6.

தொலைபேசி : 586660
பெக்ஸ் : 586660

"AHATHI"

Published by
NORTHERN MUSLIMS'
RIGHTS ORGANIZATION
15A Rohini Road
Colombo - 6
Sri - Lanka

இச்சஞ்சிகையில் வெளியாகும்
ஆக்கங்களுக்கு அவற்றை
எழுதியவரே பொறுப்புடையவர்கள்

## வடமாகாண முஸ்லிம்களின் எதிர்காலம் !

கடந்த பெப்ரவரி (1994) மாதம் அகதியின் 1வது இதழ் வெளியானது. தயக்கத்துடன் கால் பதித்த எமக்கு எதிர்பார்த்ததை விட மக்கள் ஆதரவு அதிகமாகவே கிடைத்தது. 'அகதி இதழ்' எமது மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, இழந்து நிற்கும் தாயக மண்ணை மீட்கும் செயற்பாட்டில் அவர்களை ஒன்றிணைத்து முன்னெடுத்துச் செல்வதையே நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

'புகழுக்குரியவன் அல்லாஹ்வே'. எமது இம்முயற்சியால் பல தடைகளுக்கும் மத்தியில் இது வரையில் 5 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் எமது மக்கள் மத்தியில் கருத்துப் பரிமாற்றங்களுக்கு சந்தர்ப்பம் தரப்பட்டதோடு எமது ஒற்றுமையிலும் தொடர்ச்சியான முயற்சியிலுமே எமது வெற்றி இருக்கிறது என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது

ஒக்டோபர், நவம்பர் மாதங்கள் எமது மக்கள் அவர்களது சொந்த மண்ணிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட மாதங்களாகும். இவ்வருடத்துடன் வெளியேற்றப்பட்டு நான்கு வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. இக்கால கட்டத்தில் 'அகதி இதழ்' சிறப்பிதழாக வெளிவர வேண்டுமென்ற தீர்மானத்துக்கு அமைய, தற்பொழுது தங்களது கரத்தில் அகதியின் 6ஆவது இதழ் சிறப்பிதழாகத் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

நான்காவது ஆண்டைப் பூர்த்தி செய்யும் இக்காலப் பிரிவில் எமது மக்கள் 'அகதி' என்ற அந்தஸ்த்தில் இருந்து கொண்டே, இலங்கையின் முக்கிய தேர்தல்களில் பங்கெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டனர்.

இந்நான்கு வருடங்களில் எமது மக்களின் சிந்தனைகளிலும், வாழ்க்கை முறைகளிலும் தங்களுக்கு இடப்பட்டுள்ள விலங்கை உடைத்தெறிந்து சுதந்திர மனிதனாக அல்லாஹ் ஒருவனுக்கே பயந்து தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்ற எழுச்சிகரமான

உணர்வுகள் எதுவுமே அரும்பாத நிலையில் முகாமிற்குள் முடங்கிக் கிடக்கும் வாழ்க்கையையே வலிந்து தேர்ந்தெடுப்பது மிகவும் வேதனைக்குரியது.

எரிமலையாக அனல் கக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் நடவடிக்கையில் புதிய அரசு அலாதியான ஈடுபாடு கொண்டிருப்பதை அதன் நடவடிக்கைகள் எமக்குப் புலப்படுத்துகின்றன.

இதற்கான முன் முயற்சியாக அரசு புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது. அப்பேச்சுவார்த்தையின் முடிவுகள் எவ்வாறு அமையப்போகின்றது என்ற கேள்விகள் இருந்த பொழுதிலும் இச்சந்தர்ப்பத்திலாவது நாம் எம்மைப் பற்றிச் சிந்திக்காமல் இருப்பது பெரும் வரலாற்றுத் தவறொன்றை விடுவதாக அமையும்.

வட கிழக்கு இணைந்து வராத எந்த ஒரு தீர்வுத்திட்டத்தையும் ஏற்பதில்லை என்ற தீர்மானத்தில் புலிகளும், ஏனைய தமிழ் அமைப்புக்களும் உறுதியான ஓர் நிலைப்பாட்டில் இருக்கின்றன.

இந்நிலையில் இப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என விரும்பும் அல்லது முயற்சிக்கும் அரசு, வடகிழக்கு இணைந்த ஓர் அடிப்படையிலேயே தீர்வுகாண முற்பட வேண்டும். இல்லையெனில் இதற்கான முயற்சி இறுதியில் தோல்வியைத்தான் தழுவக்கூடிய நிலையேற்படும்.

இந்த அடிப்படையில் வடகிழக்கில் வாழும் முஸ்லிம்கள் தங்களது நிலைபற்றி எவ்வாறான முடிவுகளைக் கொண்டுள்ளனர்?. இதுவரையில் வடகிழக்குப் பிரச்சினையில் முஸ்லிம்களின் நிலைப்பாடு பற்றி முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியினாலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட முஸ்லிம் கல்விமான்களினாலும் சில தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. இதில் இன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பலமான நிலையில் அதிகாரப்பீடத்தில் இருந்து கொண்டு தனது தீர்வுத்திட்டத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கிறது.

உண்மையில், வடக்கு முஸ்லிம்கள் இது பற்றி இன்னும் சரியானதோர் கண்ணோட்டம் இல்லாதவர்களாகவே இருந்து வருகிறார்கள். இவ்வாறு இருப்பதானது அவர்களது எதிர்கால வாழ்க்கை முறையை மிகவும் பாதிக்கக் கூடியதாக இருக்கும். வடக்கில் 1981ல் எடுக்கப்பட்ட இறுதிக் கணக்கெடுப்பின் படி 4.7 % முஸ்லிம்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இம்முஸ்லிம்கள் வடக்கில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இல்லாமல் பரவலாக பல இடங்களில் சிதறியே வாழ்ந்து வந்தனர்.

இந்நிலையில் வடகிழக்குப் பிரச்சினையில், கிழக்கில் பெரும்பான்மையாக வாழும் முஸ்லிம்களின் நலனில் அதிக கவனம் செலுத்தப்பட்டு முன் வைக்கப்படும் தீர்வுத் திட்டத்தை வடபகுதி முஸ்லிம்களான நாமும் ஏற்றுக் கொள்வதா? அல்லது பிரத்தியேகமாக எமது சூழல் மற்றும் ஏனைய காரணிகளையும் கருத்திற் கொண்டு யோசனைகள் முன்வைக்கப்பட வேண்டுமா? என்பது சிந்திக்கப்பட வேண்டியதாகும்.

தற்பொழுது நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் எமது பிரச்சினையும் முக்கிய இடத்தைப் பெறத்தகுந்த நடவடிக்கையை நாம் இந்நேரத்தில் எடுக்க வேண்டும். இதற்காக அரசியல்வாதிகளிடத்திலேயே எமது பிரச்சினைகளை முற்று முழுதாக நாம் ஒப்படைத்து விடுவது புத்திசாலித்தனமல்ல. இப்பிரச்சினையில் முகம் கொடுக்க முன்வரும் அரசியல் சக்திகளுக்கும் அரசுக்கும், தீர்வுத் திட்டத்தில் வடக்கு முஸ்லிம்களின் அபிலாசைகளையும் நீங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் என நாம் வலியுறுத்த வேண்டும். வெறுமனே பல வன்முறைகளின் மூலம் பெறப்பட்ட வாக்குகளை வைத்துக் கொண்டு எமது பிரதிநிதிகளின் கருத்துக்களின் அடிப்படையில் தீர்வுத்திட்டத்தை முன்வைக்கிறோம் என, வடக்கைப் பிரதிநிதிப் படுத்தும் எந்தக் கட்சியும் கூற முற்படுவது விவேகமல்ல.

வடக்கு முஸ்லிம்களும், தமக்கு எதிர்காலத்தில் அமைதியாக ஐக்கியமாக வாழ்வதற்கு எவ்வகையான தீர்வுகள் பொருத்தமானது என்பது பற்றி சிந்திக்க வேண்டும்.

இதற்கான ஏற்பாடுகளை, ஒவ்வொரு அகதி முகாம்களிலும், அகதிகள் வாழும் ஊர்களிலும் ஒன்றிணைக்கப்பட்ட நிலையில் வடபகுதிக் கல்விமான்களைக் கொண்டு, கருத்தரங்குகள் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு நல்ல தெளிவான முடிவுகளுக்கு எமது மக்கள் வரவேண்டும். அது ஒன்றுபட்ட குரலாக, ஆணித்தரமான குரலாக, ஓங்கி ஒலிக்க வேண்டும்.

இதற்கிடையில் அரசியல் தீர்வுக்காகப் பேசும் எந்த ஒரு சக்தியும் பின்வரும் விடயங்களை கவனத்தில் எடுப்பதும் முக்கியமானதாகும்.

1. வடமாகாண முஸ்லிம்களின் வரலாற்று/ இன, கலாசார, அரசியல் தனித்துவம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

2. வடக்கில் பரந்து காணப்படும் முஸ்லிம்களும், அவர்களின் குடியிருப்புக்களும் அவ்வப் பிரதேசங்களோடு காலாகாலம் புவியியல், பொருளாதாரரீதியாக இரண்டறக் கலந்துள்ளன என்பதோடு, அவ்வப் பிரதேசங்களிலேயே அவர்கள் தொடர்ந்து வாழ வேண்டும். இவ்விடயம் எவ்வித அபிப்பிராய பேதத்துக்கும் இடமின்றி அங்கீகரிக்கப்பட வேண்டும்.

3. தவறான அரசியல் நோக்கத்தில் பலாத்காரமாக தமது பாரம்பரியப் பிரதேசங்களை விட்டு விரட்டப்பட்ட வடமாகாண முஸ்லிம் மக்கள், திரும்பவும் தமது தாயகத்துக்குச் செல்லவேண்டிய ஏற்பாடுகளுக்கு அரசியல் தீர்வில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். இச்சந்தர்ப்பத்தில், பிறந்த மண்ணிலிருந்து முற்றாக ஒதுக்கப்பட்ட நிலையில், வட மாகாணத்திற்கு வெளியில் அகதி முகாம்களிலிருந்துகொண்டு தமது அரசியல் உரிமைகளைக் கோரும் துர்ப்பாக்கியமான நிலையினை அனுபவித்து வாழ்வோர், வரலாற்றில் வடமாகாண முஸ்லிம்கள் மாத்திரம்தான் எனக் கூறின் அது மிகையாகாது. அதேவேளை வடமாகாணத் தமிழர்களும் கிழக்குமாகாணத் தமிழர்களும், முஸ்லிம்களும் தமது பாரம்பரியப் பிரதேசங்களில் வாழ்ந்து கொண்டுதான் தமது உரிமைகளைக் கோரி வருகிறார்கள் என்ற வேறுபாடு நன்கு உணரப்பட வேண்டும்.

4. பிரதேச ரீதியான அதிகாரப் பரவலில் வடமாகாண முஸ்லிம்களின் மன்னார் மாவட்ட செறிவு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதே நேரம் வட மாகாணத்தில், ஏனைய மாவட்டங்களிலும் பரந்து காணப்படும் முஸ்லிம்களுக்கு அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான உரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

புலிகள் தலைவர் வே.பிரபாகரன் **'யாழ்ப்பாணம் முஸ்லிம்களின் சொந்த மண்'** என்று கூறி யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் மீண்டும் வந்து குடியேறுவதற்கு அனுமதியளித்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில்; வட பகுதி முஸ்லிம்கள் மத்தியில் சில சந்தேகங்கள் எழுந்துள்ளன.

1. வடபகுதியில், யாழ்ப்பாணத்திலிருந்து மாத்திரம்தானா முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டனர்? வட பகுதியின் ஏனைய பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களின் மண் சொந்தமில்லையா? யாழ்ப்பாண முஸ்லிம்கள் மீண்டும் வந்து குடியேறலாம் என்றால், வடபகுதியின் ஏனைய பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் நிலை என்ன? அவர்களைப் பற்றி பிரபாகரனும் புலிகளும் என்ன நினைக்கிறார்கள்

2. யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் மீண்டும் வந்து குடியேறுவதற்கு அனுமதித்திருக்கும் பிரபாகரன் இதற்காக முன்வைத்திருக்கும் நிபந்தனையில், "போர்ச் சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணக் குடா நாட்டில் மட்டும் 3 இலட்சம் மக்கள் அகதிகளாக வாழ்கின்றனர். யாழ்ப்பாணத்தில் குறிப்பாக தீவுப்பகுதி மற்றும் வலிகாமம் வடக்கில் இராணுவம் குடியிருப்பு நிலங்களை ஆக்கிரமித்துள்ளதால் இந்த மக்கள் குடிபெயர்ந்து அகதிகளாக மாறியுள்ளனர். இந்த தமிழ் அகதிகளில் கணிசமான தொகையினர் முன்பு முஸ்லிம் மக்கள் வாழ்ந்த இடங்களில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். சிங்கள இராணுவம் தான் ஆக்கிரமித்துக் கொண்ட குடியிருப்புப் பகுதிகளில் இருந்து வெளியேறுமாயின் தமிழ் அகதிகள் தமது கிராமங்களுக்கு திரும்பிச் செல்ல வசதி ஏற்படும். அப்படியான ஒரு சுமுக சூழ்நிலை ஏற்பட்டால் அகதிகளாகவுள்ள முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணம் திரும்பிவர நாம் அனுமதிப்போம்" என்ற கூற்றானது நியாயவாதிகளால் ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும். முஸ்லிம் சமூகம் தனது வாழ்விட உரிமை பறிக்கப்பட்ட நிலையில் அகதியாக வாழும் பொழுது, அந்த சமூகம் வாழ்ந்த பகுதியில் பிறிதொரு சமுதாயத்தை குடியமர்த்தி விட்டு, குடியமர்த்தப் பட்ட சமூகத்தின் வாழ்விடங்களை விட்டு இராணுவம் வெளியேறினால்தான் வாழ்விட உரிமை பறிக்கப்பட்ட சமூகத்திற்கு மீண்டும் வாழ்விட உரிமை வழங்கப்படும் என்று கூறுவதை ஆக்கிரமிப்புத் தன்மையின் ஓர் வெளிப்பாடாகவே கொள்ள வேண்டியுள்ளது.

இக் கூற்றைத் தலைவர் பிரபாகரன் தன்னுடைய மீள் பரிசீலனைக்கு எடுக்க வேண்டும். வட பகுதி முஸ்லிம்களின் நியாயமான உரிமைகளை எவ்வித நிபந்தனைகளுமின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் வட பகுதியில் தமது சொந்த மண்ணில் வந்து வாழ்வதற்கு அரசுக்கோ முஸ்லிம்களுக்கோ எவ்வித நிபந்தனையும் இடாது இருத்தல் வேண்டும்.

வாரீர் !
அணிதிரள்வீர் !
ஒன்றுபடுவோம்!
வெற்றிபெறுவோம் !

# எண்ணக் குமுறல்கள்

பன்னெடுங்காலமாக என் இதயத்தில் உதித்திட்ட எண்ணக் குமுறல்களை யாரிடம் சொல்வதென அங்கலாய்த்திருந்தேன். என் குமுறல்கள் என்னிலிருந்து வெளியாக முன் மூன்றெழுத்து பொறிக்கப்பட்ட 'அகதி' என்னும் சஞ்சிகை வெளியாகியது. என் எண்ணக் குமுறல்கள் நீங்குகின்றன. இச்சஞ்சிகையின் பணி 'அகதி' என்னும் மூன்றெழுத்து அழியும் வரை தொடரட்டும்.

கலீல் முஹம்மது அஸ்கர்
கரம்பை பாலாவி

உங்களால் வெளியிடப்பட்டு வரும் 'அகதி' சஞ்சிகை பார்வையிட்டேன். இது வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் இன்றைய நிலையையும் அவர்களின் சனத்தொகை, நிலப்பரப்பு, வரலாறு, கல்விப்பிரச்சினை மற்றும் அவர்களின் எதிர்காலப்பிரச்சினைகள் என்பன பற்றி நன்கு அறியக் கூடிய வண்ணம் இந்த சஞ்சிகையில் பிரசுரித்திருந்தீர்கள். உங்கள் முயற்சி மேலும் தொடர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.ரி.எம்.அன்வர்
வாழைச்சேனை –04

தங்களின் 'அகதி' இதழினை சந்திக்கக் கிடைத்தது. நமது நாட்டின் சூழ்நிலைக்கேற்ற வண்ணம் இப்படியொரு இதழ் வெளிவருவது வரவேற்கத்தக்கதே. காரணம் இன்றைய வன்செயல், சமூக நிலைமைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

எனவே, 'அகதி' போன்ற சஞ்சிகைகள் வெளிவருவதன்மூலம்தான் இப்படியான குறைகளையும் நிறைகளையும், சுட்டிக்காட்ட முடியும். சமூகத்துக்காக உழைக்கும் வண்ணம் இப்படியொரு இதழைத் துணிந்து வெளியிட முன்வந்த ஆசிரியர் குழுவிற்கும், இதற்குத் தமது சொந்த அகங்களையும் விட்டுத் துணிந்து வந்தவர்களுக்கும் எனது (அகதி வாசகர்கள் சார்பில் மனமார்ந்த) நன்றி. வருங்காலங்களிலும் சமூக மாற்றங்களுக்கு எதிர் நீச்சல் போட்டுத் தொடர்ந்து வெளிவர வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

ஒரு குறை கிழக்கு மாகாணத்திலுள்ள காத்தான்குடி போன்ற எமது ஊர்களுக்கு அகதி தொடர்ந்து கிடைப்பதில்லை. தயவு செய்து அகதி இதழ் தொடர்ந்து கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

எம்.மசூத் அஹமத் ( ஆசிரியர்–கலையுள்ளம்)
90 மத்திய வீதி
காத்தான்குடி–03

அல்லல்படும் அகதிகளின் ஆவலைப் பூர்த்தி செய்யுமுகமாகத் தாங்கள் எடுத்த முயற்சிக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள் பாராட்டுக்கள். எமது பிரச்சினைகளைச் சுட்டிக்காட்ட களம் ஒன்று அமையாதது எமது துரதிர்ஷ்டமே என்றிருந்த வேளையில் 'அகதி' சஞ்சிகை அக்குறையை நிவர்த்தி செய்ததற்கு முதலில் இறைவனுக்கு நன்றி. 'அல்ஹம்துலில்லாஹ்' மேலும் தொண்டர் ஆசிரியர் பற்றி குறிப்பிடப்பட்ட விடயம் சம்பந்தமாக தங்களுக்கு எங்கள் நன்றிகளும்.

செயலாளர்,
மன்னார் மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம்,
இஸ்மாயில் புரம்,
புத்தளம்.

"அகதி" தனது இதழ்களை விரித்து மக்களின் கைகளில் தவழ்ந்து, வடக்கு முஸ்லிம்களின் எண்ணங்களை, தமது தாயகத்தை மீட்டெடுக்கும் பணியில் ஒன்று சேர்த்துக் கொண்டிருக்கிறது. இவ்வேளையிலாவது வடக்கு முஸ்லிம்கள் உணர்ச்சி பெறுவார்களா? தங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்கு ஒன்றுபடுவார்களா?

எஸ்.எம்.நசீர்
முஸ்லிம் அகதி முகாம்
கல்கமுவ.

அன்பான 'அகதி'யே வாழ்க. வளர வேண்டும் உன் சேவை.நாளை நம் உரிமை தட்டிக் கேட்கும் தலைமகளில் நீதான் கதாநாயகனாக காட்சி தர வேண்டும். என்றும் உனக்கு என் வளமான வாழ்த்துக்கள்

விடத்தலூரான்
அன்சாரி எம்ஸா

கடந்த காலங்களில் வடபகுதி முஸ்லிம்கள் அரசியல் உட்பட சகல ரீதியாகவும் அநாதைகளாக இருந்தனர். தற்பொழுது அகதிகளாகப் போன பின்னராவது எமது மக்களுக்கு மேலும் வலுவூட்டவும், எமது சகல உரிமைகளையும் வென்றெடுக்க எமக்கென ஓர் அமைப்பு வளர்வதையிட்டு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

இவ்வமைப்பு வடபகுதி முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்தி ஓர் அணியின் கீழ் ஒன்று திரட்டி தனது இலக்கை வெகு விரைவில் அடையும் எனத்திடமாக நம்புகிறேன்.

எம்.எச்.எம்.சகீன்
செயலாளர்
யாழ்முஸ்லிம் நலன்புரிச் சங்கம்
ரியாத்.

'அகதி' பெயர் தாங்கி வெளிவந்த சஞ்சிகையைக் கண்டேன். உள்ளத்தில் ஓர் திருப்தி. எனக்குள் ஒன்றுமறியாத குளிர்ச்சி. விடிவு எங்கே என்றிருந்த அகதிகளின் இருண்ட வாழ்வுக்கு ஒளியூட்டிய 'அகதி' இதழ் கைகறை உதயம் எற்பட்டது போன்று என் உள்ளத்திலே மின்னி மின்னி மறைகிறது. இது என்றும் காலத்தால் அழியாத அகல் விளக்காக ஒளி வீசிக் கொண்டிருக்க என் வாழ்த்துக்கள்.

எம்.ஏ.ஹபீழ்
றசூல் புதுவெளியூரான்

வடக்கிலிருந்து வன்முறையால் விரட்டப்பட்டு வாழ்க்கையைத் தொலைத்து விட்டு தேடவும் தெம்பின்றி வீழ்ந்து கிடக்கும் முஸ்லிம்களுக்கு 'அகதி' பாசமாய்க் கைநீட்டுகிறது. 'அகதி'யின் பாசக்கரம் பற்றி எழுந்து நிற்பது அல்லது அதையும் தனக்கருகிலேயே வீழ்த்தி விடுவது என்பது மக்களின் கையில்தான் இருக்கிறது.
நம் மக்கள் எதைச் செய்யப் போகிறார்களாம்?

எம்.ஷிபான்
மன்னார்

*****

# வடமாகாண முஸ்லிம் அகதிகள்

## (வரலாற்று பொருளாதார ரீதியான ஒரு நோக்கு)

முஹம்மது ஜான்சின், முகாமைத்துவப்பிரிவு, கொழும்புப் பல்கலைக்கழகம்

### பிரச்சினைக்கான காரணங்கள்:

இலங்கையின் மொத்த சனத் தொகையில் முஸ்லிம்களின் எண்ணிக்கை ஏறக்குறைய இரண்டு மில்லியன்களாகும். இது நம் நாட்டின் சனத்தொகையில் 8%க்குச் சமனானதாகும். இலங்கை முஸ்லிம்களின் மூதாதையர்கள் அராபியர்கள் ஆவர். இலங்கையில் குடியேறிய அராபியர்களின் வழித்தோன்றல்களாகவே இலங்கை முஸ்லிம்கள் காணப்பட்டனர். சத்திய இஸ்லாத்தின் ஏக தெய்வக்கொள்கையினாலும் இஸ்லாத்தின் ஒழுக்க நெறிகளினாலும் கவரப்பட்ட மக்கள் இஸ்லாத்தை ஏற்றதாலும் தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியேறிய முஸ்லிம்களாலும் 17ம் நூற்றாண்டு காலப்பகுதியில் யாவாவிலிருந்து வந்து குடியேறிய மலாயர்களாலும் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்தது. யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட முஸ்லிம்களும் அராபியர்களின் வழித்தோன்றல்களாகவும், தென்னிந்திய யாவா போன்ற நாடுகளிலிருந்து குடியேறிய மக்களாகவும் காணப்படுகின்றனர். அராபியர் வணிகத்தில் சிறந்து விளங்கியதால் இலங்கை முஸ்லிம்களும் வியாபார வர்த்தகத் துறைகளில் சிறந்து விளங்கினர். இவர்கள் நாட்டின் அபிவிருத்தியில் எல்லாத் துறைகளிலும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

போர்த்துக்கேயர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகிய வெளிநாட்டுச் சக்திகளின் வருகையினால் இலங்கை முஸ்லிம்கள் பாரிய (மாற்றங்களை) பிரச்சினைகளை எதிர் கொண்டனர். அவ்வாறான பாதிப்புக்களிலிருந்து அவர்களால் ஒரு போதும் மீள முடியவில்லை. முஸ்லிம்களை நசுக்குவதற்காக இந்த வெளிநாட்டுச் சக்திகள் பல்வேறு விதமான கடினமான சட்டங்களைப் பிரகடனப் படுத்தினர். ஏனெனில் முஸ்லிம்கள் மட்டுமே அவ்வெளி நாட்டுச் சக்திகளின் வற்புறுத்தி மதம் மாற்றும் கொள்கையை வெளிப் படையாக எதிர்த்தார்கள். இவ்வெளிநாட்டு சக்திகள் முஸ்லிம்களைத் திட்டமிட்டு நசுக்கியதால் முஸ்லிம்கள் கலாசார ரீதியாக தனிமைப் படுத்தப்பட்டு, கல்வித் துறையில் பின்தங்கி, அரசியல் ரீதியாக முக்கியத்துவம் அற்றவர்களாகவும், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகவும் காணப்பட்டனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் முஸ்லிம்கள் அரசியல் துறையிலும் பங்களிப்புச் செய்யத் தொடங்கினர். இலங்கையின் வேறுபட்ட தேசிய அரசாங்கங்களில் முஸ்லிம்கள் பல முக்கிய பதவிகளைப் பொறுப்பேற்று அவற்றைச் செவ்வனே செய்து வந்துள்ளார்கள். இன்று பிரச்சினைக்குரிய பிரதேசங்களான வடக்கு, கிழக்கில் கூட முஸ்லிம்கள் தமிழ்க்கட்சிகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளனர்.

### தமிழ்ப்போராட்டக்குழுவினர் ஏன் முஸ்லிம்களைத் தாக்கினார்கள்:

அரசபடைகளுக்கும் தமிழ் போராட்டக் குழுக்களுக்குமிடையிலான ஆயுதப் போராட்டம் 1983ம் ஆண்டுதான் முதன் முதலாக ஆரம்பித்தது முதல் அவர்கள் இரு பகுதியினராலும் சிறிதளவான பாதிப்புகளுக்கு உள்ளானரர்கள். 1985ம் ஆண்டு முதல் வடக்குக் கிழக்கில் வாழ்ந்த

முஸ்லிம்கள் பரஸ்பரம் அழிவை ஏற்படுத்தும் அர்த்தமற்ற இந்த யுத்தத்தினால் பீடிக்கப்பட்டனர். இப்பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் தமிழ் ஆயுதக்குழுக்களால் நசுக்கப்பட்டனர். காலத்துக்குக் காலம் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்கு முறைகளும், தாக்குதல்களும் பின்வரும் நோக்கங்களைக் கொண்டதாகக் காணப்பட்டது.

(1) முஸ்லிம்களைப் பொருளாதார ரீதியாக பலவீனர்களாக்குவது

(2) இந்துப் பிராந்தியங்களில் ஏற்பட்ட இஸ்லாமிய இளைஞர்களின் தலைமைத்துவத்தை அழித்தொழிப்பது.

(3) முஸ்லிம்களிடையே மார்க்க ரீதியாகவும், கல்வித்துறைகளிலும் ஏற்பட்ட எழுச்சிகளை அடக்கி அவர்களை நசுக்குவது.

(4) இந்துக்களைப் பெரும்பான்மை யாகக் கொண்ட தமிழர்களின் கீழ் அடக்கப்பட்ட சிறுபான்மைச் சமூகமாக முஸ்லிம்களை வைத்திருப்பது.

இந்த நோக்கங்களை அடைவதற்காக இந்தத் தமிழ் ஆயுதக் குழுக்கள் பல்வேறு சதித்திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயற்படுத்தினர். அவர்கள் முஸ்லிம் இளைஞர்களைக் கடத்திச் சென்று அரசாங்க அதிபர்கள் (G.A), கிராம சபைத்தலைவர்கள், இளைஞர் அமைப்புக்களின் தலைவர்கள், கல்விமான்கள், மார்க்கத் தலைவர்கள் போன்றோரை அநியாயமாக சுட்டுக் கொலை செய்தனர். முஸ்லிம்களின் வியாபார நிறுவனங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. பல இலட்சம் ரூபாய்ப் பெறுமதியான சொத்துக்கள் அபகரிக்கப்பட்டன. முஸ்லிம்கள் கப்பம் கட்டுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். கப்பமாகக் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கேட்டனர். பணமாகவோ, தானியமாகவோ வரி செலுத்துமாறு முஸ்லிம்கள் வற்புறுத்தப்பட்டனர்.

## இந்திய அமைதிப்படையின் வருகை:

1987ல் ஜே.ஆரும்-ராஜீவும் கைச்சாத்திட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையின் வடக்குக்கிழக்கில் இந்திய அமைதிகாக்கும் படையினர் (I.P.K.F) நிலைகொண்டனர். அமைதிப் படையின் வருகையுடன் வடக்குக் கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்களின் நிலை மிகவும் மோசமாகியது. 1987–89 காலப்பகுதியில் முஸ்லிம்களின் முக்கிய கிராமங்கள் பல தமிழ் ஆயுதக்குழுக்களால் தாக்கப்பட்டன. பல முஸ்லிம் இளைஞர்கள் ஈவிரக்கமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்திய அமைதிப்படையினர் 1990 மார்ச்சில் தமது நாட்டுக்குத் திரும்பச் சென்றனர். அதன் பின் சமாதானம் மூன்று மாதங்களுக்கே நீடித்திருந்தது. 1990 ஜூன் 11ம் திகதி இலங்கை இராணுவத்துக்கும் தமிழ் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்தம் மீண்டும் ஆரம்பமாயிற்று. நடுநிலைமைவாதிகளான முஸ்லிம்கள் இந்த யுத்தத்துக்குள் வீணாக இழுக்கப்பட்டனர். முஸ்லிம்கள் தமது போராட்டத்தின் ஒரு பகுதியினர் என்றும் அவர்கள் தமிழ் பேசும் முஸ்லிம்கள் எமது சகோதரர்கள் என்றும் கூறி வந்த விடுதலைப் புலிகளும் முஸ்லிம்களைத் தாக்கத் தொடங்கினர். பள்ளி வாசல்களில் தொழுகையில் இருந்தவர்களும், வீடுகளில் ஆழ்ந்த தூக்கத்திலிருந்தவர்களும் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். இம்மனிதாபிமானமற்ற கோரக் கொலைகளுக்கு காரணம் புரியாமல் முஸ்லிம்கள் தவித்தனர். ஆனால் மனிதப் படுகொலைகள் தொடர்ந்தன. புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பாரிய படுகொலைகளில் முக்கியமான படுகொலைகளாவன.

| திகதி | சம்பவம் நடந்த இடம் | கொல்லப்பட்ட முஸ்லிம்கள் | காயமடைந்தவர்கள் |
|---|---|---|---|
| 1990 ஜூன் 11 | கிழக்கு மாகாண பொலிஸ் நிலையங்கள் | சரணடைந்த 1000 பேரில் கொல்லப்பட்ட பொலிஸாரில் 75% முஸ்லிம்கள் | 20 பேர் |
| 1990 ஜூலை 14 | ஒட்டாச்சிமடம் | 60 பேர் | — |
| 1990 ஆகஸ்ட் 03 | காத்தான்குடி பள்ளிவாசல் | 167 பேர் | 125 பேர் |
| 1990 ஆகஸ்ட் 12 | ஏறாவூர் படுகொலை | 173 பேர் | 62 பேர் |
| 1992 அக்டோபர் 15 | அழிஞ்சிப் பொத்தானை (பொலநறுவை) | 190 பேர் | 40 பேர் |

மூலம்: இலங்கையின் பத்திரிகைகள், ASIA WATCH

## வடமாகாண முஸ்லிம்களின் வெளியேற்றம்:

1990 ஒக்டோபர் 18ம் திகதி சாவகச்சேரிப் பகுதியில் வசித்து வந்த 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சொத்துக்களை வைத்து வெளியேறுமாறு பணிக்கப்பட்டனர். ஆயுதம் தாங்கிய புலிகளின் வேண்டுகோளுக்கு அஞ்சிய முஸ்லிம்கள் சொத்துக்களை அப்படியே விட்டு விட்டு வெளியேறினர். 1990 ஒக்டோபர் 23ம் திகதி மன்னார் மாவட்டத்தில் வாழ்ந்த 45000க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் தமது ஊர்களை விட்டு வெளியேறுமாறு ஒலிபெருக்கிகள் மூலம் வேண்டப்பட்டனர். அவ்வாறு தமது வீடுகள், கிராமங்கள், நகரங்களை விட்டு வெளியேறியோர் தமது பெறுமதிமிக்க சொத்துக்களையும் உடமைகளையும் அந்தந்த இடங்களிலேயே விட்டுச் செல்லுமாறும் மீறுவோர் சுட்டுக் கொல்லப்படுவர் என்றும் ஆயுத முனையில் மிரட்டப்பட்டனர். அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு, வவுனியா கிளிநொச்சி மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். கடைசியாக வடக்கிலே எஞ்சியிருந்த யாழ்ப்பாண முஸ்லிம்கள் தமது உடமைகளையும் சொத்துக்களையும் விட்டு விட்டு இரண்டு மணித்தியாலத்துக்குள் வெளியேறுமாறு 1990 ஒக்டோபர் 30ம் திகதி வேண்டப்பட்டனர். அவ்வாறு வெளியேறிய முஸ்லிம்கள் லொறிகளில் ஏற்றப்பட்டு வவுனியாவில் கொண்டு வந்து விடப்பட்டனர். 1990 நவம்பர் 2ம் திகதி வடக்கில் முஸ்லிம்களின் தொகை பூச்சியமாகும். ஆனால் புலிகளால் பணத்துக்காகவும் வேறுபோலிக் காரணங்களுக்காகவும் பிடித்து வைக்கப் பட்டிருந்த 55 முஸ்லிம்கள் அங்கு இருந்தனர். இவர்களில் 22 பேர் ஒன்றரை வருடத்தின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். எனைய 33 பேரின் நிலமைகள் பற்றியோ அவர்கள் உயிருடன் உள்ளார்களா? என்ற விபரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

வடமாகாண முஸ்லிம்கள் இப்பகுதிகளில் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக வசித்து வந்தவர்கள். அவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் வெளியேற்றப்படும் வரை இந்தப் பிராந்தியங்களில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான உறவு மிகவும் அந்நியோன்யமாகவே காணப்பட்டது. இன்றும் கூட "தமிழ் மக்கள் எமது விரோதிகளல்ல. புலிகள்தான் எமக்கு அநீதி இழைத்துவிட்டனர்." என்று வடமாகாண முஸ்லிம்கள் கூறுவதைக்கேட்க முடிகிறது.

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போது அவர்களின் பெறுமதிமிக்க பொருட்களும் அசையும், அசையாச் சொத்துக்கள் ஆயுத முனையில் பறித்தெடுக் கப்பட்டன. வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தம்முடன் எந்தவொரு பெறுமதிமிக்க பொருளையும் எடுத்துச் சென்று விடக்கூடாது என்ற நோக்கில் முஸ்லிம் பிரதேசங்களின் வெளியேறும் வாயில்களில் வெளியேறிய முஸ்லிம்கள் ஆயுத முனையில் புலிகளால் சோதனையிடப்பட்டனர். இன்று முஸ்லிம்கள் வடக்கில் வாழ்ந்த பிரதேசங்கள் பெரும்பாலும் வெறிச்சோடிக்கிடக்கின்றன. சில வீடுகளில் தமிழ் மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். அன்று வடக்கில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த முஸ்லிம்கள் இன்று அகதிகளாக அகதிமுகாம்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிதறிக்கிடக்கின்றனர். இந்த முஸ்லிம்கள் நாட்டின் பலபாகங்களிலுமுள்ள 200க்கும் மேற்பட்ட அகதி முகாம்களிலும் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் சிலர் வாடகை வீடுகளிலும் காலத்தைக் கடத்துகின்றனர். புத்தளம் மாவட்டத்தில் மட்டும் 160 முகாம்களில் 8877 குடும்பங்களைச் சேர்ந்த 35000க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் அகதிகளாக வாழ்கின்றனர். அநுராதபுரம், குருநாகல், கம்பஹா (நீர் கொழும்பு), களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் பெருமளவான இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் அகதிகளாக வாழ்கின்றனர். கொழும்பு மாவட்டத்திலும் 5 முஸ்லிம் அகதிமுகாம்கள் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். வெளியேற்றத் தினால் ஏற்பட்ட உளரீதியிலான அதிர்ச்சிகளும் கவலைகளும் ஒரு புறமிருக்க வடமாகாண முஸ்லிம்களின் பொருளாதார இழப்புகள் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடய மாகும்.

## வடமாகாண முஸ்லிம்களின் பொருளாதார இழப்புகள்

வடமாகாண முஸ்லிம்கள் 128 பள்ளிவாசல் களையும், 26 புனித பிரதேசங்கள், 189 அரபு ஆரம்ப போதனா கூடங்கள், 65 அரசாங்க பாடசாலைகள் மற்றும் ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு மேற்பட்ட விவசாய காணிகள், 1400க்கும் மேற்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனங்கள், 15000க்கும் மேற்பட்ட வீடுகளையும் வீட்டுபயோகப் பொருட்களையும் மற்றும் பலவற்றையும் இழந்துள்ளனர். இவற்றை விட ஆடு, மாடு, கோழி போன்ற வீட்டு வளர்ப்பு

மிருகங்களையும் பறவைகளையும் விட்டுவிட்டு வந்துள்ளனர்.

கீழ்வரும் அட்டவணை வடமாகாண முஸ்லிம்களின் பொருளாதார இழப்புகளின் அண்ணளவான மதிப்பீட்டு பெறுமதிகளைக் காட்டுகின்றது.

| | விபரம் | மதிப்பிடப்பட்ட மொத்த இழப்புக்கள் |
|---|---|---|
| (1) | குடும்ப இழப்புக்கள் | 5408 மி |
| (2) | நிறுவன ரீதியான இழப்புக்கள் | 2107 மி |
| (3) | விவசாய காணி இழப்புக்கள் | 180 மி |
| (4) | மத ரீதியிலான நிறுவனங்களின் இழப்புக்கள் | 640 மி |
| | மொத்த இழப்புக்கள் மில்லியனில் | 8335 மி |

மூலம் : கலாநிதி S.H.ஹஸ்புல்லாஹ் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வும் அறிக்கையும்

மேற் கூறப்பட்ட இழப்பு மதிப்பீடுகள் பொருளாதார இழப்புகளை மட்டும் உள்ளடக்கிய தாகும். முஸ்லிம்களுக்குச் சொந்தமான வாகனங்களின் இழப்புகளையும், நிறுவனங்களின் இழப்புகளையும் உள்ளடக்கினால் மொத்த இழப்பு மதிப்பீடு 10000 மில்லியன் ரூபாய்களைவிட அதிகமானதாகக் காணப்படும்

### வடக்கு முஸ்லிம்களின் மாவட்டரீதியான குடித்தொகை (1991ல்)

| மாவட்டம் | குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்த சனத்தொகை | விகிதம் |
|---|---|---|---|
| மன்னார் | 8,200 | 44936 | 26.1 |
| யாழ்ப்பாணம் | 4,000 | 23071 | 1.6 |
| வவுனியா | 1,800 | 8742 | 6.8 |
| முல்லைத்தீவு | 1,000 | 4906 | 4.7 |
| கிளிநொச்சி | 240 | 1212 | 0.6 |
| | 15240 | 82867 | |

மூலம்: 1981ம் ஆண்டின் இலங்கையின் குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரங்களுடன் வருடாந்த 3% வளர்ச்சியை உள்ளடக்கிய கணிப்பு

## இடம்பெயர்வும் கல்வியும்:

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் 25 சதவீதமானோரில் ஏறக்குறைய 17000 பேர் மாணவர்கள் ஆவார்கள். வடக்கிலே சொந்த ஊர்களில் சீர்கல்வியைக் கற்ற இந்த மாணவர்கள் இப்பொழுது அகதிமுகாம்களில் ஒதுக்கப்பட்டவர்களாக இருண்டு போய்விட்ட எதிர்காலக் கனவுகளை எண்ணி கலங்கி நிற்கின்றார்கள். முகாம்களில் ஒருவேளை அடுப்பை எரிப்பதற்காக பல மாணவர்கள் தமது கல்வியை கைவிட்டுவிட்டு கூலி வேலை செய்கின்றனர். 16 வயதுக்கு குறைந்த மாணவர்கள் உப்புத்தளங்களிலும் விவசாயத்திலும் ஒருநாளைக்கு 20 ரூபாவை மட்டும் தரக்கூடிய ஆனால் கடினமான வேலை வாங்கப்படும் தொழில்களைச் செய்கின்றனர்.

அகதி மாணவர்கள் கல்வியில் எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் சில முயற்சிகளை எடுத்து வருகின்ற போதும் அவை கையாலாகாத முயற்சிகளாகவே இருந்து வருகின்றன. அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றி பெறாமல் இருப்பதற்கான காரணங்கள் பின்வருவனவாகக் காணப்படுகின்றன.

(1) முகாம்கள் தூரமான இடங்களில் அமைந்துள்ளதால் பாடசாலையை அடைவதற்காக மாணவர்கள் மூன்று நான்கு மைல்களைக் கடுமையான வெய்யிலில் நடந்து செல்ல வேண்டியதாக உள்ளது.

(2) பாடசாலைச் சீருடை, புத்தகம், பயிற்சிப் புத்தகம், மற்றும் ஏனைய உபகரணங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை

இடம் பெயர்ந்த மாணவர்கள் சாதாரண பாடசாலை நேரத்தில் வகுப்புகள் நடத்தப்படாமல் பின்நேர பாடசாலை நடத்தப்படுகிறது. மூன்று மணித்தியாலங்கள் மட்டும் நடக்கும் இந்த வகுப்புகள் சாதாரண பாடசாலை நேரத்தில் இருந்து 50% குறைவானதாகும்.

(4) ஆசிரியர் பற்றாக்குறையும், திறமையற்ற போதனை முறைகளும்

(5) பாடசாலை வாழ்க்கையில் கல்வி தவிர்ந்த ஏனைய துறைகளில் இடம்பெயர்ந்த மாணவர்கள் பங்கு பற்ற முடியாமை

(6) பிறப்புச்சாட்சி பத்திரம், கல்வி பெறு பேற்றுச் சான்றிதழ்கள் இன்மையால் எதிநோக்கும் தடைகள்

7) நிரந்தர மாணவர்களாலும் ஊர்வாசிகளாலும் இடம்பெயர்ந்த மாணவர்களின மீது காட்டப்படும் காழ்ப்புணர்ச்சி

இடம்பெயர்ந்த மாணவர்களில் 80%க்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாமல் தவித்தனர். வடக்கு கிழக்கிலுள்ள பல்கலைக்கழகங்களில் கல்விகற்ற இவர்கள் கடுமையான முயற்சிகளின் பின்னால் கொழும்பு, பேராதனைப் பல்கலைக் கழகங்களில் "இடம்பெயர்ந்த மாணவர்கள்" என்ற முத்திரையுடன் தற்காலிகமாக கல்வியைத் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம்மாணவர்களின்பரீட்சை பெறுபேறுகள் யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக் கழகங்களுக்கு சென்று திரும்பி வர வேண்டியிருப்பதால் வருடக்கணக்கில் பெறுபேறுகளுக்காக காத்துக் கிடக்க வேண்டியுள்ளது. நாட்டின் ஏனைய பல்கலைக் கழகங்களில் பயிலும் இடம்பெயர்ந்த மாணவர்கள் பணரீதியான, உளரீதியான ஏனைய சமூகப் பிரச்சினைகளால் சூழப்பட்டு மிகுந்த கஷ்டங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

## இடம்பெயர்ந்த வடமாகாண முஸ்லிம்களால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள்

(1) இடம் பெயர்வினால் ஏற்பட்ட அதிர்ச்சி கவலைகள்.

(2) போதிய உணவின்மையும், போசாக்கற்ற உணவுகளும்

(3) வசதி குறைந்த (மனிதாபிமானமற்ற) அமைப்புக் கொண்ட முகாம்கள்

(4) வீட்டு, நிலச் சுவாந்தர்களின் தொந்தரவுகள்

(5) மூளைக்காய்ச்சல், கண்நோய், சொறி போன்ற தொற்று நோய்கள்

(6) கல்வி, பாடசாலை செல்வதிலுள்ள பிரச்சினைகள்

(7) கைக்குழந்தைகளையும் சிறுபிள்ளைகளையும் பராமரிப்பதில் உள்ள பிரச்சினைகள்

(8) அரச நிவாரணம் தொடர்பாக அரசு கையாளும் கடுமையான சட்டங்களும் அரச அதிகாரிகளின் அகங்காரப் போக்கும்

(9) முகாம்கள் தீப்பற்றி எரிதல், வெள்ளப் பெருக்கு என்பனவற்றால் மீண்டும் அகதிகளாதல்.

## அரச நிவாரணம்

அரசாங்கத்தினால் ஐந்து பேர் கொண்ட குடும்பமொன்றுக்கான நிவாரணமாக ரூபா 1260 பெறுமதியான உலர் உணவுகள் வழங்கப்படுகின்றது. அதாவது குடும்பத்தில் ஒரு நபருக்கு வழங்கப்படும் நிவாரணம் ஒருநாளைக்கு 8 ரூபா 40 சதமாகும். அதுவும் பொருட்களாகவே வழங்கப்படுகின்றது. இச்சிறுதொகை நிவாரணத்தை வைத்துக் கொண்டு ஒருவர் எவ்வாறு வாழ முடியும்? இன்று சாதாரணமாக 5 பேர் கொண்ட குடும்பமொன்றுக்கு ஒரு மாதத்துக்கான செலவுக்கு 4000 ரூபாவுக்கு மேற்பட்ட தொகை தேவைப்படுகின்றது. வடக்கிலிருந்து வந்த முஸ்லிம்கள் அனைத்தையும் இழந்து வந்தபடியால் தொழில் செய்யவும் பணரீதியான சக்தியைக் கொண்டவர்களாக இல்லை.

அரசு வழங்கும் நிவாரணம் பற்றாக்குறையாக உள்ள நிலையில் கூட்டுறவுக் கடைகளினால் நிவாரணத்தில் மேற்கொள்ளப்படும் மோசடிகள் சொல்லில் அடங்காது. கூடிய விலைகளில் தரம் குறைந்த பொருட்கள் நிவாரண முத்திரைக்கு வழங்கப்படுகின்றன. இவை பற்றியெல்லாம் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்ற நிலமையிலேயே உள்ளன.

ஒருபுறம் அரசின் அரைகுறை உதவி மறுபுறம் கூட்டுறவுக் கடைகளின் பகல் கொள்ளைகள் அரசோ வேறுயாருமோ இது பற்றியெல்லாம் கண்டு கொள்வதில்லை. இவ்வாறான நிகழ்வுகளினால் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் வட மாகாண முஸ்லிம்கள் இனிமேலும் அவற்றைத் தாங்கக் கூடிய சக்தியைக் கொண்டுள்ளார்களா என்றால் இல்லை யென்றே சொல்ல வேண்டும்.

## வடமாகாண முஸ்லிம்களின் உடனடித் தேவைகள்:

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு மூன்றரை வருடங்கள் கடந்துவிட்டன. இதுவரை முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பான ஒரு நல்ல கருத்தோ அல்லது ஆக்கபூர்வமான திட்டமொன்றோ முன்வைக்கப் படவுமில்லை. இம்முஸ்லிம்கள் இன்னும் எவ்வளவு காலம்தான் அகதி முகாம்களில் முடங்கிக் கிடப்பது. என்று எண்ணி வருந்தியவர்களாக உள்ளனர். பெண்கள் திருமண

வயதையடைந்தும் வசதியின்றி திருமணம் முடிக்க முடியாமல் ஏங்கித்தவிக்கின்றனர். இப் பிரச்சினைக்கான தீர்வுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**1. இடம் பெயர்ந்தவர்கள் மீண்டும் தம்மிடங்களுக்குச் செல்வது:**

மேற் கூறப்பட்ட தீர்வைப் பொறுத்தவரை இலங்கையில் தற்போது நிலவும் உள்நாட்டு யுத்தம் முடிவடையும்வரை முஸ்லிம்கள் வடக்குக்குச் சென்று குடியேற முடியாது. அவ்வாறு பிரச்சினை முடிவடைந்தாலும் வடக்கு முஸ்லிம்கள் எல்லோருமே சென்று மீளக்குடியேறுவார்கள் என்பது நினைத்தும் பார்க்க முடியாத ஒன்று. இது பாதுகாப்புடனும் தன்மானத்துடனும் தொடர்புபட்ட பிரச்சினையாகும்.

**2. இடம் பெயர்ந்தவர்களுக்கு அவரவர் விரும்பும் பிரதேசத்தில் குடியேற்றத் திட்டங்களை அமைத்துக் கொடுப்பது:**

சமாதானத்தீர்வு ஒன்று ஏற்படும் வரையிலாவது மக்களுக்குப் பயனளிக்கக் கூடியதாக இருக்கும். அதேநேரத்தில் அவர்களது சொந்தத் தாயக மண்ணை இழந்து விடுவோமோ என்ற சந்தேகம் தற்போது அவர்கள் வாழும் இடங்களில் எதிர் நோக்கும் பொருளாதார கலாச்சாரத் தாக்கங்கள் என்பதால் ஏற்படும் பாதிப்புக்கள் இவைகளையிட்டு இவர்களிடத்தில் ஏற்பட்டிருக்கும் நியாயமான அச்சங்கள் தீர்க்கப்பட்டு இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**3. வடமாகாண முஸ்லிம்களுக்கு நட்டஈடுகளை வழங்குவது:**

அரசானது சாதாரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்கு மீளக்குடியமர்தல்நிவாரணம், தொழில் நிவாரணம் என சிறு தொகைகளை வழங்குகின்றது. ஆனால் வடமாகாண முஸ்லிம்களின் நிலை வேறு. அவர்களை அனைத்தும் இழந்து நிர்க்கதியாக வெளியேறியவர்கள். எனவே அவர்கள் இந்தச் சிறுதொகை நிவாரணங்களை ஏற்க முன் வரமாட்டார்கள். எனவே, நட்ட ஈடானது அவரவர் இழப்புக்களுக்கும் வசதிக்கும் தக்கவாறு வழங்கப்படல் வேண்டும். இந்த வகையில் அரசானது தொழில் நிவாரணம், இழப்பு நிவாரணம் ஆகியவற்றுக்கு பெருமளவில் கொடுப்பனவுகளைச் செய்யவேண்டும்.

(ஆனால் அரசு நாட்டின் பிரச்சினையை இழுத்தடிப்பது போல் முஸ்லிம்களின் இந்தக் கோரிக்கைகளையும் தட்டிக்கழிக்கும் என்பதில் ஐயமில்லை.) எனவே அரசானது உடனடித் தேவையாக வடபுலத்திலிருந்து இடம் பெயர்ந்த ஒவ்வொரு முஸ்லிம் குடும்பத்துக்கும் தொழில் செய்ய ரூபா 50000 க்கும் குறையாத ஒரு நன்கொடையை அவசர நிவாரணமாக வழங்க வேண்டும். அவ்வாறு இல்லா விட்டால் ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாத ஒரு கடன் தொகை வட்டியின்றி வழங்கப்படல் வேண்டும்.

இவ்வருடம் நவம்பரில் அரசு ஜனாதிபதித் தேர்தலையும் நடத்த உத்தேசித்துள்ளது. அதற்கு முன்பாக அரசு வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைக்குரிய ஒரு ஆக்கபூர்வமான தீர்வை முன்வைக்க வேண்டும் என்பது வட மாகாண முஸ்லிம்களினதும் நாட்டின் ஏனைய பகுதி முஸ்லிம்களினதும் அவாவாகும்.

எனவே வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் ஓர் தேசியப்பிரச்சினையாகும். அரசாங்கமே இதற்கான ஒரு சரியான தீர்வைக் காண வேண்டும். இருந்த போதிலும் வடக்கிலுள்ள அரசியல் சூழ்நிலையோடு இப்பிரச்சினை தொடர்புபட்டது. மேலும் வடமாகாண முஸ்லிம்கள் ஒரு சிறு தொகையினராக இருக்கின்றனர். எனவே அரசியல் ரீதியில் இவர்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கத் தேவையில்லை என்றும் அரசு கருதுகின்றது போலும். எனவே வடமாகாண முஸ்லிம்களின் அவலச் சிறை வாழ்வுக்கு முடிவு வேண்டும். அவர்கள் மீது பூட்டப்பட்டுள்ள அடிமை விலங்கு உடைத் தெறியப்பட வேண்டும். அவர்களும் ஏனைய பகுதி முஸ்லிம்களைப் போன்று கண்ணியமாக உரிமைகளுடன் வாழ வேண்டும். எனவே இப்பிரச்சினைக்கு பரிகாரம் காணவேண்டியது முஸ்லிம்கள் அனைவரதும் கடமையாகும். எனவே முஸ்லிம்கள் அனைவரும் தமக்கிடையேயுள்ள அரசியல், வர்க்க, பொருளாதார பேதங்களை யெல்லாம் மறந்து உடனடியாக இப் பிரச்சினைக்குப் பரிகாரம் காணும் நன்முயற்சியில் இறங்க வேண்டும். தீர்வு ஒன்று காணப்படாத விடத்து, இப்பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்து சிக்கலாகவே மாறும். எனவே முஸ்லிம்களின் வரலாற்றில் ஒரு கறையாகக் காணப்படும் இந்த அகதிகளின் பிரச்சினை முஸ்லிம்கள் ஒன்றுபட்டு குரல் கொடுப்பதன் மூலமே துடைத் தெறியலாம் என்பதை ஒவ்வொரு வரும் உணர்ந்து செயற்படுவோமாக! எல்லாம் வல்ல இறைவன் நாட்டின் பிரச்சினையைத் தீர்த்து முஸ்லிம்களுக்கு ஒற்றுமையான கண்ணியமான வாழ்வை அளிப்பானாக !

ஆமீன்.

# வாழ்வு மறுக்கப்பட்ட மூன்றாண்டுகள்

**(வடக்கு முஸ்லிம்கள் தமது இருப்பிடங்களிலிருந்து பலவந்தமாக விரட்டப்பட்ட மூன்றாண்டுகள் நினைவாக கனடாவிலுள்ள தேடகம் குழுவினரும் மற்றும் சில அமைப்புக்களும் கூட்டாக வெளியிட்ட அறிக்கை )**

இலங்கை சுதந்திரம் அடைந்த காலங்களிலிருந்தே சிறுபான்மைத் தேசிய இனங்கள் பௌத்த சிங்கள் இனவாத ஒடுக்கு முறைகளுக்கு இலக்காயின. மேலும், இலங்கை முஸ்லிம்கள் பௌத்த சிங்கள் இனவாதங்களால் மட்டுமன்றி தமிழ்த் தேசியத் தலைவர்களாலும் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர். எண்பதுகளின் நடுப்பகுதிகளில் ஆரம்பமான முஸ்லிம் மக்கள் மீதான வன்முறைகளில் பிரதான தமிழ் இயக்கங்கள் எல்லாமே பங்கெடுத்துக் கொண்டன. இத்தகைய தமிழ் தேசியவாதத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடே முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து வெளியேற்றப்பட்டமை. சொந்த நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு மூன்று வருடங்கள் முடிவடைந்தும் அவர்கள் மீளக்குடியமர்வதற்கான எந்த நடவடிக்கையும் சம்பந்தப்பட்டவர்களால் மேற்கொள்ளப்படவில்லை. வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் புத்தளத்திலும், கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள அகதி முகாம்களிலேயே தொடர்ந்தும் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அகதி வாழ்வின் அவலம், பசி, பட்டினி, நோய், நிச்சயமற்ற எதிர்காலம் இவையே முஸ்லிம் மக்களின் அன்றாட வாழ்வாகி விட்டது. இவற்றிலிருந்து மீள்வதற்கான ஒரே தீர்வு எந்த வித நிபந்தனையுமின்றி முஸ்லிம் மக்கள் அவர்களின் சொந்த நிலங்களிலே மீளக்குடியமர்வதே! தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்வித நிபந்தனை யுமின்றி முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்வதை அங்கீகரிக்க வேண்டும். இன்னுமொரு தேசிய இனத்தை ஒடுக்கும் எந்தத் தேசிய இனமும் தனது தேசிய விடுதலையினைப் பெற்றுக் கொள்ள முடியாது. இதனடிப்படையில் பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகப் போராடும் நாமே தமிழ்த் தேசியவாதத்தின் சரியான நிலைகளை வெளிக்கொணரும் முகமாக முஸ்லிம் மக்களின் அரசியல், சமூக, வாழ்நிலை உரிமைகளுக்கு குரல் கொடுப்பது அவசியமாகிறது. அன்றுதொட்டு தமிழ்த் தேசியத் தலைமைகள் முஸ்லிம் மக்களின் தனித்துவமான மதம் , கலாசாரம், அரசியல் என்பவற்றில் மேலாதிக்கம் செய்து வந்ததை வன்மையாகக் கண்டிக்க வேண்டியவர்களாகின்றோம். பௌத்த சிங்கள் அரசு இலங்கையின் இனப் பிரச்சினையில் முஸ்லிம் மக்களை பகடைக்காய்களாக்கி தமிழ் முஸ்லிம் மக்களிடையே குரோதத்தை வளர்ப்பதற்கு எதிராகவும் இலங்கையின் தேசிய இனங்களின் மீதான ஒடுக்கு முறை யுத்தத்துக்கு எதிராகவும், தமிழ்முஸ்லிம் மக்களிடையே ஐக்கியத்துக்கான முன் நிபந்தனைகளை ஏற்படுத்தக் குரல் கொடுப்போம்.

அழைப்பாளர்கள்: **விழிப்பு.C.D.S.L, சரிநிகர், தாயகம், தமிழோசை, பொதிகை, புன்னகை மலர், ரோஜா, தமிழர் வகைதுறைவள நிலையம், காலம் நான்காவது பரிமாணம், இளைய நிலா.**

> "இன்னொரு நாட்டை ஒடுக்குகின்ற எந்த நாடும் தனது விலங்குகளைத் தானே சூடிக் கொள்கிறது"
>
> மார்க்ஸ்

நன்றி : தேடல்

# எருக்கலம்பிட்டி கிளம்புகின்றது

அல்லாஹ்த ஆலாவின் இயற்கை யான கொடை களுக்கு எந்த வகையிலும் குறை வில்லாமல், சகல துறைகளிலும் சிறந்த வளங்களைக் கொண்டிருந்த ஊர்தான் எருக்கலம்பிட்டி.

1990-10-24 அன்று எருக்கலம் பிட்டியே சோகத்தில் மூழ்கியிருந்தது. அடுத்த நிமிடம் என்ன நடக்குமென்று தெரியாமல் மக்கள் புலம்பினார்கள். அழுகைக்குக் குறைவேயில்லை.

இனத்துவேசம் கொண்ட பயங்கர வாதிகள் ஆக்கிரமிக்காத வீடுகளேயில்லை. கொள்ளையடித்த நகைகளுக்கும் பணத்துக்கும் கணக்கேயில்லை. கொள்ளை யடிக்கப்பட்ட வீடுகளில் அந்த இரக்கமற்ற வர்கள் காலாகாலமாக தங்கள் மனதில் புதைத்து வைத்திருந்த சொல்லம்புகளை வெளிப்படையாகக் கொட்டினார்கள். "இது தமிழரின் மண், இங்கு முஸ்லிம்கள் வாழ முடியாது. கிழக்கில் தமிழரின் மீது ஜிகாத் மிகவும் மோசமான முறையில் நடந்துள்ளார்கள். விடிந்ததும் ஊரைவிட்டு வெளியேறுங்கள். இங்கு நடந்தவைகளை உங்கள் அஷ்ரபிடம் சொல்லுங்கள்" என்றார்கள்.

அடுத்த நாள் ஊரின் எல்லாப் பகுதிகளிலும் ஒலிபெருக்கி மூலம் தங்கள் தலைமையகம் முஸ்லிம் மக்களுக்கு விடுத்துள்ள அறிவித்தல் என்று பின்வருமாறு சொன்னார்கள். "மன்னார் மாவட்டத்திலுள்ள சகல முஸ்லிம் மக்களும் 28-10-1990 அன்றுள் வெளியேற வேண்டும். வெளியேறுவதற்கான விண்ணப்பப்படிவங்களை எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம். போகும் போது காசு ரொக்கமாக 5000ரூபாவுக்கும், நகை 2 பவுணுக்கும் அதிகமாகக் கொண்டு செல்லக் கூடாது." என்ற உத்தரவையும் பிறப்பித்தார்கள்.

அடுத்த நிமிடம் முஸ்லிம்கள் ஒப்பாரியுடன் அல்லோலகல்லோலப்படுகிறார்கள். ஒவ்வொருவருடைய முகத்திலும் மரணத்தின் பயம் குடியேறியது. முஸ்லிம்கள் தங்கள் மூதாதையர் பரம்பரைபரம்பரையாக வாழ்ந்த இடத்தை விட்டுச் செல்வதற்காக இன வெறிகொண்ட பயங்கரவாத அமைப்பின் அலுவலகத்தில் வெளியேறுவதற்குரிய அனுமதியைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

கடும் மழையின் மத்தியில் தங்களுக்கு எடுத்துச் செல்ல முடிந்த பொருட்களுடன் கால் நடையாகவும், வாகனங்கள் மூலமும் அழுதவண்ணம் கடற்கரையை நோக்கிச் செல்கிறார்கள். வீதியோரங்களில் பொருட்கள் பெறுமதியின்றி காணப்படுகின்றன. கடற்கரையிலும் பயங்கரவாதிகளின் மீள் பரிசோதனைக்கு உள்ளாகிறார்கள்.

பின்னர் பல கஷ்டங்களைத் தாண்டி வியட்னாமியப் படகு அகதிகளைப் போல் புதுத்தாயகமான கற்பிட்டி என்னும் இடத்தை வந்தடைந்தார்கள். இப்போது அம் முஸ்லிம்களின் எதிர்காலமே கேள்விக் குறியாகக் காணப்படுகின்றது.

**எம்.எச்.மர்சூக்**
**இடம் பெயர்ந்தோர் குடியிருப்பு**
**பள்ளிவாசல்துறை**
**புத்தளம்**

**அன்புடன் ....**
அகதி இதழ் தங்களுக்கு கிடைப்பதில்லையெனப் பலரும் கவலை தெரிவித்துள்ளனர். வட மாகாண அகதிகள் வாழும் பல பகுதிகளுக்கு 'அகதி' இன்னும் சென்றடைய வில்லை. காரணம், அங்கு எமக்கு முற்பணம் தந்து 'அகதி' இதழ்களைப் பெறும் முகவர்கள் இல்லை. எனவே 'அகதி' இதழ் கிடைக்கப் பெறாத பகுதிகளைச் சேர்ந்த வாசகர்களில் எவராவது முற்பணம் செலுத்த முன்வந்து அகதியின் வளர்ச்சியில் அக்கறை காட்டுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
'அகதி' அகதிகளாலேயே நடத்தப்படும் சஞ்சிகை. அது அகதியாகி விடாமல் இருக்க வாசகர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

# நல்லை நூல்' தரும் யாழ் முஸ்லிம்கள் பற்றிய வரலாற்று உண்மைகள்

1987ல் கந்தையா குணராசா B.A.HONS (Cey) (செங்கை ஆழியான்) என்பவரால் யாழ்ப்பாண இராச்சியத் தினதும் நல்லூர்க் கந்தசுவாமிக்கோயி லினதும் வரலாற்றைக் கூறும் **"நல்லை நகர் நூல்"** என்ற ஆய்வு நூல் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது. அந்நூலின் முன்னுரையில் அதன் ஆசிரியர் "கந்சாமி கோயிலினது உண்மை வரலாற்றை ஆதாரங்களோடு புலப்படுத்தும் நூலாக இதனை ஆக்கியுள்ளேன். அதனால் மனதிற்கு சங்கடம் தரும் கசப்பான சில உண்மை களை ஜீரணிக்க வேண்டிய இடர்பாட்டை இந்நூலைப் படிக்கும் பெருமக்கள் அடைவார்களாயின் அது என் தவறன்று. வரலாற்றில் மறைக்கப்படக் கூடாத மெய்மையை முன்வைக்க நினைக்கும் வரலாற்று மாணவன் ஒருவனுக்குள்ள உரிமையைப் பூரணமாக எடுத்துக் கொண்டதன் விளைவே, கசப்பான உண்மைகளை ஜீரணிக்க வேணடிய சங்கடத்தை உங்களுக்கு ஏற்படுத்தி யுள்ளது" என்று கூறுகிறார்.

மேலும் அவர் யாழ்ப்பாண இராச்சியத்தினது வரலாறு,உண்மையில் நல்லூர்க்கந்தசுவாமிக் கோயிலினது வரலாற்றுடன் பின்னிப்பிணைந்துள்ளது. இந்த ஆய்வு நூலில் நான் நிறுவ முயன் றுள்ள கருதுகோள்கள் பின்வருவனவாகும். (என எழு விடயங்களைக் கூறுகிறார். அதில்)

6. குருக்கள் வளவில் **(திருக்கோயில் அமைந்துள்ள இடம்)** சர்வமதத் துறவியான சிக்கந்தர் என்ற யோகிக்கு முஸ்லிம்களால் அமைத்து வழிபட்ட சமாதி ஒன்று இருந்தது. அருகில் மசூதி ஒன்றுமிருந்தது.

7. கி.பி.1949ம் ஆண்டில் கிருஷ்ணையர் சுப்பையரும் தொன்யுவான் மாப்பாணரும் சேர்ந்து அரச அனுமதியுடன் குருக்கள் வளவில், முதலாவது ஆலயம் இருந்த இன்றைய இடத்தில், இன்றைய கோயிலை முஸ்லிம்களை அகற்றிய பின்னர் அமைத் தனர்" என்று குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

மேலும் இந்நூலில் 31ம் பக்கத்தில் **"முஸ்லிம்களின் குடியேற்றம், யார் இந்த யோகியார்?"** என்ற தலைப்புக்களின் கீழ்

"அக்கால வேளையில் யாழ்ப்பாண மண்ணில் துறவிகள் நடமாடினர். தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாண இராச்சியமூடாக சிவனொலிபாத மலைக்கும், கதிர்காமத்துக்கும் தலையாத்திரையை யோகிகள் மேற்கொண்டுள்ளார்கள். யோகிகள் வடிவில் கண்டி மன்னனுக்குதவ, போர் வீரர்கள் தென்னிந்தியாவிலிருந்து செல்வ தாகப் போர்த்துக்கேயர் சந்தேகப்பட்டிருக் கிறார்கள். எவ்வாறாயினும் நல்லூரில் யோகியர் ஒருவர் வாழ்ந்துள்ளார் என்பதில் ஐயமில்லை.

இவரது பெயர் சிக்கந்தர் என்பர். இவரை சைவ மக்களும், அக்காலத்தில் நல்லூரில் வாழ்ந்த முஸ்லிம் மக்களும் ஆதரித்துப் போற்றினர். இந்த இரு மதத்தவர்களுக்குமுரிய அறநெறிகளை அவர் நன்கு தெரிந்து வைத்திருந்த படியால் தான் இரு மத மக்களும் அவரை வழிபட்டனர். புராதன நல்லூர்த் தேவாலயம் அமைந்திருந்த குருக்கள் வளவில் அந்த யோகியார் உலாவினார். தன்னை நாடி வந்த மக்களுக்கு அறநெறி புகட்டினார். போர்த்துக்கேயருக்கும் தமிழ்ப்படை வீரர்களுக்குமிடையில், குருக்கள் வளவில் நிகழ்ந்த யுத்தத்தில் அந்த யோகியார் உயிரிழக்க நேர்ந்தது. குருக்கள் வளவின் சுற்றாடலில் அக்கால வேளையில் முஸ்லிம்கள் வாழ்ந்த மையால், அவர்களால் நன்கு மதிக்கப்பட்ட அந்த யோகியாருக்கு ஒரு சமாதியைக் குருக்கள் வளவில் கட்டி வழிபாடியற்றி வருவாராயினர்."

## முஸ்லீம் குடியேற்றம்

அக்கால கட்டத்தில் இன்றைய நல்லூர்க் கந்த சுவாமிகோயில் அமைந் துள்ள குருக்கள் வளவு என்ற இடத்தில் முஸ்லிம்கள் குடியேறியிருந்தார்கள் என அறியப்படுகின்றது.

'அக்காலத்தில் கந்தசாய்பு என்பவனால் முகம்மது மார்க்கத்தவர் களாக்கப்பட்ட தமிழ் வம்சத்தவர்களான சில சோனகக் குடிகள் காயல்பட்டணம் முதலிய குடிகளிலிருந்து வந்து தென் மிருசுவில் என்ற ஊரில் குடியிருந்து சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டு வாள், முகாவில் என்னுமிடங்களிலுள்ள சந்தையில் வியாபாரம் பண்ணிக்கொண்டு தாங்களிருந்ததென மிருசுவிலுக்கு உசனென்று பேருமிட்டனர். சில காலம் அவ்விடத்திலிருந்து அவ்விடம் வசதிப்படாததினால் அந்தச் சோனகக் குடிகள் அவ்விடத்தை விட்டு நல்லூரில் கந்தசுவாமிக் கோயிலிருந்த இடத்தில் குடியிருந்தார்கள். (யாழ்ப்பாண வைபவமாலை)

சோனகர் உசனின்று மகன்று சோனகன் புலவில் சிறிதுகாலம் வைகி, அதுவும் வாய்ப்பாகாமையால், இப்போது நல்லூர்க்கந்தசுவாமிக்கோயிலிருக்கும் இடத்திற்கு மேல் பாகத்தில் குடி கொண்டார்கள். அங்கே ஒரு பள்ளிவாசலும் கட்டினார்கள். (ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை 1933) கோயிலின் அயலிலே மேற்குத் திசையாக சிலகாலத்திற்கு முன் மசூதியொன்றிருந்ததாகத் தெரிகிறது. (வி.சிவசாமி 1976) கி.பி.1560ஆம் ஆண்டு கொந்ஸ்தாந்திஹோடி பிறகன்ஸா யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்த போது, பறங்கியருக்கெதிராக தமிழர் படையிலுள்ள வடக்கரும், சோனகரும் போராடினர்.(ஞானப்பிரகாசர்1928) கி.பி. 1591ல் யாழ்ப்பாணத்தை வெற்றிகொண்ட அந்திரே பூர்த்தாடு, "மீண்டும் கலகம் விளைவிக்கக் கூடியவர்களென எண்ணமிட்ட எண்ணூறு வடக்கரையும் சில சோனகரையும் சிரச்சேதம் செய்துள்ளான்." (செ.இராசநாயகம் 1933) மேலும் 'கரையிறங்கிய பறங்கிப்படை, இவ்விடத் திற்கண்மை யிலிருந்த சோனகரின் வர்த்தக சாலைகளைக் கண்டு, அவைகளுட் புகுந்து 10000 கண்டி நெல்லையும், 400 கண்டி அரிசியையும் வாரிக் கொண்டு போயினர்' (செ.இராசநாயகம் 1933) இவற்றிலிருந்து நல்லூரில் சில சோனகக் குடிகள் வசித்து வந்தனர் எனத்துணியலாம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்நூலின் 39ம் பக்கத்தில் **'மாப்பாண முதலியார்'** என்ற தலைப்பின் கீழ் வரும் மூன்றாவது பந்தியில்,

"கோயிலை மீளவும் அமைப்பதற்குரிய காணியில் முஸ்லிம்கள் குடியேறியிருந்தனர். 'சோனகர் அதிலே குடியிருந்ததால் கந்தசுவாமி கோயில் கட்டவரும் காலத்தில் தடையாயிருக்கு மென்று நினைத்துத் தமிழர் கூடி அவர்களை அவ்விடத்தை விட்டுப்புறப்படத் தெண்டித்துப்பார்த்தும் கூடாமற் போயிற்று.' அந்த நிலங்களுக்கு அதிக விலை தருவோம் எங்களுக்கு விற்று விடுங்கள் என்றுங் கேட்டுப் பார்த்தனர். சோனகர் அதற்குஞ் சம்மதிக்கவில்லை. யாதொரு இணக்கத்துக்கும் சோனகர் சம்மதியாது போனதினால் அந்தத் தமிழர் பன்றியிறைச் சியைக் கொண்டு போய், தண்ணீர் குடிக்கும் கிணறுகளில் போடுவித்தார்கள். பன்றியிறைச் சியைக் கண்டவுடன் அழுது புலம்பிப் பசிபட்டினி கிடந்து ஆற்றாமல் ஈற்றில் தமிழருடனே தங்கள் பெருநாட்களில் வந்து சமய வழிபாடு செய்யத் தடைபண்ணா திருப்பதற்கு ஒரு உடன்படிக்கை எழுதுவித்துக் கொண்டு, கிடைத்த விலையையும் வாங்கிக் கொண்டு போய் நாவாந்துறைக்குக் கிழக்குப்பக்கமாகக் குடியேறினார்கள்' என மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. முஸ்லிம்கள் நல்லூர்க் கந்தசுவாமிக் கோயிலிருக்கும் இடத்துக்கு மேற்பாகத்திலே குடி கொண்டார்கள். அங்கே ஒரு பள்ளிவாயலுங் கட்டினார்கள். அப்பொழுது முன் இடிபட்ட கந்தசுவாமிக் கோயிலை மீளவுங் கட்டுவதற்குத் தமிழர்கள் முயன்று சோனகரை அவ்விடத்திலின்றும் நீக்கித் தருமாறு ஒல்லாந்துத் தேசாதிபதிக்கு

விண்ணப்பம் செய்தார்கள். ஒல்லாந்து தேசாதிபதி அதற்கனுகூலஞ் செய்வதாகக் கூறியும் செய்யாது காலம் போக்கினான். அதுகண்டு தமிழர் சோனகரை அவ்விடத்தை விடும்படி கேட்டும் இரந்தும் பார்த்தார்கள். முடிவில் அந்நிலத்திற்குப் பெருவிலை தருவதாகவுங் கேட்டனர். சோனகர் அதற்கும் இசையாமை கண்டு தமிழர் ஒரு பன்றியைக் கொன்று அவர்களுக் கெல்லாம் பொது வாயிருந்த கிணற்றிலிட்டார்கள். அது கண்டு சோனகர் தங்கள் நிலத்தை விற்று விட்டு, நாவாந்துறைக்குக் கிழக்கேயுள்ள இடத்தை வாங்கிக் கொண்டு அங்கே குடியேறி னார்கள்' என ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை தனது யாழ்ப்பாணச்சரித்திரத்தில் கூறிச் செல்வார்.

ஆகவே, குருக்கள் வளவிலிருந்து வாழ்ந்த முஸ்லிம்கள் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டதன் பின்னரே, அவ்விடத்தில் கந்தசுவாமிக் கோயிலை 'நிறுவ முடிந்துள்ளது. குருக்கள் வளவில் சிக்கந்தர் என்ற யோகியாரின் சமாதியும் இஸ்லாமியப் பள்ளிவாசல் ஒன்றும் இருந்துள்ளன." என்று கூறியுள்ளார்.

**'பின்பு 45 ஆவது பக்கத்தில் இரண்டாவது பந்தியில்**

அக்கோயிலைப் பெருப்பித்துக் கட்டும் பொழுது, அங்கிருந்து இறந்து அடக்கம் பண்ணப்பட்ட ஒரு முஸ்லிம் பெரியாருடைய சமாதி அக்கோயிலின் உள்வீதிக்குள் அகப்பட்டமையால், அதையிட்டு முஸ்லிம்கள் கலகம் செய்தனர். பின்பு கோயில் மேற்கு வீதியில், வாயில் வைத்துச் சமாதியை அணுகி அவர்கள் வணங்கி வர இடங் கொடுத்ததால் கலகம் ஒருவாறு தணிந்தது. அதற்குச்சாட்சியாக அவ்வாயிற் கதவு இன்னுமிருப்பதும், அதனருகே வெளிப்புறம் பந்தாட்டுச் சில காலத்தின் முன்வரை தொழுகை நடத்தி வந்ததும் இதனை வற்புறுத்தும்' (செ.இராசநாயகம் :1935)என்று கூறியுள்ளர்.

**குறிப்பு: சமாதி வணக்கம் இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளது.**

## மீள் குடியேற்றம் பற்றி .....

**புனர் வாழ்வு புனரமைப்பு சமூகநலத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் கிறிஸ்டி சில்வா**

மீள்குடியேற்றம் என்று கூறப்படும் போது அது தற்காலிகமாக ஓர் இடத்திற்கு இடம் பெயர்ந்து மீண்டும் அவர்களது வீட்டில் குடியேறுவது அல்ல. இதனை அரச சார்பற்ற நிறுவனங்கள் நன்கு தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். உண்மையில் மீள்குடியேற்றம் என்பது வன்செயலால் பாதிக்கப்பட்டு தமது உடைமைகளை இழந்து அகதி முகாமில் வாழும் ஒரு குடும்பம் மீண்டும் தான் வாழ்ந்த பகுதியில் குடியேற்றப்படுவதுதான் மீள்குடியேற்றம் என்பதாகும்.

இத்தகைய மீள்குடியேற்ற நடவடிக்கைகளை அவசரகாலத்தில் நாம் மேற்கொள்ளக்கூடாது. அதன்படி அவசரக் காலத்தில் மேற்கொண்டு மீள்க்குடியேற்றம் தோல்வியடைந்து விட்டால் பின்னர் அகதிகள் மீள்குடியேற்றத்திற்கே உடன்பட மாட்டார்கள். எனவே இவ் விடயத்தில் நாம் நன்கு ஆலோசித்து திட்டமிட்டு செயற்பட வேண்டும்.

ஒரு பகுதியில் மீள் குடியேற்றம் இடம் பெற வேண்டுமானால் முதலில் அப்பகுதி பாதுகாப்புப் படையினரின் ஆலோசனை பெறப்பட்டு சீரமைக்கப்பட வேண்டும். அது பொதுமக்கள் வாழத் தகுந்த பகுதி என உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வேளையில் பிரதேச செயலாளர் மற்றும் அப்பகுதிக்குப் பொறுப்பான அரச சார்பற்ற நிறுவனம் என்பன ஒன்றிணைந்து அம்மக்களுக்கான அத்தியாவசியத் தேவைகளான குடியிருப்பு வசதி, சுகாதாரம், கல்வி வசதி மற்றும் அம்மக்களின் தொழில் வாய்ப்பு பற்றி நன்கு சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும்.

இதன் பின்னர் இக்குடியேற்றத்திற்கான அரச உதவிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் உடன் வழங்கக்கூடிய நிலையில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். குடியேறுபவருக்கு நிச்சயம் தொழில் வாய்ப்பு வழங்கப்படுதல் வேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்தவரை மீள்குடியேற்றம் இடம்பெறும் போது ஆறுமாத காலத்திற்கான நிவாரண உதவியினை நாம் வழங்குவோம். இதன் பின்னர் அத்தியவசிய உணவுகளின் நிவாரண உதவி நிறுத்தப்பட்டு விடும். இதன் பின்னர் மீளக் குடியேறிய அந்த மக்கள் பட்டினியால் வாடக்கூடாது. எனவே அவர்களுக்கு நிரந்தர வருமானம் தரக்கூடிய தொழில்களைத் தேடுவதற்கான உதவிகளை வழங்க வேண்டும்.

# அகதி நண்பனுக்கு ஒரு மடல்

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.**

அன்பின் நண்பனுக்கு!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

நான் நலம். உன் நலம் அறிய ஆவல்.

நண்பனே!

சென்ற முறை நான் உங்கள் இல்லம் வந்த போது என் உள்ளம் வேதனையின் விழிம்பிற்கே சென்று வந்தது. சூரிய, சந்திர ஒளியை எவ்வித வஞ்சமுமின்றி சல்லரித்து வீட்டிற்கு "சப்லை" செய்யும் அந்த ஓலை முகடு, காற்றுக்குக் கூட தடையாக இல்லாத குடிசை, மலர்ந்து மணம் பரப்ப வேண்டிய உன் இளைய தங்கையின் வாடி, வதங்கியமுகம், அழுக்குப்படிந்த ஆடை, உன்வீட்டுக்கடைக்குட்டியின்மெலிந்து, நலிவுற்ற உடல், ஆயிரம் ஏக்கங்களையும் எதிர்பார்ப்புக்களையும் முகத்தில் ஏந்தி நிற்கும் உன்மூத்த சகோதரி, அதிர்ச்சியையும், சோகத்தையும், எதிர்கால வாழ்க்கை பற்றிய நம்பிக்கையின்மையையும் குத்தகையெடுத்துள்ள உன்தாயின் முகம், உருக்குப் போன்றிருந்த உன் வாப்பாவின் உடல்உருக்குலைந்த நிலை இவையெல்லாம் என் உள்ளத்தை உறுத்திக் கொண்டே இருக்கின்றது.

நண்பா,

இருகால் மிருகங்களின் ஆண்மையற்ற கொடுமையின் எதிர் விளைவுகளை அனுபவித்து அயர்வுற்றிருக்கும் உன் குடும்ப, ஊராரின் ஒட்டுமொத்தமான இந்நிலைமைகளை விட வேறு சில எண்ணங்கள் என் உள்ளத்தில் ஒரு ஓரத்தில் முள்ளாய் உரசிக் கொண்டிருக்கின்றன. உனக்கு ஆறுதல் சொல்வதைவிட அவற்றைக் குறிப்பிடுவதே என் கடைமையெனக் கருதுகின்றேன்.

ஊரில் இருக்கும் போது கள்ளம் கபடமின்றி வெள்ளை வெளேர் என்றிருந்த உன் பிள்ளை உள்ளத்தில் சில குள்ளத்தனம் குடி கொண்டிருப்பதை என்னால் உணர முடிந்தது. உன் வார்த்தைகளில் சினிமா வாடையுடன் கலந்த சிகரெட் வாடையும் வீசியதையும் அறிய முடிந்தது. ஏன் உன் உள்ளத்தில் குடி கொண்டிருந்த நல்லெண்ணங்களையும், உன்னோடு உறவாடி வந்த நல்லறங்களையும், அகதியாக்கினாய்? சூழல் உன்னை மாற்றி விட்டதோ? சொல் நண்பனே சொல்.

ஆரம்பத்தில் உன் இல்லம் வந்த போது உன்னைப் பெற்றெடுத்த, என்னைப் பெற்றிடாத எங்கள் தாயிடமும், சகோதரியிடமும் நாண உணர்வு மேலோங்கியிருக்கக் கண்டேன். வீட்டிற்குள்ளேயும் தலை தழுவியிருக்கும் முக்காடு கண்டேன். அந்த முக்காடு எக்காடு சென்றது? சொல் நன்பா' சூழல் தாக்கத்தால், சனநெரிசலான வாழ்க்கை முறையால் நல்ல பண்புகளையும், நாண உணர்வுகளையும் நீங்கள் அகதியாக்கி விட்டீர்களே! இது நியாயமா?

ஆரம்பத்தில் உன் வீடு வந்த போது அந்தியானதும் அருள் மறை ஓதி, பாடப்புத்தகத்தைத் திறந்த உன்னையும், உன்சகோதர சகோதரிகளையும் கண்டேன். ஆனால் அந்த நற்பழக்கத்தை அந்நியமாக்கி அந்தியானதும் அரட்டையும் வீட்டு வேலையும் பின்னர் குறட்டையும் என்று 'டைம்டேபிள்' போட்டு விட்ட உங்களைத்தான் என்னால் காண முடிந்தது.கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வத்தையும், அருள் மறை ஓதும் ஒழுங்கையும் ஒதுக்கித்தள்ளி அகதியாக்கி விட்டீர்களே! இது நியாயமா?

ஆரம்பத்தில் உங்கள் ஊர் வந்த போது பள்ளித்திண்ணையில் தோழர்களாகி விட்ட முதியோர் கண்டேன். பள்ளித்திடலையே மைதானமாக்கிய சிறுவர் கண்டேன். அதான் ஒலியுடனே பள்ளி நோக்கி ஓடிய இளைஞர் கண்டேன். இன்று அந்நிலையில்லையே. பள்ளியை ஓரங்கட்டி அகதியாக்கியது எவ்வகையில் நியாயமாகும்? சொல் நண்பனே சொல்.

அன்று பலஸ்தீனத்தில் அகதியாக்கப்பட்ட முஸ்லிம்களிடம் இழந்த இடத்தை மீண்டும் பெற வேண்டுமென்ற வைராக்கியம், எம்மை ஒடுக்கியவர்களை அடக்குமளவுக்கு ஓங்கி வளர வேண்டுமென்ற இலட்சியத்தாகம், அல்லாஹ் எம்மைச் சோதிக்கிறான், எனவே நாம் எம்மை நெறிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற மார்க்க உணர்வு மிகைத்திருந்தன.

இன்று நீங்கள் எதிர்பார்க்காதவண்ணம் நடந்த அராஜகத்தின் பின் பண்பாடுகள், இனிய பழக்க வழக்கங்கள், பாச உணர்வுகள், மார்க்க உணர்வுகள் எல்லாம் மங்கி கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து செல்வது கண்டு என் உள்ளம் உருகுகின்றது.

எனவே, நண்பனே'இஸ்லாம் கூறும் வாழ்க்கை நெறியைப் பேணி சீர்குலைந்து செல்லும் எனதும் உங்களதும் சகோதரர்களின் மார்க்க புறம்பான சமூக நடவடிக்கைகளை மாற்றி எதிர் காலத்தை ஒளிமயமாக்குவதை இலட்சியமாகக் கொண்டு உள உறுதியுடன் செயல்பட வேண்டியுள்ளது. அன்றாடம் உழைத்து வயிற்றுப் பசியைப் போக்கிக் கொண்டால், போதுமென்ற மனநிலையை நீக்கி ஆன்மீகப்பசிக்கும், உடல் வலிமைக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டியுள்ளது. எதிர்காலம் இருள் சூழ்ந்தது. விளக்கேற்றும் தேவையுள்ளது. சிந்திப்பாயா?'

என் வார்த்தைகள் எதுவும் உன்னை ரணப்படுத்தியிருந்தால் நிச்சயம் நீ மன்னிப்பாய் என்பதை அறிவேன். உன் மடல் கண்டு தொடர்வேன்.

வஸ்ஸலாம்

**இவன்**

**என்றும் உன் நண்பன்.**

**எஸ்.எச்.எம். இஸ்மாயில் (ஸலபி)**

# சிறையிடப்பட்ட உணர்வுகள்

நண்பா! ஊரார் தாள்வாரத்தில் ஒதுங்கிக்கிடக்கும் எம் அகதிச் சமூகம் பற்றி சிந்திப்பது யார்?... சிந்தித்துப்பார் உன்தாய்க்குச் சொல்.

என் அன்புத்தாயே!

ஆராரோ ஆரிவரோ
ஆரிவரோ ஆராரோ
ஆரடித்து நீயழுதாய்
அடித்தாரை சொல்லியழு

என என்னைத் தூங்க வைக்க நீ தாலாட்டியது போதும். இனிமேலும் இந்த புளித்துப் போன தாலாட்டைப்பாடாதே தாயே! நீ என்னைப் பிரசவிப்பதற்காக முகாமிற்குள் முகாரிட்டுக் கொண்டிருந்த போது, ஆ..ஓ..!. குடிசை பற்றி எரிய நீ எவ்வளவு வேதனையுடன் அயல் வீட்டிற்குள் ஓடி வந்து என்னைப் பிரசவித்தாய். இக்கோரக்காட்சியை கண்ணெதிரே கொண்டுவா தாயே! உன் உடலிலும் உன் அன்பு மகள் உடலிலும் ஒரே நேரத்தில் ஏறிய வெள்ளைச் சாரியை கண்ணோட்டமிடு. பால் நிறச்சட்டையுடன் பாடசாலை செல்ல வேண்டிய உன் அன்புக் குழந்தைகள் பழைய உடையுடன் பழஞ்சோறும் கரத்தில் எடுத்துக் கொண்டு தோட்டம் தோட்டமாய் அலையும் காட்சி கண்டதுதானே!...

இதன் பின்னராவது:-

**அன்பான ஆண்மகனே**
**பூமியிலே உன் எதிரி**
**எத்தனை எத்தனையோ**
**கண்ணே நீ கண்விழி**

என மாற்றிக்கொள் தாயே! வானத்திலே நிலா வந்தது. பூமியிலே வேதாளம் எழும்பியது. என்ற உங்கள் பண்டையக் காலக் கதைகளைத் தூரத்துரத்தி விட்டு, அலி(ரலி)யின் வீரக்காவியங்களையும், காலித்(ரலி)யின் யுத்த வன்மையையும் கதையாய்க் கூறி எம்மை உணரச்செய் தாயே.

நண்பா! இப்போது திரும்பிப்பார் பாசிசத்துடன் சியோனிசம் தலைக்கேறிய வெறியர்களால்தான் நீயும் உன் சமூகமும் அடிக்கடி பற்றிக் கொள்ளும் அகதி முகாமிற்குள் தள்ளி விடப்பட்டிருக்கிறீர்கள்.

இதற்குப்பலமற்ற அரசு மாத்திரம் காரணமல்ல. புத்துணர்வு பெறாத நீயும் நானும் தான் துணைபோகிறோம். வெள்ளம் தலைக்கு மேல் வந்தும் கூட விழித்துக் கொள்ளவில்லை. இதுதான் நாம் செய்த பாரிய தவறு.

நண்பா!... உன் குழந்தையின் எதிர் காலத்தை நினைத்துப்பார். உன் சிந்தனையைக் கூராக்கிக் கொள். ஒரு தேங்காய் தன்னை அழித்துக் கொள்ளாதவரை ஒரு மரத்தையோ அதன் மூலம் பல தேங்காய்களையோ ஒரு போதும் பெற முடியாது. இல்லையா?.... உனக்காக சமூகம் என்ன செய்தது எனப்பார்க்காதே. நீ சமூகத்துக்கு என்ன செய்தாய் என அடிக்கடி உள்ளத்தைக் கேள். இன்னும் இந்த ஓலைக் குடிசையில் வாழ வேண்டுமென்ற ஆவல் தானா? நான் என் தாயகத்தில் வாழ வேண்டும் அதற்காக வேண்டியதைச் செய்யப் போகிறேன் என தயாராகின்றாயா?...

தந்திரமிக்க நரிகள் அடிக்கடி அகதி முகாமிற்குள் ஊளையிடும் சத்தம் கேட்கிறது. இதுவரை கண்ணுக்கெட்டாத தூரத்தில் இருந்தவை ஏன் வந்தன? ஆம் அவைகள் வாக்குக் களவாடத்தான் வாய் வெட்டுப் போடுகின்றன. நீ யாரை ஆதரிக்கின்றாய்? ஏன் இம்முடிவு செய்தாய்?... அது தேவை தானா?... எமது உரிமை என்ன?... நம் சமூகத்துக்கு நடந்தது என்ன?... நடப்பது என்ன?... முடிவுகண்டு விட்டாயா?... இதன் பின் நீ விரும்பினால் யாருக்காவது வாக்களிக்கலாம்.

நாம்தான் சுதந்திர நாட்டின் அகதிகள் வடபகுதிக்கு நாம் யார்? ஏன் இலங்கைத் திருநாட்டிற்கு நாம் யார்?

நண்பா இன்னும் என்ன தாமதம் எழுந்திரு எமது ஓலைக் குடிசைகளுக்குள் ஓடும் கண்ணீர் வெள்ளத்திற்கு அணைபோடுவோம். அகதியின் குரல் ஓங்கி ஒலிக்கட்டும்

ஒன்று திரள்வோம் வெற்றி பெறுவோம்
வருக! வருக! வருக!

எமது தாயகமும் வடக்கே

**வேப்பங்குளம் நௌபர் ஏ.கபூர்**

# யாழ்ப்பாணம் முஸ்லிம்களின் சொந்த மண்

## வேலுப்பிள்ளை பிரபாகரன்

வடபகுதியிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதன் பின்னர், இம் முஸ்லிம்களின் நிலைப்பாடு பற்றி இரு வேறு சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் லண்டன் பி.பி.ஸி.தமிழ் ஓசைக்கு அளித்த பேட்டி இதுவாகும்.

*20.02.1993 அன்றுகொழும்பு பி.பி.சி நிருபர் சியாகவுசுக்கு யாழ்ப்பாணத்தில் அளித்த பேட்டி.*

**கேள்வி:** முஸ்லிம்கள் தொடர்பான உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:** அவர்களது பிரச்சினையை எம்மக்கள் கொண்டிருக்கும் தனித்துவம், கலாசாரம் ஆகியவற்றை மனதிற் கொண்டு அணுக வேண்டும். அவர்களின் தனித்துவமும் உரிமைகளும் பேணப்படும் அதே வேளை அவர்கள் தமிழ் மக்களுடன் வாழ்வதன் மூலம் அவர்களது சமூகப் பொருளாதார, அரசியல் வாழ்க்கை முறைகளுக்குச் சிறப்பாக சேவையாற்ற முடியுமென நம்புகிறோம் .(ஆனந்தியின் தலையீடு நெறிப்படுத்தப்பட்டுள்ளது) சிங்கள் இனவாதிகளும் தமிழ் முஸ்லிம் மக்களிடையே முரண்பாடுகளைப் பெரிதுபடுத்தி குரோதத்தை உருவாக்க முனைகின்றனர். இந்தச் சதிக்கு முஸ்லிம் மக்கள் பலியாகக் கூடாது.

**கேள்வி:** முஸ்லிம்களை யாழ்ப்பாணத்திலிருந்து ஏன் வெளியேற்றினீர்கள்? அவர்களும் யாழ் மக்களல்லவா?!

**பதில்:** அம்பாறை மாவட்டத்தில் 1990ம் ஆண்டு இனக்கலவரம் வெடித்து பெருந் தொகைத் தமிழர்கள் கொல்லப்பட்ட போது யாழ்ப்பாணத்திற்குள் இந்தக்கலவரம் பரவக்கூடிய அபாயமிருந்தது. முஸ்லிம்களின் சொந்தப் பாதுகாப்பிற்காக தற்காலிகமாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொண்டேன். ஆனால் யுத்தம் முடிவுற்று சமாதானம் மீண்டால் அவர்களை யாழ் வர நாம் அனுமதிப்போம்.

*09.09.1994 லண்டன் பி.பி.ஸியின் தமிழ் ஓசைப் பொறுப்பாளர் ஆனந்தி சூரியப் பிரகாசனுக்கு யாழ்ப்பாணத்தில் அளித்த பேட்டியில்,*

**கேள்வி:** நான் புத்தளத்திற்குச் சென்றிருந்த சமயம் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் அகதிகளைச் சந்தித்தேன். அந்த மக்கள் தமிழ் மக்களுடன் நேசமுடன் வாழ்வதையே விரும்புகின்றனர். எனவே இந்த முஸ்லிம் மக்களை வடக்கில் மீளக்குடியமர அனுமதிப்பீர்களா?

**பதில்:** யாழ்ப்பாணம் இந்த மக்களின் சொந்த மண். துரதிஷ்டவசமாக, சந்தர்ப்ப சூழ் நிலைகளால் இந்த மக்கள் அகதிகளாக வேண்டிய நிலை எழுந்தது. இதையிட்டு வருந்துகிறோம். சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டால் இவர்கள் யாழ்ப்பாணம் திரும்பி வர நாம் அனுமதிப்போம். போர்ச் சூழ்நிலை காரணமாக யாழ்குடாநாட்டில் மட்டும் 3 இலட்சம் மக்கள் அகதிகளாக வாழ்கின்றனர். யாழ்ப்பாணத்தில் குறிப்பாக தீவுப்பகுதி மற்றும் வலிகாமம் வடக்கில் இராணுவம் குடியிருப்பு நிலையங்களில் இருப்பதால் இந்த மக்கள் குடிபெயர்ந்து அகதிகளாக மாறியுள்ளனர். இந்த தமிழ் அகதிகளின் கணிசமான தொகையினர் முன்பு முஸ்லிம் மக்கள் வாழ்ந்த இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இராணுவம் தான் பிடித்துள்ள பகுதிகளிலிருந்து வெளியேறுமாயின் தமிழ் அகதிகள் தமது பகுதிகளுக்குத் திரும்பிச் செல்ல வசதி ஏற்படும். அப்படியான சுமுக நிலை ஏற்பட்டால் அகதிகளான முஸ்லிம் மக்கள் யாழ் திரும்பி வர அனுமதிப்போம்.

**நன்றி: லண்டன் பி.பி.ஸி. வானொலி தமிழ் ஓசை**

OOO

# கால அட்டவணை

## வடமாகாண முஸ்லிம்கள் 1990ம் ஆண்டு L.T.T.E யால் பலவந்தமாகவெளியேற்றப்பட்டதிலிருந்து இன்று வரை

கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லாஹ்

| காலம் | நிகழ்ச்சி |
|---|---|
| 1990 செப்டம்பர் மாதமும், அதற்கு முன்னும் | தமிழ், முஸ்லிம் இன உறவு என்றும் போல் ஐக்கியமாகக் காணப்பட்டது. |
| 1990 ஒக்டோபர் முதற் பகுதி | L.T.T.E யால் மன்னார், யாழ்ப்பாணத் தனவந்தர்கள் பலர் பணம் பறிக்கும் நோக்கில் கைதியாக்கப்பட்டனர்.<br><br>LTTE இயக்கத்தில் சேர்ந்திருந்த முஸ்லிம்கள் ஆயுதங்கள் பறிக்கப்பட்ட பின் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். |
| 1990 ஒக்டோபர் இறுதி | <u>LTTE யின் முஸ்லிம்களை வெளியேற்றும் உத்தரவு</u><br>"முஸ்லிம்கள் குறிப்பிட்ட காலத்தவணைக்குள் வடக்கை விட்டு வெளியேற வேண்டும். உத்தரவை மீறுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்." (LTTE) |
| 1990 ஒக்டோபர் 22<br>1990 ஒக்டோபர் 24<br>1990 ஒக்டோபர் 24<br>1990 ஒக்டோபர் 24<br>1990 ஒக்டோபர் 30 | மன்னார்த்தீவு வெளியேற்ற உத்தரவு (48 மணித்தியால அவகாசம்)<br>முசலி, மாந்தைப் பிரதேசங்கள் (48 மணித்தியால அவகாசம்)<br>முல்லைத்தீவு , வவுனியா மாவட்டங்கள் (48 மணித்தியால அவகாசம்)<br>கிளிநொச்சி மாவட்டங்கள் (48 மணித்தியால அவகாசம்)<br>யாழ்ப்பாண மாவட்டம் (2 மணித்தியால அவகாசம்) |
| 1990 நவம்பர் | வடமாகாணம் முஸ்லிம்கள் அற்ற பிரதேசமாகியது. |
| 1990 நவம்பர் | <u>முஸ்லிம் அகதிகள் வருகை</u><br>வடமாகாண முஸ்லிம் அகதிகள் தென் மாகாணங்களை நோக்கி கடல் வழியாகவும், காட்டு வழியாகவும் சாரி சாரியாக தஞ்சம் கோரி வருகை<br><br>புத்தளம், குருனாகல், அநுராதபுரம் போன்ற இடங்களில் இருந்த முஸ்லிம் பாடசாலைகளிலும், பள்ளிவாசல்களிலும் முஸ்லிம் அகதிகளுக்கு தற்காலிக தஞ்சம் |
| 1991 பெப்ரவரி | பாடசாலைகள் திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டதால் அயலில் உள்ள அரசு, தனியாருக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் தற்காலிக குடிசைத் தொகுதி ("அகதி முகாம்") கள் அமைக்கப்பட்டன. |
| 1991 பெப்ரவரியிலிருந்து இன்று வரை | <u>அகதிகளாக முஸ்லிம்கள்</u><br>பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர்கள் என்ற பொருள் பட்ட "அகதிகள்" (Refugees) என்று வடக்கு முஸ்லிம்கள் அரசாங்கத்தாலும், சர்வதேச தாபனங்களாலும் (உ+ம் UNHCR) அங்கீகரிக்கப்பட மறுக்கப்பட்டனர்.<br><br>"இடம் பெயர்ந்தவர்கள்" (Displaced People) என வரைவிலக்கணப்படுத்தப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.<br><br><u>திட்டமிடப்படாத அகதி நிவாரணமும் அதன் விளைவும்</u><br>* உடல்நல ஊட்டச்சத்து சீர்கெட்டுச் செல்லல்<br>* சுகாதார சீர் கேடு<br>* சரும, மூளை, வயிற்றோட்ட, உளவியல் நோய்களின் அதிகரிப்பு |

| | |
|---|---|
| | * மாலை நேரப்பாடசாலை முறையும் கல்வி வீழ்ச்சியும்.<br>* உயர்கல்வி வீழ்ச்சி<br>* பாதுகாப்பற்ற முகாம்கள் தீக்கிரையாகுதல்<br>* 'முகாம் கலாசாரம்' ஒழுக்க வாழ்க்கைக்கு சவாலாக அமைந்தமை |
| 1991 நவம்பர் | <u>மீள் குடியேற்ற முயற்சிகள்</u><br>இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த மன்னார் தீவு, முஸ்லிம் கிராமங்கள் சிலவற்றிற்கு ஏறக்குறைய 300 குடும்பத்தவர்கள் மீள் குடியேற்றப்படல் |
| 1993 | அதுபோல் வவுனியா மாவட்ட எல்லையில் அமைந்திருந்த முஸ்லிம் கிராமங்களும் மீள் குடியேற்றம் செய்யப்பட்டது. |
| | ஆயினும் மிகப் பெரும்பான்மையான வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் இன்று வரை அகதி முகாம்களில் இருக்கின்றனர். |
| | <u>வடமாகாண முஸ்லிம்கள் பற்றி LTTE யின் நிலைப்பாடு</u> |
| 1990 ஒக்டோபர் | LTTE யின் பிரசாரம்: "தமது சொந்த பாதுகாப்பிற்காக முஸ்லிம்கள் வடக்கை விட்டு வெளியேறுகின்றனர்". |
| 1993 | "யோகி" (LTTE யின் அரசியல் பிரச்சாரப் பொறுப்பாளர்): "முஸ்லிம்கள் வடக்கின் நிலையான குடிகள் அல்லர். வந்தவர்கள் மாத்திரமே" |
| 1994 ஏப்ரல் | அன்டன் பாலசிங்கம் (LTTE யின் பிரதான கொள்கை வகுப்பாளர்): "முஸ்லிம்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் வெளியேற்றப்பட்டனர்". |
| 1994 செப்டம்பர் | வேலுப்பிள்ளைப் பிரபாகரன் (LTTE தலைவர்): "முஸ்லிம்கள் துரதிஷ்ட வசமாக, சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அகதிகளாக வேண்டிய நிலை எழுந்தது. இதையிட்டு வருந்துகிறோம். அவர்கள் திரும்பிவர அனுமதிப்போம்". |

<u>சமாதான முயற்சிகளில் வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினை</u>

| | <u>முயற்சி</u> | <u>வடக்கு முஸ்லிம்கள் பற்றி</u> |
|---|---|---|
| கடந்த 4 வருடங்களில் | சமயத்தலைவர்களின் LTTE யுடனான சந்திப்பு | கதைக்கப்படவில்லை |
| | சர்வதேச சமாதானக்குழுக்களின் முயற்சிகள் (UNHCR,ICRC) | ஆக்கமுள்ள முயற்சிகள் எடுக்கப் படவில்லை |
| 1992 | சர்வகட்சி மாநாடு (APC) | கலந்துரையாடப்படவில்லை |
| 1993 | பாராளுமன்றத் தெரிவுக்குழு | கலந்துரையாடப்படவில்லை. அத்துடன் சிபாரிசு செய்யப்படவுமில்லை |
| ஜூன் 1994 | அஷ்ரப் தொண்டமான் உடன்பாடு | ஒன்றும் இல்லை. |
| ஜூலை 1994 | அஷ்ரப் சந்திரிக்கா உடன்பாடு | "வடக்கு முஸ்லிம் மீள் குடியேற்றம் துரிதமாக்கப்பட வேண்டும்." |

| | |
|---|---|
| 1994 ஓகஸ்ட் | <u>பொதுத் தேர்தல்</u><br>* வடக்கு முஸ்லிம்களை மாவட்ட ரீதியாக, கிராம ரீதியாக பிளவு படுத்தியது.<br>* அகதிப்பிரச்சினைகள் அடையாளப்படுத்தப்படவில்லை.<br>* வன்னி மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரசில் ஒரு பிரதி நிதியும் யாழ்ப்பாண மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸில் ஒரு பிரதிநிதியும் தெரிவு செய்யப்பட்டனர். |
| 1994 ஒக்டோபர் | <u>எதிர்காலம்</u><br>* புதிய அரசாங்கமும் சமாதானத்திற்கான முயற்சிகளும்<br>* அரசாங்கம் அகதி நிவாரணத்தில் எடுக்க முயன்றுவரும் சீர்திருத்த முயற்சிகள்<br>* வடக்கு முஸ்லிம்கள் பற்றிய LTTE யின் நிலைப்பாட்டில் சாதகமான மாற்றம்<br>**தன்மானத்துடன் தமது தாயகத்தில் சமாதானமாக வாழ இவை வழி வகுக்குமா?** |

# கவிதைகள்

## யாரை நோகடித்தோம்!

காதைக் கடுக்கும் பனியுறைப் பொழுதில்
என் நெஞ்சைக் கடுக்கும் கவிகூற விளைகிறேன்

மூன்றாண்டுகள்
மண்ணிலிருந்து அகற்றப் பட்டு மூன்றாண்டுகள்
மனிதன்பால் மனிதனுக்குள்ள
அகதியின்பால் அகதிக்குள்ள : நேயத்தால்
துன்பங்களை, துயரங்களை
அறிந்ததில், உணர்ந்ததில், அனுபவிப்பதில்
அதன் விளைவில்
கோரங்களை கோர்க்க விளைகிறேன்.

வன்னிக் காட்டில் எனதூர் அருகே
எம்போன்றோர் வாழும் தரை
எம்போன்றோர் விதைக்கும் நிலம்
எம்போன்றோர் பேசும் மொழி
எம்போன்றோர் குலவும் இடம்
ஒரு முஸ்லிம் கிராமம்
ஆண்டியாபுளியங்குளமெனும் சிற்றூர்

குண்டுக்காக்காவெனும் ஒரு தாத்தா
தள்ளாத வயதிலும் வீடுதேடி வருவார்
வந்தவுடன் அவர் கைப்பையில் வருவதை
பிரித்துண்பதே எம் வேலை
திண்ணையில் இருந்து பலவும் கதைப்பார்
அவர் தன் பேத்திக்கு சம்பந்தமும் பேசுவார்
நானும் சிரித்துக் கொண்டே,
"இனி என்னால் சுண்ணத்தா செய்து கொள்ள
முடியும்" என்பேன்
இப்படித்தான் எங்கள் உறவு
கள்ளம் கபடமற்றது

நோன்பு நாட்களிலும்
புதுவருட, பொங்கல்களிலும்
விருந்துதோம்பல்களும் இருக்கும்
இப்படிப் பலவும் தொடரும்
இனிய நட்பு, இனிய உறவு

இனவாதப் பேரிரைச்சலில்
செட்டிகுளமெனும் ஓர்தரை ஊர்ந்தது
மக்களோ வேர்விட்டகன்றனர்
எத்தனை காலம் வாழ்ந்திருந்த மண்
எத்தனை கனவுகளை நனவாக்கிய மண்
சொந்த மண்ணிலிருந்து அகன்று செல்வதுபோல்
ஓர் துன்பம்
இம் மேதினியில் மிகப் பெரிய துன்பமென்பேன்
அதுவும் இவ்வாறே
காலையில் ஒலிபெருக்கியுடன் நுழைந்த
சிங்கள இராணுவம்
இருபத்திநான்கு மணிநேரத்துள் மண்ணைவிட்டு
அகலுங்கள் என எச்சரித்தது
ஆயினும் தம் இருப்புக்களைக் காவ
உடமைகளை எடுத்துச் செல்லக்கூட
எதிரி அனுமதித்திருந்தான்
கால்நடையாகவும், மாட்டு வண்டில்களிலும்
உழவு இயந்திரங்களிலும்
கண்ணீர் சிந்தி மண்ணை விட்டகன்ற பொழுதுகள்
இன்னும் என்மனதில் முதிரத்தில் வலியதாயுள்ளது

இராணுவ முனைப்பில் எப்போதும்
உயிரற்றுப் போகும் காலம்
குறிப்பார்க்கும் துப்பாக்கிகளிடை
எப்போதும் உயிரற்றதே எம் வாழ்வு
அப்போதெல்லாம் உயிர் தந்தது
அக்குக்கிராமம்

'அல்லா' வின் பேரால்
அரவணைத்திருந்தனர் அம் மக்கள்
வாப்பா, உம்மாவென
அவர்களிடை அவர்களாய்
வாழ்ந்திருந்த நாட்கள்
என் உயிரினை உயிராய் உண்டு
மூன்றாண்டுகள் முன்பாய் ஓர் நாள்
அன்று
'அதட்டல்களும் நீட்டிய துப்பாக்கிகளும்'
'உடுத்த உடையுடன் வெளியேறுக' எனப் பணித்தன

எல்லாமே உயிரற்றுப் போயின
யாருமே எதிர்பார்த்திலர்
அதுவும் சொந்தச் சோதரினால்

யார் மொழிந்தார் சொல்க
எதிரியிடமிருந்து கற்ற கல்வியோ சொல்க
பாரின் மகிமை இழந்தோம்
நட்பைத் துறந்தோம்
நம்பிக்கையைச் சிதைத்தோம்

பேரினத்தின் காலில் சிதையுண்டு கிடந்தோம்
ஒன்றாய் வாழ்ந்து ஓர் மொழி பேசி
பேரினக்காலை முறிக்வெழுந்த
பல தோழரை இழந்தோம்
நம்பிக்கையை முறித்தோம்

மன்னார்
உயிலங்குளம் விட்ட மக்கள் அங்கு
பலமைல்கள் நடந்து கர்ப்பிணிகள் கருச்சிதைந்தும்
மகப்பேறுகள் காட்டுப் பாதையோரங்களில்
நிகழ்ந்ததுமென
கண்டோர் துன்பம் சொன்னார்
என் நண்பர்
யாரை நோகடித்தோம் யாரை
நொந்து கொண்டோம்
அவர்களும் எம் மக்களே
அவர்களுக்கும் எம் மண்ணே

எதிரிகள் யார்?
துரோகிகள் யாரெனப்
புரிந்து கொள்ளத் தெரியாத துப்பாக்கிகளை
நான் எப்போதும் மன்னிக்கேன்
நாம் எப்போதும் மன்னிக்கோம்

நாம் இழந்தது தேசமெனில்
அவர் இழந்ததும் தேசம்தான்
நாம் இழந்தது உரிமை எனில்
அவர் இழந்ததும் உரிமைதான்
நாம் இழந்தது சமத்துவமெனில்
அவர் இழந்ததும் சமத்துவம்தான்
நாம் இழந்தது நீதியெனில்
அவர் இழந்ததும் நீதிதான்
நாம் இழந்தது சுதந்திரம் எனில்
அவர் இழந்ததும் சுதந்திரம்தான்.

நாம் எழுந்ததே உரிமைக்காய்
நாம் எழுந்ததே நீதிக்காய்
நாம் எழுந்ததே சுதந்திரத்திற்காய்
நாம் எழுந்ததே கொடுமைக்கெதிராய்: எனில்
நாம் இப்போது புரிவது என்ன?

யாரும் எதிர்பாராக் கொடுமை
யாரும் எதிர்பாராக் கோரம்
சொல்க!... சொல்க!...
இப்போ சொல்க...
யார் எதிரிகள்?
யார் துரோகிகள்?

விட்டகன்ற மக்களின் உடமைகள்
அனைத்தும் ஏலத்தில் விடப்பட்டதாம்
யாரிடத்தில் சொல்வது?
யாரைக் கேட்பது?
மௌனித்தனர் மக்கள்
பேசுகவெனில் பேசும் ஓர் மொழிமட்டுமே
அங்குண்டு
நிர்க்கதியாகினர் மக்கள்
விதியெனப்படைத்தவர் ஆண்டவரில்லை
விதியைப் படைத்தவர் எம்மவர் ஆகினர்
அயலவன் நெருப்பானான்
அகதி முகாம்களுக்குள்முடங்கியது வாழ்வு
மௌன மொழியுடன் எத்தனை நாள் வாழ்வோம்?
மௌனம்தான் மொழியெனில்
எங்கும் மானிடம் வீதியில் புரளும்
என்பதை உணர்வேன்.

இன்றே சொல்வோம்
எம்மவர் அவர்கள்
மனிதர்கள் ஆயின் மனிதரை மதிப்போம்
மனிதர்கள் நாங்கள் கொடுமையை மறுப்போம்

**பா.அ.ஜயகரன்**
**நன்றி : தேடல்**

***

# தூரத்து விடிவெள்ளி

உள்ளமும் ரணமாகி குருதிவடியும்
கவிதையிங்கே
பல்சுவையொடு சொல்சுவையாய் தமிழும்
தாய் மொழியாய் நாம் கொண்டதெங்கே,
எம்உறவோடு உடன் பிறவா தமிழ்
மக்களெங்கே.
எமதூர் தாய் வீடு தாலாட்டிய பூமி
எங்கே,
கற்றறிந்த கல்விக்கூடம் காரிருள்
கவிழ்ந்ததங்கே.
வேதம் ஓதி தொழுதறிந்த பள்ளிவாயில்கள்
பாழ்வீடாய் ஆனதங்கே
வடக்கிலோ நாம்
வானம்பாடித்திரிந்ததெங்கே
பஞ்சைப் பராரியாய் விரட்டப்பட்ட
கொடுமையென்னே!

ஊர் இழந்தோம் உறவிழந்தோம்
காடிழந்தோம் ஊர்மக்கள் தானிழந்தோம்
ஊமைகளாய் உடமைகள் தானிழந்தோம்

என் செய்யினும் நம்முனிவு அழிக்கும்
சக்தி பெற்றுவிடும்
அல்லாஹ்வின் விரோதிகள் ஒடிந்து
போய்விடுவர்

மதம்தான் வேறுஆயினும் சகோதரராய்
வாழ்ந்திருந்தோம்
தொன்றுதொட்டு வாழ்ந்திருந்து தூரமாய்த்
துரத்தப்பட்டோம்.

பெரிய குடும்பம் தனக்கு அரசுதரும்
பிச்சைப்படி பன்னிரண்டு நூறு
ஆறு தனில் தேவைகள் ஆயிரத்தில்
எதனை நாம் நிறைவேற்ற.

உள்ளம் ஒடுங்கி விட உடலும் கூனி விட
கையேந்தும் நிலை வந்த கோலமென்ன.
நம் உடன் பிறப்புக்கள் செய்த பாவம்
என்ன?
உள்ளம் குமுறுதல்லோ கண்ணீரும்
வற்றிவிட
தூரத்து வான்கடலில் ஒளிக்கீற்றாய்
தெரியுதல்லோ விடிவெள்ளி
நாம் ஏமாந்த நிலை மீண்டு ஒளிவருமோ
நம் வாழ்வில்.

எழுச்சி பெற்றிடுவோம். ஈமானை
வளர்த்திடுவோம்.
ஒன்றுபட்டிடுவோம் ஈமானிய சேனையில்
அல்லாஹ்வின் துணையுடன் மீட்டிடுவோம்
வடக்கிலே பாழடைந்து போயுள்ள நம்
பைதுல் முகத்தஸ்கள்
அறுபத்தி மூன்றினையும்

**ஜான்**

☆☆☆

## வடக்கும் நானும்

அதென்ன
ஆயுத
ஆர்ப்பரிப்புக்கள்!!
வடக்குக் குழந்தைக்கு
பெயர் சூட்டு விழாவோ!!

சூட்சுமமான
சிங்கள அரசு
அனுமதித்த
'புலம் பெயரல்' எனும்
புதிய மொழியில்
அகதிகளாய்...

அன்றைய
விழாவின் போது
அழுது விழுந்த - என்
இளைய சகோதரியின்
இதயத்தில் வரைந்துள்ளேன்
கவிதை ஒன்று.

காலம் கரைந்து
எங்களுக்காக (ப்)
புலரும்
புதிய விடியலில்
இசைப்பேன்
வடக்குக் கீதமாக...

அப்போது
அல்லாடும்
பதாகையில் இரத்தம் தோய்ந்த
என்
ஆயுதத்தால் எழுதுவேன்

"எம்முடைய
தாயகமும்....."
முடிவதற்கு முன்பே
நான் முடிந்து போவேன்
ஒரு ஷஹீதாக....

முடித்து வையுங்கள்
இறுதியை உங்களின்
குருதியால்
உறுதியாய்...

**இஸ்லாஹிய்யா**
**கே. முனாஸ்**

## சூரசம்ஹாரம்

ஒரு விடிகாலைப்பொழுது
அழுதது.
சிவந்திருந்தன
என் விழிகள்.

தேள் கொட்டியதான
வலிப்பு
இதயமெங்கும்
விதைக்கப்பட்ட
வேதனைச்செடி
பிடுங்கி எறியப்பட்டும்
துளிர்த்துக் கிடந்தது.

நீண்டிருக்கும்
மௌனக்கருப்பில்
இரவு பீச்சிய
எச்சில் சடலங்கள்
எரிந்து, அவிந்து
சாம்பலாகவும் கிடந்தன.

எனது தேஸம் பற்றிய
நிதர்ஷன வெக்கை
இன்னுமின்னும்
ஓங்காரித்தது.

நரகலோகத்து
முற்களைப் பிடுங்கி
அந்த-
வைரிகளின் அணிகளை
துவம்சம் செய்!

நமது
சுதந்திரம் பற்றிய
விடிவெள்ளிகள்
போருக்குள் புதையுண்டு
மங்கிப் போனது யாரால்..?

அடர்ந்தேறு
அதர்ம சேனைகள்
அடங்கும் வரை
உன் ஆயுளைத்தின்று
கிளர்ந்தேறு!

அது நமதின் தாயகம்
முகாம்களுக்குள்
குந்தி முகாரி பாடுவது
உன் முதுகெலும்பின் பலத்தை
சந்தேகிக்கும்.

இஸ்லாமியனே!
ஒரு விடிகாலைப் பொழுதில்,
ஆசையுடன் சிரித்திருக்கும்
என் விழிகள்
உன் வெற்றியின்
ஜெயக்குரல் கேட்டு

**ஓட்டமாவடி அரபாத்**

★★★

## வரலாற்றுப் பல்லவி !

வடக்குக்கு வைத்த தீ சுடர் விட்டு
ஊர்களைத் தாக்கி உளம் எல்லாம் கிழிந்(து)த
அந்த விடி இரவுக் கருநாளில்...

தேசத்தை சுமந்த நாங்கள்
ரோசங்கள் பொங்கி வர
உணர்வுகளைச் சுமந்து கொண்டு புது
முகவரியின் சோகங்களைக் காணிக்கை
உண்டியலில் சிறை வைத்தோம்
முகாமுக்குள் முடங்குவதற்காய்...

பெருமைக்குலம் பீறிட்டழ காளையர்
கதிகலங்க... ஒளித்திருந்த பெண்ணவளை
ஒழித்து வைத்து சுஜூது தொழ சூனியங்கள்
சூழ்ந்து கொண்டதால்....

நீதியை இருட்டில் விட்டு நிம்மதியைப்
பார்க்கிறோம் ... எல்லாமே சூனியம்தான்
துன்பத்திலும் பிணியும் சூழ்ந்து கொள்ளும்
நேரமெல்லாம் தூயவனின் பாதை நோக்கி
ஓடி வந்தோம்... முக்காடும் தொப்பியுமாய்
ஏழைகளாய் வாழும் எங்களின் ஏக்கங்கள்
தெரிகிறதா... சோதரா
சோகங்கள் புரிகிறதா....?
"உலர் உணவுப்" பல்லவியும்
வரலாற்று ஞாபகங்களும்
வரலாற்று வாழ்த்துக்களும்
ஊர்வலம் போனாலும் ...
சத்தியமாய்...."எம்மூர் என்றும் எம்மவர்க்கே."

**விடத்தல்தீவான்**
**உவைஸ்கனி**

✳✳✳

## கவனம் நரிவருது !

வாழ்வாங்கு வாழ்ந்த
வடபகுதி மக்கள் (நாம்)
வேட்டுக் காரர்களால்
விரட்டப்பட்டனரே!

வாக்குப்பலங் கொண்டு
வேட்டுக்காரர்களை
வெரட்டியடிக்க
பாராளுமன்றம் புகுந்து.
பாரம்பரிய நிலம்.
காத்துத் தருவோம் என
கத்துதப்பா அந்த
குள்ள நரிகள்.

எம் கால்கள் நடந்த
பாதைகள் எல்லாம்
பள்ளம். படுகுழியாய்
படிக்கச் சென்ற
பாடசாலை
பள்ளிவாசல்கள்
பரிதாப நிலையில்! ...
அபிவிருத்தி அங்கே
ஆவது எப்படி?....!

இலச்சியக் கும்பலில்
இனிதே நின்றுழைத்த
இக்பால் உனக்கு
சொல்லித் தருகின்றார்.
"ஓ!... புவியின் அடிமையே காலமும்
நீயே! மாநிலமும் நீயே!
உறுதியெனும் திராட்சத்தை அருந்து
ஆழ்ந்த தூக்கத்தை விட்டு விழித்தெழு!·
உண்ணுகிறாய உறங்குகிறாய்
விலங்கினைப் போல்
உறு பயன் யாதோ சொல்?...
உன்னை நீ தாங்காதிருந்திடியோ!..
உன் வாழ்வு உனக்கீயும் பயன்
யாதோ!..."

நீ சுதந்திர நாட்டின்
அடிமைதான் என்பதை
அடி மனதில் பதித்து
விடுதலைக்காய்
வேண்டியதைச் செய்
வாக்குப்பலம் உன்னை
வந்து சேரும்!...
நண்பா விழித்துக் கொள்
வாக்குக் கேட்டு வருபவனுக்குச் சொல்
நான் அகதி
வா. ஊருக்குப்போவோம்
முன்னால் செல்
வாக்குத் தருகிறேன்:
அவன் தயாரா?...

சிந்தி...!
என்வாக்கு யாருக்கு...
இதனால் ஆவது என்ன?...

**வேப்பங்குளம்**
**நௌபர் ஏ.கபூர்**

***

## அ...க...தி

அன்றிலை வென்றே
அன்பாய் ஒன்றுபட்டு
அனுதினம் ஐவேளை
அல்லாஹ்வைத் தொழுத மக்கள்

களைப்புழைப்பில் வாழ்வை
கணை வேகத்தில் முன்னேற்றிய
கண்மணி நாயகத்தின்
கருணை காருண்ணியர்கள்

திக்கெட்டில் இருந்து வரும்
திக்கற்றோருக்கு
திருக்கரங்களால் அள்ளி வழங்கும்
தியாக வேந்தர்கள்

அவர்கள் வாழ்விலா
அப்படி ஒரு அநியாயம்
அல்லாஹ் பார்த்திடுவான்
அழிந்திடும் உலகமிது

கல்நெஞ்சுடைய
கள்ளக் கயவர் கூட்டத்திற்கு
கரும்பாய் இனித்ததோ
கலிமாவுடையவரின் சொத்து

தியாகம் செய்கின்றனராம் தாயகமீட்க
திதியின் ஓரத்திலும் கொள்ளைக்கருத்தரங்கு
திரட்டியே விட்டனர் காளியின் புத்திரர்
திரும்பியும் பாராமல் ஓடிப்போ என்று

அதனால்தானே அகதிகளானோம்
அழியா முத்திரை நெற்றியில் பெற்றோம்
அக்காலத்தில் அழைத்தனர் முஹாஜிரீன்களென
அகதி என்பது இக்கால 'மொடனைஸ்ட் நேம்'

'கர்பலா' யுத்தம் கண்ணுக்குத் தெரிகிறது
'கந்தக்' யுத்தம் கவனத்தை ஈர்க்கிறது
கடிவாளம் இடப்பட்டோம் கட்டாயமாய்
கட்டவிழ்த்து விடப்பட்ட கருடன்களுக்கெதிரே

தினமும் ஐவேளையும் இறைவா!
திரும்ப திரும்ப வழி செய்
திரும்பவும் திருடர்கள் திரட்டும் போது
திடகாத்திரமாய் திளைத்து நிற்க வழிசெய்

**விடத்தலூரான்**
**அன்சாரி எம்ஸா**

---

"ஓ....... இப்பூமியின் அடிமையே! காலமும்
நீயே: மாநிலமும் நீயே!

உறுதியெனும் திராட்சைரசத்தை அருந்து ஆழ்ந்த
தூக்கத்தைவிட்டு விழித்தெழு!"

**அல்லாமா இக்பால்**

# அகதி மாணவர்களின் மாலை நேரக் கல்வி

மு. றயீசுத்தீன் சிலாவத்துறை

1990ம் ஆண்டு வடக்கிலிருந்து முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்ட போது, அந்த மாணவர்களின் கல்விக்காக கற்பிட்டி அல்அக்ஸா ம.வி.யில் மாலைநேரக் கல்விப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அவசரத்தேவைக்காக ஏற்படுத்தப்பட்ட இம்மாலை நேரக்கல்விப் பிரிவு பி.ப. 2.30 மணியிலிருந்து பி.ப.5.00 மணிவரை நடைபெறுவதாகும். ஏதோவொரு வகையில் இம்மாணவர்களின் கல்வி தடைகளின்றி நடைபெறும் அதே வேளை, இது தொடர்ந்து மூன்றாண்டுகளைத் தாண்டி 03 மணிநேர மாலை நேரப்படிப்பாக மட்டும் பரிணமித்துச் சென்றுகொண்டிருப்பது துரதிஷ்ட நிலையாகும்.

உள்ளூர் மாணவர்களின் காலை நேரக்கல்வி முடிவடைந்ததுமே, பிற்பகலில் இம்மாலை நேரக்கல்வி ஆரம்பமாகும். உயர்தரக் கலைப்பிரிவு வரை வகுப்புக்கள் இருப்பதுடன், காலையிலுள்ள சுமார் 1300 மாணவர்களளவில் சமமான தொகை மாணவர்கள் மாலை நேரத்தில் உள்ளனர்.

இப்பகுதியில் கற்பிட்டி அல்-அக்ஸா ம.வி.யில் மட்டுமே உயர்தர வகுப்பு(வரை) இருப்பதால், கற்பிட்டிக்கும் நுரைச் சோலைக்கும் இடையிலுள்ள சகல அகதி முகாம்களிலிருந்தும் இம்மாலை நேரப் பிரிவுக்கென இம்மாணவர்களிற் பலர் வாகனங்களில் வருகின்றனர் இவ்வாறு தூர இடங்களி லிருந்துவரும் மாணவர்கள் படும் பிரயாணக் கஷ்டங்கள் அதிகம். பி.ப.5.30க்குப் பாடசாலை முடிவடைந்ததும், இரவானாலும் வாகனமேதுமின்றித் தத்தளிக்கும் இந்த மாணவர்களின் நிலை பரிதாபகரமானதே!

காலைப்படிப்பு, இளவயதினரின் சிந்தனை ஞாபகசக்திக்கான அறிவு விருந்தாகும். மாலையிற் கற்பது எப்போதும் மந்த நிலையையே உருவாக்கும். மதிய உணவு உண்ட பின் வரும் குட்டித்தூக்க நேரம் ஓடியாடி விளையாட வேண்டிய அந்தி மாலை வேளை, இவ்வகதி மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். காலைப் படிப்பு, விளையாட்டு போன்றன இம் மாணவருக்கு விலக்கப்பட்டுள்ளது போலும். அகதி முகாம்களிலிருக்கும் இம்மாணவர்களுக்கு, ஏனைய நேரங்களில் கல்வி கற்பதற்கான எவ்வித வசதிகளும் அக்குடிசைகளிலில்லை. மட்டுமன்றி, தனியார் கல்விக் கூடங்களும் இப்பகுதியில் கிடையாது.

ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடத் தட்டுப்பாடு, இடநெருக்கடி என்பனவும் இங்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தி யிருக்கின்றது. இருந்த சில ஆசிரியர்களும் அரசாங்கத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து மன்னார் திரும்பி விட்டனர். மீள் குடியேற்றமென மன்னார் திரும்பிய மாணவர்கள், அங்கு பிரச்சினையென்று மீண்டும் இப்பாடசாலையைநாடி வருகின்றனர். ஆனால் ஆசிரியர்களோ மாற முடியாது திண்டாடுகின்றனர்.

1300 மாணவர்கள் கல்வி பயிலும் இம்மாலை நேரப்பிரிவில், நிரந்தர ஆசிரியர்களென ஐவரே உள்ளனர். மேலும் 13 ஆசிரியர்கள் காலையுடன் சேர்த்து மாலையும் கடமை புரிபவர்கள். அத்துடன், இலங்கையின் எப்பாகத்திலும் இல்லாத ஒரு நிகழ்வாக 18 தொண்டராசிரியர்கள் தனியார் நிறுவனங்களின் சிறு வேதனத்துடன் இங்கு சேவையாற்றுகின்றனர். நிரந்தர ஆசிரியர்களை விட, தொண்டராசிரியர்களே இங்கு அதிகம்.

பல்கலைக்கழக அனுமதி முறையில், விளையாட்டுப் போட்டிகளில் பெற்ற உயர் சான்றிதழுக்கும் விஷேட புள்ளிகள் வழங்கப்படவிருக்கின்றன. வேலை வாய்ப்புகளின் போதும் இச்சான்றிதழ்கள் மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படுவதும் வழக்கம். ஆனால் இந்த மாலை நேர மாணவர்களோ கடந்த மூன்று வருட காலத்திற்கும் மேலாக எந்தவொரு விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்ற அனுமதிக்கப்படுவதில்லை. இவ்வாறு உடல் ரீதியான ஆளுமைகளை வளர்த்துக் கொள்ள முடியாதுள்ளதுடன் இவ்வகதி மாணவர்களின் விளையாட்டுத் திறனும் மறைக்கப்படுகின்றது.

மேலும், மாலை நேரப் பாடசாலைக் கென ஒரு அபிவிருத்திச் சபை இது வரை காலமும் இங்கு ஏற்படாதிருப்பதும் பெரும் குறையாக இருந்து வருகிறது. இதனால் இம்மாலை நேர மாணவர்களின் இவ்வாறான இடர்பாடுகளைப் பெற்றோர்கள் அறிந்து கொள்வதற்கும் அதற்கான மாற்றொழுங்கு செய்வதற்கும் வழியில்லாது போகின்றது. அதுமட்டுமன்றி, மாணவர் மன்றங்கள், கலை நிகழ்ச்சிகள் என்பனவும் கூட இங்கு நடைமுறைப்படுத்தப் படுவதில்லை.

இம்மாலை நேரப் பிரிவானது, காலைப் பாடசாலை நிருவாகத்தின் கீழ் இயங்கு வதாகும். ஆனாலும் பிரதி அதிபரொருவரின் பொறுப்பில் இது விடப்பட்டிருக்கிறது.

இவ்வாறு வார்த்தைகளால் வருணிக்க முடியாத சோதனை, வேதனைகளுக்கு மத்தியிலும் இந்த மாணவர்கள் தம் கல்வியிற் சாதனை படைக்கிறார்கள் என்றால், அது மெச்சிப் புகழ வேண்டியதே.

1992, 1993ம் ஆண்டுகளில் நடந்த க. பொ. த. (சா/ த) பரீட்சையில் பெருமைப் படக் கூடியளவு பெறுபேறுகளை இம் மாலை நேரப் பாடசாலை மாணவர்கள் பெற்று, பலர் உயர்தர வகுப்பிற்குத் தகுதி பெற்றிருந்தனர். மற்றும் 1992ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (உ/ த) பரீட்சையில் சித்தியடைந்த மாலை நேர மாணவர்கள் பலருள் இருவர், 1993/ 94ம் கல்வியாண்டிற்கென கொழும்புப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை, அகதிக் குடிசையில் குப்பி விளக்கின் மங்கிய வெளிச்சத்தில் இருந்து படித்துப் பெற்ற பெறுபேறுகள் தாம் இவ்வகதி மாணவர்களுடையது . ஆனால் அடிப்படை வசதிகள் மட்டுமாவது இந்த மாணவர்களுக்கு இருந்திருப்பின் இவர்களின் கல்வித் தரம் மட்டிட முடியாதளவு உயர்வெய்தும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இந்த மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் பெரும் பங்கு, கடமை யுணர்வுடனும், சேவை மனப்பான்மையோடும் கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களையும், இதனை ஒரு முகப்படுத்தி நல்வழிகாட்டி வரும் மாலை நேர அதிபர் அவர்களையும் சாரும். ஏனெனில், அந்தளவு இவர்கள் இந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் அக்கறை காட்டி வருகின்றனர்.

மேலும் இந்த மாலை நேரப் பாடசாலை மறந்திட முடியாதளவு சேவைகளை சில தனியார் நிறுவனங்களும் செய்திருக்கின்றன, செய்து வருகின்றனர்.

எனவே, கவனிப்பாரற்றுக் கிடக்கும் இம் மாலை நேரக் கல்விக் கூடத்தின் நிலைமையினை அறிந்து, அதன் குறைகளை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கல்விமான்கள், இஸ்லாமிய அமைப்புகள் முன் வர வேண்டும்

## அவலமான உண்மை

பாலஸ்தீன மண்ணில் பல தசாப்தங்களாக இடம் பெற்று வந்த மனித வேட்டைப் பாணியில் தமிழ் பேசும் முஸ்லிம் சகோதரர்கள் வடக்கிலிருந்து இரவோடு இரவாக விரட்டப் பட்டதை மனித நேயம் கொண்ட எவனும் மன்னிக்க மாட்டான்.

தமிழைத் தவிர வேறு எந்த மொழியையும் பேசத் தெரியாத சுமார் 90 ஆயிரம் முஸ்லிம் சகோதரர்கள் தமிழையே தாய் மொழியாகக் கொண்டு இரண்டு மூன்று பரம்பரைகளாக யாழ் மண்ணிலேயே வாழ்ந்து அந்த மண்ணையே தமது தாயக பூமியாகக் கொண்ட இந்தச் சகோதரர்கள் இரண்டு அல்லது மூன்று மணிநேர காலக் கெடுவுடன் உடமைகளைக் கைவிட்டு வரவேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டார்களென்பது அவலமான உண்மையாகும்.

இன மத மொழி உரிமைகள் வேறு. அதற்கான போராட்டங்களும் வேறு. இன மத மொழி ரீதியில் இழைக்கப்பட்ட கொடுமைகள் வேறு.

கொழும்பிலும், சிங்களப் பகுதிகளிலும் தமிழ் மக்கள் வேட்டையாடப்பட்டதைக் கண்டித்தவர்கள், அநுராதபுரத்தில் சிங்கள அப்பாவி மக்களும், காத்தான்குடியிலும், ஏறாவூரிலும் பள்ளி வாசலுக்குள் வைத்தே நூற்றுக்கணக்கான அப்பாவி முஸலிம்களும் பலியெடுக்கப்பட்டதையும் நியாயப்படுத்துவது என்ன நியாயம்?

**"அப்பன் வெட்டிய கிணறு என்பதற்காக உப்பு நீரைக் குடிப்பவர்கள் இவர்கள்"**

நன்றி: எஸ்.அருளானந்தன்
தினகரன் வாரமஞ்சரி
21.08.1994

குறுநாவல்

# நினைவுகள் அழிவதில்லை

யாழூரான்

## 1

"கலீல் ........... லைலா மஜ்னுான் காதலப் பத்தி உனக்குத் தெரியுமா.....?" என்று கேட்டான் மகேஸ்

அதனைக் கேட்டு, படித்துக் கொண்டிருந்த கலீல் நிமிர்ந்து பார்த்துச் சிரித்தான்

"என்னடா ....நீயென்று காதலப்பத்திக் கதைக்கிறே .....?" என்றுகேட்டான்.

"கெமிஸ்ரியோட சுமைய மறக்கறத்துக் காத்தான்டா....." என்றான் மகேஸ் "அப்படியென்டா லைலா மஜ்னுான தேனா 'யூஸ்' பண்றேன்னு சொல்லு"

"தேனா யூஸ் பண்றேனா?"

"ம்ம்..... கசப்பான மருந்துகளை தமிழ் மருத்துவத்தில் தேனோட குழைத்துக் கொடுப்பதுப் போல நீ கெமிஸ்ட்ரிய உள்ள இறக்கிறதுக்கா லைலா மஜ்னுான கதைக்கிறேன்னு சொல்லு ? என்றான் கலீல்.

"என்ன ....என்ன ... ஐயா தமிழ் மருத்துவத்தப் பத்தியெல்லாம் கதைக்கிறாரு... டொக்டராகாம வைத்தியராத்தான் வருவீர்களோ " என்று கேலியுடன் கேட்டான் மகேஸ்.

"டொக்டரோ வைத்தியரோ டாக்குத்தரா காட்டிச்சரி" என்றான் கலீல் சிரிப்பு அலை பரவியது

பின்னர் இருவரும் மீண்டும் பாடத்தில் கவனத்தைச் செலுத்தினர் மகேஸின் வீட்டின் உள் அறையிலிருந்து பழங்கால 'செந்தோமஸ்' சுவர்க்கடிகாரம் ஆறுமுறை அடித்தது

கலீல் கொப்பியை மூடினான்.

"ரைட்....நா வாறன் மகேஸ்....நாளைக்கு ஸ்கூலுக்கு 'எலியா'வந்திடு நாளைக்கு நம்மட ஸ்வீப்பிங் பீரியெட்" என்றவாறு எழுந்தான். மகேஸ் கொட்டாவிவிட்டவாறே விடை கொடுத்தான்

அப்பொழுதுதான்

அந்த அலறல் எழுந்தது.

போகத் திரும்பிய கலீல் நின்றான்.

"ஐயோ! என்னங்க செய்யுது? " என்று மகேஸின் அம்மாவின் கத்தல் நடுக்கத்துடன் ஒலித்தது.

இருவரும் உள்ளே ஓடினர்.

அங்கே, மகேஸின் அப்பா கட்டிலில் படுத்தவாறு துடித்துக் கொண்டிருந்தார்

"என்ன... அம்மா அப்பாவுக்கு....?" என்று கேட்டவாறு தாயை நெருங்கினான் மகேஸ்.

"அ....அப்பாவுக்கு........... நெஞ்சு...... வலிக்குதாம்...." என்று கண்ணீருடன் கூறினாள் அம்மா.

அப்பா..........

அப்பா ........... யோசிக்காதேங்கப்பா .....டொக்டர கூட்டி வாறேன். .........."என்றான் மகேஸ்.

"மகேஸ் .......இப்ப..... டொக்டர்மாரும் வீட்டுக்கு வரமாட்டாங்களே ....." என்றான் கலீல்.

"ஓ....இந்த ஷெல் அடியுக்குள்ள வரமாட்டாங்களே.... இப்ப என்னம்மா செய்யிறது..... ?."

என்று பரிதாபத்துடன் தாயைப் பார்த்தான் மகேஸ்.

"இ...... இப்ப.....என்னமாவது செய் மகேஸ்...... ஆஸ்பத்திரிக்கு........ கொண்டு போகோணும்...." என்றாள் தாய்.

"ஆ.... ஆஸ்பத்திரிகு எதில கொண்டு போறது....கலீல்...... ? என்றான் மகேஸ்

"மகேஸ்... சற்றுப்பொறு" என்றவாறு ஓடினான் கலீல்

இரண்டு நிமிடங்களில் திரும்பி வந்தான் "மகேஸ்......அப்பாவ மெதுவாப் பிடிச்சு நடத்திக் கொண்டு போவோம் டாக்ஸி ஒண்ணு பிடித்து வந்திருக்கிறேன்...." என்றவாறு மகேஸின் தந்தை சிவகுருநாதனைப் பார்த்து "அங்கிள்......... மெதுவாக எழும்புங்க அங்கிள் ...."என்றான்

சிவகுருநாதன் முனகலுடன் எழுந்தார் இருவரும் பையப்பைய அவரை அழைத்துச் சென்று டாக்ஸியில் அமர்த்தினர்

"நீங்க பயப்படாதீங்க ஆன்ட்ரி... ஒண்ணும் நடக்காது" என்று கூறியகலீல் சிவகுருநாதனுக்கு வலது புறம் உட்கார்ந்தான் மகேஸ் இடது புறம் உட்கார டாக்ஸி புறப்பட்டது.

அவர்கள் ஆஸ்பத்திரியை அடையும் போது மணி ஆறரை ஆகிவிட்டது.

ஓ.பீ.டியில் கதைத்து, 'வோட்டில் "அட்மிட்' பண்ணி......வேலைகள் துரித கதியில் நடந்தன.

கலீலும் மகேஸும் வெளியே வந்தார்கள் "கலீல் ......இப்ப டாக்ஸிக்கு ஒரு பெரிய தொகை கேட்கப்போகின்றானே....." என்று கவலையுடன் கூறினான் மகேஸ்.

"நீ அதப்பத்திக் கவலைப்படாதே." என்று கூறிய கலீல் டிரைவரை அனுப்பினான்.

" நானூறு ரூவா தாங்க தம்பி...." என்றான் டிரைவர்.

அவனோடு கலீல் பேரம்பேசவில்லை. அந்தப் பதட்டமானசூழ்நிலையில் பெற்றோல் விற்கும் விலையில் அத்தொகை அதிகமில்லை என்பதை அறிந்து காசைக் கொடுத்து விட்டு மகேஸுடன் உள்ளே சென்றான்.

"கலீல்... இதுக்கு.......நான் " என்று "கலீலின் கைகளைப்பற்றியவாறு பரவசப்பட்டான் மகேஸ்.

"இதில என்னடா வந்திட்டுது." என்று கூறி முதுகில் தட்டிக் கொடுத்தான் கலீல்

இருவரும் சிவகுருநாதனை 'அட்மிட்' பண்ணிய "வோட்"ஐ அடைந்த பொழுது அவரைப் பரிசோதித்து விட்டு வெளியே வந்த டொக்டரை இவர்கள் நெருங்கியதும் "சரியான நேரத்தில கொண்டுவந்தபடியால் உயிருக்கு ஆபத்தில்லாமல் போச்சு.... பயப்பட ஒண்ணுமில்ல....." என்று கூறியவாறு நகர்ந்தார் டொக்டர்.

அதனைக் கேட்டதும் இருவரிடமிருந்தும் நிம்மதிப் பெருமூச்சுக்கள் வெளிவந்தன.

ஆனால் அப்பொழுது கலீலுக்குத் தெரியாது அடுத்த நாள் காலை தமது வாழ்வில் பெரும் இடியொன்று இறங்கப்போவது .அது அவனை மட்டுமா பாதித்தது ? இல்லை...... இல்லை........ பல்லாயிரக்கணக்கான ஜீவன்களை நோக்கியல்லவா அது வந்து சேர்ந்தது!

❀❀❀

## 2

இரவு ஆஸ்பத்திரியிலிருந்து பதினொரு மணிக்குப் பின்பு தான்வீட்டுக்குத் திரும்பியிருந்தாலும் வழமையைப் போல அதிகாலையிலேயே எழுந்து விட்டான் கலீல்.

"அல்லாஹுஅக்பர்....."

பெரிய பள்ளிவாசலில் கார் பெற்றி சக்தியில் சொல்லப்படும் அதான் ஒலிக்கும் போது தூய ஆடைகளை அணிந்து பள்ளிக்குப் போகத்தயாராகி விட்டான்.

"அல்லாஹு அக்பர்.... லாஇலாஹ இல்லல்லாஹ்..." அதான் கூறி முடிவதற்கிடையில் வாப்பா நிஸார் ஹாஜியாரும் பள்ளிக்குச் செல்லத்தயாராகி விட்டார்.

இருவரும் பள்ளியை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

"கலீல் இரவு சிவகுரு நாதனுக்கு நெஞ்சு வலியென்று சொல்லிச் சென்றாயே .....வரும் போது எப்படி இருந்தது?" என்று கேட்டார் நிஸார் ஹாஜியார்.

"வரும் போது கொஞ்சம் சுகம் வாப்பா..." என்றான் கலீல். அவனுக்கு தன் வாப்பாவை நினைக்கச் சந்தோசமாக இருந்தது. இரவு வந்து "வாப்பா மகேஸோடஅப்பாவுக்கு நெஞ்சுவலி வந்து விட்டது. நான் ஆஸ்பத்திரிக்குப் போகப்போகிறேன் வாப்பா" என்று கூறிய பொழுது, ஐநூறு ரூபாவைக் கொடுத்து அவசரமாக ஒரு டாக்சியைப் பிடித்துக் கூட்டிப்போ என்று கூறிய அவரது செயலை நினைத்து சந்தோசித்தான்.

"கலீல் இன்றைக்கு மகேஸோட வீட்டிற்குப்போய் எதேனும் சாமான் வாங்கிக் கொடுக்கோணுமென்றா வாங்கிக் கொடு" என்றார் வாப்பா.

அதற்குள் பள்ளிவாசல் வந்தது.

இருவரும் "ஹௌழை" அடைந்து வுழூசெய்து. முதலாம் வரிசையில் நின்று தொழுகையை முடித்தனர்.

வீட்டிற்குத்திரும்பி வந்தபின், ஏழு ஏழரை மணியிருக்கும் மகேஸின் வீட்டிற்குச் செல்வதற்காகப்புறப்பட்டுக்கொண்டிருந்தான். கலீல்,

அப்பொழுதுதான்

அந்தச் சம்பவம் - ஒரு பிரதேசத்தில் நூற்றாண்டு நூற்றாண்டாக வாழ்ந்து வந்த ஒரு சமுகத்தை அகதிகளாக்கிய அந்தப்பரிதாப சம்பவம் நிகழ்ந்தது.

வெளியேயிருந்து வந்த நிஸார் ஹாஜியார் மூச்சிரைப்புடன் "கலீல்... நம்மளெயெல்லாம் ஜின்னாஹ் மைதானத்துக்கு வரட்டாம்." என்று கூறினார்.

"ஜின்னாஹ் மைதானத்துக்கா...? எதுக்கு வாப்பா...?" என்று கேட்டான் கலீலின் தம்பி பர்த். இதற்குள் கலீலின் தாயார் பாரூக்காவும் அங்கே வந்தாள்.

எதுக்கோ தெரியல்லே... ஆனா, ஏதோ ஒரு தீங்கு நடக்கப்போகிறது போல இருக்கு..." என்றார் நிஸார் ஹாஜியார்.

அதனைக் கேட்டதும் அனைவரதும் நெஞ்சுகளிலும் இனம் புரியாத ஒரு பீதி தொற்றிக் கொண்டது.

அதே வேளை யாழ் வாசிகளான பத்தாயிரத்துக்கும் அதிகமான குடும்பங் களிலும் இந்த அறிவித்தல் பரபரப்பையும் படபடப்பையும் மூட்ட ஜின்னாஹ் மைதானத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள் ஆண்கள் அனைவரும்.

⁂

## 3

"உங்களுடைய பாதுகாப்புக்கருதி நீங்கள் இரண்டு மணித்தியாலங்களுக்குள் இந்த இடத்தை விட்டுப் போய் விட வேண்டும்". இந்த வார்த்தை தான் அனைத்து மக்களையும் கலக்கோ கலக்கென்று கலக்கிய வார்த்தைகள்.

'நாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த இந்தப் பூமியை விட்டுப் போவதா!'
'பள்ளி வாசல்களின் நிலை என்னாவது?'
'எங்கே போவது?'
'நோயாளிகள் இருக்கிறார்களே...!

இப்படிப் பலப்பல கேள்விகள் எழுந்தவர்களாக, பதட்டத்தில்ஆழ்ந்தார்கள் மக்கள்

"அவசரம்...அவசரம் கெதியா வெளிக்கிடுங்க..." என்றார் நிஸார் ஹாஜியார்.

"எதை எதை எல்லாம் எடுக்கிறது? என்று கேட்டாள் பாரூக்கா.

ஒன்னையும் கொண்டு போக முடியாது. அல்லாஹ்வோட வீடுகளான எத்தனையோ பள்ளிவாசல்களை விட்டுட்டுப் போறம்... வேற என்னத்தை விட்டுட்டு போனாத்தான் என்ன?" என்று விரக்தியுடன் கூறினார் நிஸார் ஹாஜியார். அதனைக் கேட்டதும் அனைவரது கண்களும் கலங்கின.

கலீலும் பர்த்தும் தங்களது உடுப்புகளை அழுதழுது கொண்டு சூட்கேசுக்குள் அடுக்கினர்.

'பிறந்த மண்ணைப் பிரியப் போகிறோம்' என்ற எண்ணமே அவர்களை வாட்டிக் கொண்டிருந்தது.

பிறந்த வீடு, தொழ ஆரம்பித்ததிலிருந்து உறவு பூண்ட இறை இல்லங்கள், நண்பர்களின் வீடுகள், படித்த பாடசாலை, நடந்து திரிந்த வீதிகள், ஓடி ஆடி விளையாடிய நிலங்கள் இவைகளையெல்லாம்.. பிரிந்து செல்வதா?

'அல்லாஹ்வே' ஏன் இந்தச் சோதனை? கண்ணீருடன் அமர்ந்திருந்தவர்களைப் பெற்றவர்களுடைய கரங்கள் அன்புடன் அணைத்தன.
"வாப்பா... நாம... நாம... இனி இங்கே வரவே ஏலாதா?" என்று கேட்டான் பர்த்

அதனைக் கேட்டதும் கணவனும் மனைவியும் ஒருவரை மற்றவர் கண்ணீருடன் பார்த்துக் கொண்டனர்.

விடை கூற முடிந்த கேள்வியா அது?

"பர்த் அல்லாஹ் நாடினா நாம மீண்டும் திரும்பி வருவோம் மகனே" என்றார் பெருமூச்சுடன்.

"அல்லாஹ் நாடுவானா வாப்பா?" என்று கேட்டது அந்தப் பிஞ்சு மனம்.

அக்கேள்வி தாயின் மனதைத் தாக்கி விட்டதுபோலும் மகனை இழுத்து அணைத்தவாறு விசும்பத் தொடங்கினார். நிஸார் ஹாஜியார் கலீலை அணைத்துக் கொண்டார்.

வாங்க போவோம்...." என்றவாறு முன்னால் நடந்தார். மற்றவர்கள் ஆளுக்கொரு சூட்கேசுகளைத் தூக்கியவாறு பின் தொடர்ந்தனர்.

கதவைப் பூட்டாமல் வெளியேறினார் ஹாஜியார்.

"வாப்பா.... கதவப் பூட்டவில்லையா வாப்பா?" என்று கேட்டான் பர்த்.

நிஸார் ஹாஜியார் விரக்தியாகப் புன்னகைத்தார். "பூட்டினாலும் அதுக்கு மதிப்பு இருக்காது பர்த். அதனால பூட்டாமலே போவோம்." என்றவாறு வெளியேறி நடந்தார்.

அப்போது வீதி முழுவதும் சன நெரிசலாக இருந்தது. ஒருவரா இருவரா? பல்லாயிரக் கணக்கானோர் இரண்டு மணி நேரங்களுக்குள் ஒருபிரதேசத்தை விட்டு வெளியாவதென்றால் அது சாமான்யமான செயலா?

அனைவருடைய மனங்களிலும் ஏக்கம்.

'எங்கே போவது?'

வீதி முழுவதும் ஆயுதமேந்தியவர்களின் நடமாட்டமாக இருந்தது.

வயோதியர்களையும், நோயாளிகளையும் கொண்டிருந்த குடும்பங்களின் பாடு வெகு சிரமமானதாக இருந்தது.

'இவர்களையெல்லாம் எப்படிக் கொண்டு சேர்ப்பது?'

நிஸார் ஹாஜியார் குடும்பத்தினரை அழைத்தவாறு கிலோமீற்றர் கணக்கில் நீண்டு சென்ற கூட்டத்தின் பின்சென்று நின்றார்.

"ஏன் வாப்பா இங்கே நிற்கின்றீங்க?" என்று கேட்டான் பர்த்.
"இங்கே எமது உடமைகளைச் சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்தான் நாம் வாகனங்களில் ஏறலாம்." என்றார் ஹாஜியார்.

"யா அல்லாஹ்.... இவ்வளவு பேரும் சோதனைக்குட்படுத்தப்படுவதென்றால் எவ்வளவு நேரம் செல்லும்?" என்று கவலையுடன் வினவினாள் பாரூக்கா.

அதனைக் கேட்ட நிஸார் ஹாஜியார் சிரித்தார். "பாரூக்கா நமக்கே இப்படியென்றால் நமக்குப் பின்னால் நிற்பவர்களுக்கு அதிலும் நோயாளிகள் வயோதிபர்களுக்கு எப்படி இருக்கும்?" என்று கேட்டார்.

"நமக்குப் பின்னாலா," என்று கேட்டவாறு அதிர்ச்சியுடன் திரும்பினாள் பாரூக்கா.

அவர்கள் வந்து நின்ற இரண்டு நிமிடங்களுக்குள் அவர்களுக்குப் பின்னால் முன்னூறு நானூறு பேருக்கு மேல் நிற்பதைக் கண்டு சிலையாகி நின்றாள் பாரூக்கா.

"ஆ, அல்லாஹ் என்ற கால்...காலமிதிக்காத தம்பி..."
'மணி மூணுமுப்பதாச்சி ஒஹர் கழாவாகப் போகுது'

'உம்மா... உம்மா... எனக்குப் பசிக்குது..'

'அல்லாஹ்... என்ட புதுச்சட்டை போயிட்டுதே..."
"ஆ ... எனக்கு மயக்கம் வருது..."
'இங்க வாங்க என்னட வாப்பா ஒரு மாதிரியாகி வாறாரே... பேசமாட்டேங்கிறாரே..."
'மகள்... என்ற மகளைக் காணவில்லையே....'
"உம்மா என்னை விட்டுப் போயிட்டிங்களா"

"காசு... என்ட காசெல்லாம் போயிட்டுதே.."

துயரம் நிறைந்த அவல வார்த்தைகள் எங்கும் ஒலித்துக் கொண்டிருந்தன.

"இறைவா! என் இந்தச் சோதனை?" நிஸார் ஹாஜியார் கண்களை மூடிக்கொண்டு யோசித்தார். "வாப்பா ... கால் வலிக்குது ..." என்றான் பரீத். இன்னும் கொஞ்ச நேரந்தான் பரீத் என்றார் ஹாஜியார். 'என்னால நிக்க முடியாது வாப்பா' என்று சிணுங்கினான் பரீத். 'கொஞ்ச நேரம் இப்படி உக்கார் பரீத்' என்று அவனுடைய தலையைத் தடவிக் கொடுத்தார் நிஸார் ஹாஜியார்."இங்க பார் முன்னாலே நின்ற கூட்டமெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா குறைஞ்சிட்டுது இன்னும் பத்து இருபது நிமிஷங்கள்ல நாமும் போயிடலாம்." என்றார். கலீல் உள்ளத்தில் துயரம் உலவ, சுற்றும் முற்றும் நோக்கிக் கொண்டிருந்தான்.

'எப்படிப்பட்ட அவல நிலை எமக்கு ஏற்பட்டு விட்டது?' கலீல் பெட்டியைத் தூக்கு' உம்மாவின் குரலால் எண்ண உலகிலிருந்து மீண்டு முன்நோக்கினான். இவனுடைய வாப்பா பெட்டியைத்திறந்து காட்டிக் கொண்டிருந்தார். உம்மாவை அருகிலுள்ள ஒரு வீட்டிற்குள் சோதனை செய்ய சில பெண்கள் அழைத்தார்கள்.

"அல்லாஹ் நான் வைச்சிருந்த நகையெல்லாம் போயிடுச்சே. அம்மா... தயவு செஞ்சு அதையெல்லாம் தந்திடு...நான் இடியப்பம் புட்டு அவிச்சு இத்தன வருசமா நெருப்பில இருந்து சிறுகச்சிறுக சேர்த்த நகை என்னோட இரண்டு குமர்களுக்காக வைச்சிருக்கிற சொத்து... தயவு செஞ்சு தந்திரு.." என்று அலறிக்கொண்டே கெஞ்சிய ஒரு பெண் விரட்டப்பட்டாள்.

'யா அல்லாஹ் நீயே இதுக்கு வழி செய்...' என்று மனமுருகி அழுதவாறே வெளியேறினாள் அவள்.

இப்படி ஒருவரா இருவரா சிறுகச் சிறுகப்பாடுபட்டு கறையான் கட்டிய புற்றை பாம்பு அபகரிக்கிறதே!

கலீல் அமைதியாகப் பெட்டியைத் திறந்து காட்டினான். மூன்று புதிய ஆடைகள் வெளியேறி வெளியே குவிக்கப்பட்டிருந்த உடை மலையோடு சேர்ந்தன.

"வாப்பா.. என்னட புதுசேட்..." என்று பரீத் புலம்பியவாறே ஹாஜியாருடன் சென்றான். கலீல் அமைதியுடன் பெட்டியை மூடி எடுத்தவாறு அப்பால் சென்றான். "நில்" என்றவாறு ஒருவன் மேலும் கீழும் சோதித்தான். அவன் பக்கெட்டிலிருந்த மூவாயிரம் ரூபாய் எடுக்கப்பட்டு நூற்றைம்பது ரூபாய் கொடுக்கப்பட்டது. தாயும் வந்து அவர்களோடு சேர்ந்து கொண்டாள். எல்...எல்லாம் போயிட்டுதுங்க"

"ம்ம்..." பெருமூச்செறிந்தார் ஹாஜியார். 'யா அல்லாஹ்' அப்போது ஓடி வந்தான் மகேஸ்

"க...கலீல்... உங்கள.... போகச்சொல்... லீட்டாங்களாமே... இனி உன்னைச் சந்திக்கவே முடியாதா?" கேட்டவாறு இறுக அணைத்துக் கண்ணீர் வடித்தான். அதனைக் கண்டதும் ஹாஜியாரும் மனைவியும் கூட கண்ணீர் சொரிந்தனர்.

"இன்ஷா அல்லாஹ் இறைவன் நாடினால் மீண்டும் உன்னை இந்த மண்ணில் சந்திப்போம் மகேஸ்"

விடைபெற்றவாறு நடந்தார் நிஸார் ஹாஜியார். நண்பனைத்திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு வெளியேறி நடக்கத் தொடங்கினான் கலீல்.

***

## 4

'ஓ! பிறந்து... தவழ்ந்து... வளர்ந்து... ஓடி ஆடிய மண்ணை விட்டுப் பிரிந்து செல்கின்றோமே' திரும்பி வருவோமா?, நினைக்க நினைக்கத் துயரம் பெருகியது கலீலுக்கு. "நபியவர்களும் மக்காவை விட்டுப் பிரிந்து மதினாவுக்குச் செல்லும் பொழுது இப்படித்தானே வேதனை அனுபவித்திருப்பார்கள்" என்றான் கலீல் "இல்லை....இல்லை அவர்கள் அவ்வேளையில் அனுபவித்த துன்பங்கள், ஆபத்துக்களின் முன்னால் இது அற்பமானது அதன் முன்னால் இது தூசை விடவும் பெறுமதியற்றது" என்றார் நிஸார் ஹாஜியார்.

அவருடைய பேச்சு மற்றவர்களுக்குத் தெம்பை ஊட்டியது. ஆம்... நபியவர்கள் அனுபவிக்காததையா நாம் அனுபவிக்கிறோம்... இல்லவே இல்லை!

அவர்களின் முன்னால் இரு இளைஞர்கள் தமது நோயாளித்தாயை தூக்கிச் சுமந்தவாறு நடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

வீதியின் இரு மருங்குகளிலும் சைக்கிள்கள் குவிக்கப்பட்டிருந்தன."ஓ!சைக்கிள்களைக் கொண்டு போகலாமென்றல்லவா கூறினார்கள். உம்... இழந்த மற்றவற்றின் முன்னால் சைக்கிளாவது மண்ணாங்கட்டியாவது..."என்று கூறினான் கலீல்.

"அதோ தூரத்தில் ஒரு லொறி நிற்குது.. விரைவா வாங்க அதில ஏறிடலாம்..." என்றவாறு விரைந்து நடந்தார் நிஸார் ஹாஜியார். சிறிது நேரத்தில் அவர்கள் அதற்குள் சிறைப்பட்டார்கள். பலர் லாறியின் மேலே ஏறினார்கள். 'ஆடு மாடுகளை விடவுங் கேவலமாகி விட்டோம் அவைகளைக் கூட இப்படி நெருக்கமாக ஏற்றமாட்டார்கள்...'என எண்ணிக் கொண்டான் கலீல்.

"ஆ நெருக்காத தள்ளிப்போடா தம்பி..."
"குழந்தை...குழந்தை... கையைத்தள்ளிவை.."
காலஅசட்டாத, குத்தி வைச்சுக் கொள்ளு"

வயோதிபர்கள், உடல் நலமில்லாதோரின் கூச்சல்களைச் சட்டை செய்யாமல் லாறி புறப்பட்டது கோரதீவை நோக்கி!

***

### 5

மழை சோவெனக் கொட்டிக் கொண்டிருந்தது. காற்றுப்பலமாக வீசிக் கொண்டிருந்தது. 'ஒதுங்குவதற்குஇடம் எதாவது உண்டா?' அனைவருமே குளிரில் நடுங்கிமழையில் நனைந்தவாறு நாற்புறமும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஊஹும்... அந்த வெட்டவெளி நிலத்தில் எங்குபோய் ஒதுங்குவது. குழந்தைகள் வீறிட்டு அழுதன! தாய்மார்கள் தேற்றவழியில்லாமல் அழுது கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் அனைவருமே "மஹ்ஸரை" நினைத்துக் கொண்டனர். காலையிலிருந்து மாலை வரை கால கடுக்க வரிசையில் சோதனைக்காக நின்று, அதன் பின் ஆடுமாடுகளையும் மிஞ்சிய முறையில் லாறிகளில் அடைபட்டு, வந்து சேர்ந்த பாட்டைக் கூறினால் யாவருமே கண்ணீர் வடிப்பர்.

அவ்வளவு துயரங்களையும் சுமந்து, கைகால்கள் விறைக்க, உடல் சோர வந்தவர்கள் எங்காவது சாய்ந்து ஓய்வெடுப்போம் என்று எண்ணினால், இங்கு எப்படியிருக்கின்றது.! ஓ கால் தடுக்கி விழுந்து, தலை உடைந்தவன் மேல் தேங்காய் விழுந்த கதையல்லவா அது!!

இந்தத் துன்பம் இவ்வளவு வேதனையைத் தருகின்றதென்றால் மஹ்ஸரில் எப்படியிருக்கும்...? நினைத்ததுமே உள்ளம் பதைத்தது.

'யா அல்லாஹ்...எங்களைக் காப்பாத்து... இந்தத் துன்பங்களிலிருந்து எங்களுக்கு விடுதலையைத்தா. யா அல்லாஹ் ... நாங்கள் செய்த பாவங்களை மன்னிப்பாயாக... யா அல்லாஹ்! எக நாயனே! எம்மைக் காத்தருள்..'

அனைவருடைய வாய்களும் அசைந்தன. உள்ளம் உருகப் பிரார்த்தனை செய்தார்கள். சிறிது நேரத்தில் மழை ஓய்ந்து, பலமான காற்றும் குறைந்தது.

அனைவரும் நிம்மதிப் பெருமூச் செறிந்தனர். ஆனால் அப்பொழுது அவர்கள் இதைவிடவும் துன்பங்கள் காத்திருப்பதை அறியவில்லை.

***

### 6

கோரதீவுக் கரையிலேயே அனைவரும் அன்றைய இரவைக் கழித்தனர். விழித்திருந்து.

அதிகாலை நேரம்.

மிகுந்த சிரமத்தின் மத்தியில் பலர் ஒன்றிணைந்து சுபஹ் தொழுகையை ஜமா அத்தாகத் தொழுது முடித்தனர்.

தொழுது திக்ருகள், துஆக்கள் முடிந்த பின்பு ஒருமுழுநாள் பசியின் அகோரம் உடம்பைப் பாதிக்க அனைவரும்சேர்ந்து அமர்ந்திருந்தனர்.

அன்று கர்ப்பிணிப் பெண்களுக்கும் கைக் குழந்தைகளின் தாய்மார்களுக்கும் பெரும் சிரமம் ஏற்பட்டது.

மணலில் அமர்ந்திருந்த கலீல் நேற்று அதிகாலை சுபஹ் தொழுகை தொழுததற்கும் இன்று தொழுததற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை எண்ணி வியந்தான்.

பிறந்த மண்ணில், தூய ஆடையுடுத்தி, ஓரிரு மணிநேரங்களுக்குப் பின் நடக்கப்போகும் பயங்கரத்தை அறியாதவர்களாகத் தொழுத நேற்றைய தொழுகைக்கும்

அலைந்து திரிந்து, களைத்து பசியுடன் வெட்டவெளியில் மணலில் தொழும்இன்றைய தொழுகைக்கும் இடையில்தான்

எத்தனை துன்பங்கள்

எத்தனை துயரங்கள் நிகழ்வுகள்!

ஓ... நாளைய தொழுகைக்கு இடையில்.. சிரிப்பு வந்தது

பிறந்த எவனுக்குமே எந்த வினாடியும் மரணம் ஏற்படலாமென்ற நியதியில் இது என்ன கற்பனை

இந்தத் துயரிலிருந்து எப்பொழுது விடுதலை?

விடுதலை கிடைக்குமா?

மனம் ஏங்கியது

இருப்பினும் 'அல்லாஹ் காப்பான்' என்ற நம்பிக்கை உள்ளத்தில் ஆழப் பதிந்திருந்தது. அதே எண்ணத்துடனேயே அனைவரும் இயங்கிக் கொண்டிருந்தனர்.

"ம்.... பாரூக்கா......கலீல், பரீத்...... எழும்புங்க ...... லைனில் நின்று போறதுக்கு டிக்கட் எடுக்கொனும்" என்றவாறு எழுந்தார் நிஸார் ஹாஜியார்.

மூவரும் அலுப்புடன் எழுந்தனர்.

"என்னத்துக்கு வாப்பா டிக்கட்.....? " என்று கேட்டான் பரீத்.

"இது கோரதீவு நாம சங்குப்பிட்டிக்குப்போறதுக்கு 'போட்டில'தான் போகோனும். அதுக்குத்தான் லைனில் நிண்டு டிக்கட்ட எடுக்கோணும். " என்றவாறு நடந்தார்.

மீண்டும் ஒரு நெரிசல் மிகு வரிசைக்குள் மாட்டினார்கள் அவர்கள்.

"யா அல்லாஹ் இந்தக் கூட்டத்திலே மாட்டுப்பட்டு யாருக்கும் ஆபத்து வரக்கூடாது". என்று பிரார்த்தித்தான் கலீல். கூட்டம் ஆமை வேகத்தில் நகர்ந்தது. அக்கூட்டம் வாயு வேகத்தில் பெருகலாயிற்று

நான்கு, ஐந்து மணித்தியாலங்களுக்கு மேலாக அந்த இடத்தில் செலவழித்தபின் நிஸார் ஹாஜியார் டிக்கட் எடுத்தார்.

அதன் பிறகு அவர்கள் ஏரிக்கரையில் படகுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். மறுகரையிலிருந்து ஒருபடகு திரும்பி வந்தது. அதிலே நிஸார் ஹாஜியாருக்கு முன்பாகக் காத்துக் கொண்டிருந்தவர்கள் ஏறினார்கள்.

அப்பொழுது ஒரு வயோதிய மாதுவை மிகுந்த சிரமத்தின் மத்தியில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

"அடுத்த படகிலும் இடம் கிடைக்காது. அதற்கடுத்த படகில்தான் கிடைக்கலாம்..... " என்றார் ஹாஜியார்.

அப்பொழுது.

"டொபுக்......ப்ளிக்....." என்றொரு சத்தம்கேட்டது. பார்த்தார்கள். அந்த வயோதிப மாது படகிலிருந்து தவறி விழுந்து "ஆ.. ஆ... அல்லாஹ்..." என்று கத்திக் கொண்டிருந்தார். உடனே மற்றவர்கள் அவளைத்தூக்கி, அருகிலிருந்தவர்கள் பிடித்துக் கொள்ள, படகு புறப்பட்டது.

அடுத்த படகும் வந்து ஆட்களை ஏற்றிச் சென்றது. அதற்கடுத்த படகிலும் நிஸார் ஹாஜியார் குடும்பத்தினருக்கு இடம் கிடைக்கவில்லை. அடுத்த படகில் ஏறினார்கள். படகு புறப்பட்டு மறுகரையை அடைந்தது. அங்கே, அவர்களின் பசி போக்க ஏக இறைவன் வழியமைத்திருந்தான். ஒரு சிறு தேனீர்க்கடை சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உழைக்கும் நோக்கத்தில் அங்கு நிறுவப்பட்டிருந்தது. அனைவரும் அதை நோக்கிப் படையெடுத்தனர்.

***

## 7

சங்குப்பிட்டியில் தங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அங்கிருந்து புறப்பட்ட லொறிகளில் நெருக்கியடித்துக் கொண்டு தொற்றினர்.

மீண்டும் மந்தைப் பயணம்! இம்முறை அந்தப்பிரயாணம் அதிகம் சிரமங் கொடுக்கவில்லை. காரணம் அது சிறிது பழக்கப்பட்டுப் போனதுதான் போலும்!. இருப்பினும் இயலாதவர்கள் நொந்து அழுகுரலிடத்தான் செய்தார்கள். அன்றைய பிரயாணம் முழுவதும் மழையிலேயே தான் நடந்தது. லொறியின் மேல் இருந்தவர்கள் மழைத்துளியின் உக்கிரமான தாக்குதலைத்தாங்க முடியாமல் கதறினர். ஒருபுறம் மண்டை வெடித்துவிடும்போலிருக்கமறுபுறம் குளிரால் உடம்பு நடுநடுங்கியது. பற்கள் 'கிடுகிடுகிடு' வென மோதின. உடல் முழுவதும் நீர் வழிந்தோடியது..

ஓ! வாழ்க்கையில் இதுவரை அனுபவித்திராத பயங்கரப்பயணம். உள்ளே இருந்தவர்கள் மட்டும் சௌகரியத்துடன் பயணம் செய்தார்களா என்ன?

அவர்களுக்கு கைகால்களை மடக்கி, நீட்ட முடியாது, நகர முடியாது. உடம்பே விறைக்கத் தொடங்கியது. அந்த மழையிலும் நெரிசல் காரணமாக வியர்வை ஆறாகப் பெருகியது. பலமாக வீசிய் காற்றோடு, உள்ளெழுந்த கூக்குரல்களும் சேர்ந்து இரைச்சலாகி காதுகளை அடைத்தன. இந்தப் பெருமழையால், லாறி மெதுமெதுவாகவே நகர்ந்தது. இருப்பினும் அன்று இரவுக்குள் பூநகரி வந்தது. பூநகரிப் பாடசாலைக்கு முன் லாறி நின்றது. அனைவரும் வலையில் சிக்கி, எதிர்பாராமல்விடுதலை பெற்ற புறாவைப்போல் சந்தோஷத்துடன் இறைவனுக்கு நன்றி செலுத்தியவர்களாக பாடசாலைக்குள் ஓடினார்கள். அத்துடன் கஷ்டங்கள் முடிந்தனவா? இல்லவே இல்லை.

ooo

## 8

பூநகரியில் தங்கியதைப்பற்றியோ அங்கிருந்து புறப்பட்டதைப் பற்றியோ அதிகம் கூறத் தேவையில்லை என்றே கூறலாம். ஏனெனில், அதற்கடுத்த நாள் தங்கிய இடமும் அனுபவித்த சுகபோகங்களும் அப்படிப் பட்டவையே!

பூநகரியில் புறப்பட்ட லொறிகள் ஓரிரு இடங்களிலிருந்து சிறிது சிறிது தங்கி, அங்கிருந்து வெகு நேரங்கழித்து விடத்தல் தீவை அடைந்தன. விடத்தல் தீவு ஆஸ்பத்திரியில் அன்று தங்க இடம் கிடைத்தது. ஆம், அந்த நேரத்தில் அனைவரும் ஆஸ்பத்திரியில் தங்க வேண்டியது அவசியம்தான். ஆனால், அங்கு சிகிச்சையளிக்கத்தான் வைத்தியர்களோ, மருந்துகளோ இல்லை.

அன்றைய இரவும் அதிக விசேஷம் இல்லை. அடுத்த நாள் விடிந்தவுடன் லாறிகள் புறப்பட்டன. அனைவரும் முண்டியடித்துக் கொண்டு ஏறினர்.

"வாப்பா... நாம எங்கே போகிறோம்?" என்று கேட்டான் கலீல். அதனைக் கேட்ட நிஸார் ஹாஜியார் சிரித்தார். "அல்லாஹ்ட நாட்டம் நாம எங்க போகோணுமெண்டு இருக்கோ அங்கேதான் போய்ச்சேருவோம்." என்றார்.

லாறிகள், மேடு, பள்ளம், கல்லு, முள்ளு என்ற அந்தஸ்த்து பேதமின்றி ஏறி இறங்கி ஓடியது. உள்ளே இருந்தவர்கள்தான் அந்த லாறியின் சமத்துவத்தின் பலனை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். பல இடங்களில் வீதிகளின் (அவை வீதிகள் தானா?) இருமருங்கிலும் மண்டியிருந்த காட்டு மரங்களின் கிளைகளும் கூரிய முட்களும் லாறியின் மேலிருந்தவர்களை நன்கு பதம் பார்த்தன. லாறிகள் ஓடிக் கொண்டேயிருந்தன.

***

## 9

அன்று நள்ளிரவு தாண்டிய பிறகு பூந்தோட்டத்தை அடைந்தன. பூந்தோட்டத்தில்தான் இதுவரை கண்டிராத சந்தோஷ சமாச்சாரங்கள் கிடைக்கலாயின.

பூந்தோட்டத்தை அடைவதற்கு முன்பே, பெருமழை பிடித்துக் கொண்டதால் அனைவரும் 'அங்கு பாடசாலை செல்லுமட்டும் எப்படியாவது பொறுத்துக் கொள்வோம்'. என்று மனதைத்திடப்படுத்திக் கொண்டு பிரயாணம் செய்தனர்.

ஆனால், ஒரு மைலின் முன்பே லாறிகள் நின்று விட்டன. அங்கு போய்ச் சேர்ந்த பின்பு நிலைமை வேறுவிதமாக ஆகியது. அப்பாடசாலை மிகவும் சிறியதாக இருந்ததால் முதல் லாறியில் போய் இறங்கியவர்களுக்கே இடம் கிடைக்க வில்லை. முன்பாகச் சென்ற சிலர் மட்டுமேசிறுசிறு கட்டிடங்களுக்குள் சென்றனர்: கட்டிடங்களில் நிற்பதற்குக் கூட இடமில்லை என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு மற்ற லாறிகள் ஒன்றொன்றாக நிறுத்தப்பட்டன. லாறிகளிலிருந்து அவசரத்துடன் இறங்கி ஓடி வந்தவர்கள் திகைத்தனர்.

ஆ! இடமில்லை

இப்பொழுது என்ன செய்வது.?

இரவு தூங்கத் தேவையில்லை. ஆனால், இந்தப் பெரு மழையின் கொடிய தாக்குதலிலிருந்து சிறிது ஒதுங்குவதற்காகவாவது ஒரு இடம் ஒரு சிறு இடம் - ஊஹூம்... ஒரு சிறு ஒதுக்கம் கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. கண்ணீருடன் அழுதவாறு செய்வதறியாது திகைத்தனர். இதற்குள் சிலர் "நம்முடைய லாறிகளுக்குள்ளாவது போய் இருப்போம்" என்றவாறு போக முயன்றனர். ஆனால் ஒரு மைல் தூரத்திலுள்ள லாறியைச் சென்றடைய முடியாதவாறு வீதிகளில் பெருவெள்ளம் கட்டி விட்டது. அந்தக் காரிருளின் பெருவெள்ளத்தில் நடந்து செல்வது மடத்தனம் என்பதை அறிந்து யாருமே முயற்சிக்கவில்லை.

முடிவு.

சிறியவர்கள், பெண்கள், வயோதிபர்கள், நோயாளிகள் என்று அனைவரும் அந்தப் பெரு மழையில் நனைந்தவாறு நடுங்கிக் கொண்டிருந்தனர்.

"யா அல்லாஹ் ... எம்மை இந்தக் கொடுமைகளிலிருந்து காப்பாற்று யாஅல்லாஹ்... நீ சோதிக்க நினைத்து விட்டால் எங்களால் தாங்க முடியாது யா அல்லாஹ்" என்று அனைவரும் கண்ணீர் வடித்து அழுது பிரார்த்திக்கத் தொடங்கினர்

▲▲▲

## 10

மக்கள் அனைவரும் மனமுருகி வேண்டிய பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டதைப் போல் அதிகாலை புலர்ந்த பொழுதுமழை விட்டிருந்தது. ஆயினும் மக்களின் நடுக்கம் தீரவில்லை. அமர்ந்திருந்த இடத்தை விட்டு நகராமல் அப்படியே அமர்ந்திருந்தனர். சிறிது சிறிதாக விடிந்து, பகலவனும் நடு உச்சிக்கு வந்தான். சூரியக் கதிர்கள் உடம்பைத்தாக்கிய போதுதான் அவர்களின் நடுக்கம் சிறிது சிறிதாகக் குறைந்தது.

"வாப்பா... பசிக்குது..." என்றான் பரீத்

"சரி வா பாப்போம் ஏதாவது கடைகள் இருக்கின்றதா எண்டு.." என்று கூறிய நிஸார் ஹாஜியார் பரீதையும் கூட்டிக் கொண்டு வெளியே சென்றார். கலீலும் அவர்களுடன் சென்றான். தூரத்தில் ஒரு மங்கலான பெற்றோல்மாக்ஸ் வெளிச்சத்தில் ஒரு சிறு கொட்டில் கடை தென்பட்டது.

வடிந்தும் வடியாமலும் ஓடிக் கொண்டிருந்த வெள்ளத்தில் 'தளுக்.புளுக்' என்று சப்தமிட்டவாறு முன்னால் நடந்து சென்றான் பரீத். அவனைப்பார்த்ததும் கலீலுக்கு மனவருத்தம் ஏற்பட்டது. 'பாவம் சரியான பசி.. அதுதான் இவ்வளவு அவசரப்படுகிறான்' என்று எண்ணிக் கொண்டான். கடையை நெருங்கிய போதுதான் அக்கடையில் இவர்கள் எதிர்பார்த்தவாறு எதுவும் இல்லையென்று தெரியவந்தது.

ஒரு ரொட்டி மேசையில்நெல்லிக்காயளவு சிறு சிறு உருண்டைகளை வீசி, ரொட்டிக்கல்லில் போட்டுக் கொண்டிருந்தான் ஒருவன். அதனைச் சுற்றிப் பலர் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரையும் கடந்து தமக்குக் கிடைப்பதற்கு ஒருமணித்தியாலத்திற்கு மேற் செல்லும் என்பதை உணர்ந்த நிஸார் ஹாஜியார் வேறு ஏதாவது இருக்கின்றனவா என்று பார்த்தார். வேறு ஒன்றுமே இல்லை.

'கொஞ்ச நேரம் பொறுத்துக்கொள் பரீத். இவங்கெல்லாம் வாங்கினத்துக்குப் பின்னாலதான் நாம வாங்கலாம்.'என்றார். அதனைக் கேட்ட பரீத் மெதுவாகச் சிணுங்கினான். வாழ்க்கையில் பசி என்றால் என்னவென்றே தெரியாத அவனால் இதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. "வாப்பா பசிக்குது.." என்று மெதுவாகக் கூறினான். அவன் கூறியது ரொட்டிகள் சில வாங்கிக் கொண்டு போகத் திரும்பிய ஒருவருக்கு விளங்கவே. பரீதை நெருங்கி அன்புடன் தடவிக் கொடுத்தவாறு 'இந்தா தம்பி சாப்பிடு...' என்று கூறி இரண்டு ரொட்டிகளைக் கொடுத்தார். அதனைக் கண்டு கண் கலங்கிய நிஸார் ஹாஜியார் ஐந்து ரூபாயை எடுத்து 'இந்தாங்க காதர் நானா இதற்கு நீங்க ரொட்டி. வாங்கிகுங்க' என்று கொடுத்தார். அதனைப் புன்னகையுடன் மறுத்தார் காதர் நாநா. "நிஸார்

நீ ஊரிலே எத்தனை பேருக்கு உதவி செய்திருக்கிறே, எத்தனை குமர்களுக்காக வாரிக் கொடுத்திருக்கிறே. ஏன் எனக்குக் கூட நீ எவ்வளவு உதவிகள் புரிஞ்சிருக்கிறே பரவாயில்ல. நீயே வச்சிக் கொள்ளப்பா... " என்றவாறு நகர்ந்தார். அதனைக் கண்டதும் கலீலின் கண்கள் பனித்தன.

***

## 11

'பார்த்து நடவுங்க வாப்பா' என்றான் கலீல் 'உம்மா கவனம்' என்றான் பரீத். அனைவரும் சேற்றுக்குள் நடந்து கொண்டிருந்தனர். அவர்கள் ஒருவரை மற்றவர் பிடித்துக் கொள்ள முடியாதவாறு அவர்களுடைய தலையில் சுமைகள் ஏறியிருந்தன. அவைகளை இரு கைகளாலும் பற்றியபடி மெதுமெதுவாக நடந்து கொண்டிருந்தார்கள்.

"தொபுக் கடீர்" நிஸார் ஹாஜியார் கீழே விழுந்து விட்டார். 'வாப்பா!' என்று கத்தியவாறு தலையிலிருந்த சூட்கேசைக் கீழே போட்டு விட்டு வாப்பாவைத்தூக்கி விட்டான் கலீல்.

நிஸார் ஹாஜியாரின் உடுப்பெல்லாம்சேறு! நிஸார் ஹாஜியார் பெட்டியைத் தூக்கியபடி தொடர்ந்தார்.' 'கவனம் வாப்பா.. கவனமா நடவுங்க.' என்றவாறு. பின்னால் போனான் கலீல்

'தொடர்ந்தாப்போல பத்து நிமிடங்கூட நடக்காதவர்... எப்படி இதுல நடக்கிறது.?' என்று கண் கலங்கினாள் பாரூக்கா.

'தொப்' இப்பொழுது வேறுயாரோ விழுந்தார்கள். தூக்கி விட்டபின் மீண்டும் நடந்தான். ஆகவும் நடக்க முடியாதவர்களை மட்டும் சைக்கிளில் ஏற்றி உருட்டிச் செல்ல கூலிக்கு ஆட்களை அமர்த்தியிருந்தார்கள். மற்றவர்கள் அனைவருமே நடந்துதான் சென்றார்கள். நான்கு மைல்களுக்கு அதிகமான அந்தச் சேற்று நிலத்தை அவர்கள் கடந்த பொழுது ஏறத்தாள அனைவருமே விழுந்து எழும்பி சேறு பூசப்பட்டவர்களாகவே இருந்தனர். போய்ச் சேர்ந்த களைப்புடன் மீண்டும் ஒரு 'கியூ'வில் நெருக்குப் பட்டார்கள். அங்கே இராணுவம் அனைவரையும் சோதனையிட்டுக் கொண்டிருந்தது.

***

## 12

சோதனை முடிந்த பின் அனைவரும் வவுனியா பாடசாலையைச் சென்றடைந்தனர். அங்கே, குளித்து சுத்தமாகி தங்களுடைய உடல் சோர்வை ஓரளவு போக்க அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அன்று வெள்ளிக் கிழமை. மதியம்பன்னிரண்டு இருபதுக்கு அதான் ஒலி கேட்கவே, தங்களின் துன்பங்களைப் போக்கி நிம்மதியுடன் இருக்க வழிவகுத்த அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்காக அனைவரும் 'ஜும்ஆ' தொழுவதற்காக பள்ளிவாசலை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

***

## 13

"அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்..." சுபஹ் தொழுகைக்கான அதான் ஒலிக்கும் போது, கலீலும் பரீத்தும் முன்னால் சென்று கொண்டிருந்த வாப்பாவின் பின்னால் அகதி முகாமில் அமைந்திருக்கும் பள்ளிவாசலை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். கலீலின் மனதில் பழைய சம்பவங்கள் அனைத்தும் வலம் வந்தன. பெரும் சிரமங்களின் மத்தியில் வவுனியா வந்தது. அங்கிருந்து பலரும் பல பகுதிகளுக்கும் பிரிந்து சென்றது. தாங்கள் 'எங்கே போவது?' என்று தெரியாத நிலையில் நிற்கும் பொழுது ஒரு மினிபஸ் பாடசாலை வாசலில் நிற்க கொண்டக்டர் 'புத்தளம்... புத்தளம்' என்று அழைத்தது அதில், தாங்களும் ஏறியது. வழியில் அந்த பஸ்காரன் காசைப்பிடுங்கிக் கொண்டு அநுராதபுரத்தில் இறக்கிவிட்டு ஓடியது. அதன் பின் அங்கிருந்து புறப்பட்ட பஸ் ஒன்றில் நின்று கொண்டே புத்தளம் நோக்கி வந்து பாடசாலைகளில் தஞ்சம் புகுந்து, அதன் பின் ஊரார், சமூக சேவை நிறுவனங்களின் உதவியுடன் முகாம்களில் குடியேறியது. அரசாங்கம் தரும் நிவாரணத்தோடு, சில நல்ல மனம் படைத்த கொடை வள்ளல்கள் செய்யும் உதவிகளையும் சேர்த்து வாழ்க்கையை ஓட்டி வருவது அனைத்துமே அவன் கண் முன் திரைப்படம் போல் ஓடியது.

தொழுது விட்டு வரும் பொழுது வாப்பாவிடம் "வாப்பா... நீங்கள் அன்று கூறினீர்கள் அல்லாஹ்ட நாட்டம் நாங்க எங்க போகோணுமெண்டு இருக்கோ அங்கே தான் போய்ச் சேருவோம் எண்டு. நாம புத்தள மண்ணில வாழ வேண்டி எழுதி இருக்கு. இங்க வந்திருக்கோம்". என்றான் . அதனைக் கேட்ட நிஸார் ஹாஜியார் அமைதியாகப் புன்னகைத்தார்.

வீடு வந்ததும் " இன்டைக்கு நிவாரணம் கொடுக்கிறார்களாம் என்று பாரூக்கா கூறினாள். கலீல் பாடசாலைப்புத்தகங்கள் எடுத்து வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். நிவாரணக் கொப்பிகளையும், சாக்குகளையும் எடுத்த நிஸார் ஹாஜியார், புறப்பட்டு கால் நடையாக நடந்து சென்று அந்த அதிகாலையிலேயே கூடிவிட்டிருந்த வரிசையின் பின்னால் நின்று ஒன்பதரைக்குத் திறபடும் யூனியனை எதிர் பார்த்து நின்றார்.

**முற்றும்**

***

# 'அகதி'களுக்கு அமைச்சர் அஷ்ரப்(f)பின் வாக்குறுதிகள்

தேர்தல் காலத்தில்

* இனப்பிரச்சினையை தீர்க்கக் கூடிய திராணி சந்திரிகா அம்மையாருக்கே உண்டு. அதற்கு முன்னர் புலம் பெயர்ந்த மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவே சந்திரிகா - அஷ்ரப் உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினையை முதலில் தீர்க்காவிட்டால் ஒப்பந்தத்தை விலக்கவும் தயங்கமாட்டேன்.

06.08.1994 **வீரகேசரி**

* இந்நாட்டில் ஆட்சி அமைக்கப்போகின்ற பொ.ஐ.மு. .தலைவி சந்திரிகா பண்டாரநாயக்காவை வெற்றியின் பின்னர் ஒவ்வொரு அகதிமுகாமுக்கும் கூட்டி வந்து இந்த மக்கள் படும் துன்பங்கள், இன்னல்களை நேரில் காண்பிக்க ஆவன செய்வதுடன் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பேன்.

06.08.1994 **வீரகேசரி**

அமைச்சரான பின்னர்

* 365 நாட்களுக்குள் அகதிகள் பிரச்சினை தீர்க்கப்படும்

24.08.1994 **தினகரன்**

* புனர்வாழ்வு அமைச்சு ஒரு வருட காலத்தினுள் ஒழிக்கப்படும்.

24.08.1994 **வீரகேசரி**

* அகதிகளாக உள்ள ஓர் ஆணும் பெண்ணும் மணம் முடித்தால் 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும். சுயதொழில் முயற்சி ஒன்றை ஆரம்பிக்கவே இந்த நிதி வழங்கப்படுகிறது. ஒரு அகதி ( ஆணோ, பெண்ணோ) அகதியல்லாத ஒருவரை மணமுடித்தால் 12,500 ரூபா வழங்கப்படும்.

26.09.1994 **வீரகேசரி**

* புத்தள மாவட்டத்திலுள்ள 189க்கும் மேற்பட்ட அகதி முகாம்களில் வாழும் வட-கிழக்கு முஸ்லிம்களை குடியேற்றுவதற்கென தனியார் மற்றும் அரசாங்கம் வழங்கும் காணிகளில் மாதிரிக் கிராமங்கள் நிறுவப்படும். பாடசாலை, தபாற்கந்தோர், வைத்தியசாலை, உட்பட சகல வசதிகளுடனும் இந்த மாதிரிக் கிராமங்கள் நிறுவப்படும்.

11.10.1994 **வீரகேசரி**

* அகதி முகாம்கள் என்ற பெயர் இனி இருக்காது. இன்று முதல் இந்த முகாம்களை மாதிரிக் கிராமமாக மாற்றியமைக்க உடனடி நடவடிக்கை எடுத்துள்ளேன். மாதிரிக் கிராமங்கள் அனைத்தும் எதிர்வரும் நவம்பர் மாதம் 15ம் திகதிக்கு முன் பூர்த்தி செய்யப்படும்.

13.10.1994 **தினகரன்**

* இவ்வாண்டு முடிவதற்குள் நாட்டிலுள்ள சகல அகதிமுகாம்களும் மூடப்படும். அத்துடன் எனது புனர்வாழ்வு, அமைச்சும் இல்லாதொழிக்கப்படும்.

19.10.1994 **வீரகேசரி**

# கௌரவிக்கப்பட வேண்டிய உரிமை

கடந்த ஓகஸ்ட் மாதம் 16ம் திகதி நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலின் போது யாழ் மாவட்டத் தேர்தலும், முடிவுகளும் எள்ளி நகையாடக் கூடியவகையில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணம், வன்னி இருமாவட்ட தேர்தல்கள் குறித்து சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுவும் "இந்த இரு மாவட்டங்களிலும் தேர்தல்கள் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் நடைபெறாதது மட்டுமன்றி அதன் உண்மைத்தன்மையும் கேள்விக் குரியது" என்று சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், "யாழ்ப்பாணத்தில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழ்நிலை காரணமாக சுமார் 95 வீதத்துக்கும் அதிகமானவர்களால் வாக்களிக்க முடியாமல் போய்விட்டது. எனவே, கடந்த 16.8.94 அன்று அங்கு நடைபெற்ற தேர்தலை ஒரு கேலிக்கூத்தாகவே கருதுகிறோம். இந்த முடிவுகளை நிராகரிக்கிறோம்" என்று தேர்தல் ஆணையாளருக்கு நவசமசமாஜக் கட்சி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் புதுமையான ஓர் வடிவில் தேர்தல்கள் நடந்து முடிந் துள்ளது. பதிவு செய்யப்பட்ட யாழ் மாவட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 5,96,366 ஆக இருந்த பொழுதிலும் 13,476 வாக்காளர்கள் அதாவது 2.3 சதவீதமானவர்கள் மட்டுமே வாக்களித்துள்ளனர். எழு தேர்தல் மாவட்டங்களில் 100 க்கும் குறைவான வாக்குகளே இடப்பட்டுள்ளன.

நல்லூர் தேர்தல் பிரிவில் வெற்றியீட்டியவரின் வாக்குகளின் எண்ணிக்கை 9 ஆகும். அதேவேளை மானிப்பாய், உடுப்பிட்டி தேர்தல் பிரிவுகளில் வெற்றி பெறுவதற்கு தேவையான வாக்குகள் 8.5 என்ற குறைந்தளவில் காணப்பட்டது.

கோப்பாய், மானிப்பாய் தேர்தல் பிரிவுகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்பன ஒரு வாக்குகளையேனும் பெறவில்லை.

மாவட்ட ரீதியிலான பெறுபேற்றின் போது புளொட் அமைப்புக்கு ஒரு ஆசனமேனும் கிடைக்கவில்லை. சுயேச்சைக்குழு 1 ஆக போட்டியிட்டு யாழ் மாவட்டத்தில் 347 வாக்குகளை பெற்றிருக்கும் அதேவேளை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி 263 வாக்குகளை பெற்றுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாழ்ப்பாணத்தில் 1151, வட்டுக்கோட்டை 5 உடுப்பிட்டித்தொகுதி 01, சாவகச்சேரி தொகுதி 62, ஊர்காவற்றுறைத் தொகுதி 719, காங்கேசன் துறை தொகுதி 04 என மொத்தம் 2098 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தை மிகச் சிரமப்பட்டுக் கைப்பற்றியுள்ளது. ஈ.பி.டி.பி. 10744 வாக்குகளைப் பெற்று 9 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

உண்மையில் வாக்குகளின் எண்ணிக்கையின் உண்மைத்தன்மையும், வாக்களிக்கப்பட்ட முறையும் தேர்தல் கால அவதானிகளின் கருத்துப்படி மோசடியும், பயமுறுத்தல்களும் நிறைந்த ஒன்றாக இருந்ததையும் இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

உண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தலானது அதன் முடிவின் அடிப்படையில் பாராளுமன்றத்தை அவமதிப்பதும் ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்குவதுமான ஒரு செயலாகும். சட்ட ரீதியாகப் பார்க்கும் போது கூட யாழ்மாவட்டத்தில் தேர்தல் நடந்ததென்பது ஜனநாயக விரோத செயலாகும். இன்றைய சூழலில் யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடத்தப்பட்டதானது குடியியல், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தின் 25 வது பிரிவுக்கு முரணான செயலாகும். இந்த ஒப்பந்தத்தில் இலங்கையும் கையெழுத் திட்டுள்ளது.

இந்த வகையில், யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடத்தப்பட்ட பொழுது பங்குபற்றாமலோ அல்லது வாக்களிக்காமலோ விட்டவர்கள் இத்தேர்தலை நிராகரிக்கின்ற தமது எதிர்ப்புணர்வை காட்டியவர்கள், பொய்மைக்கு துணைபோகாமல் இருந்த அவர்களது அந்த உரிமை கௌரவிக்கப்பட வேண்டியது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த இடம் பெயர்ந்தவர்களில் 8942 வாக்காளர்களின் விண்ணப்பங்களே தேர்தல் ஆணையாளரால் எற்றுக் கொள்ளப்பட்டது. அதில் 6105 பேர் புத்தளத்தில் வாக்களிக்க அனுமதியளிக்கப்பட்டது. யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் அதிகமாக அகதிகளாக இருப்பதும் புத்தளத்திலேயே யாழ்ப்பாணத் தேர்தல் முடிவுகளைப் பார்க்கும் பொழுது அகதிகளில் 70 வீதத்திற்கும் மேற்பட்டோர் வாக்களிக்கவில்லை என்று தெரிகிறது.

# வடமாகாண முஸ்லிம் அகதிகளின் புனர்வாழ்வு பற்றி ஒரு கண்ணோட்டம்

கலாநிதி. எஸ்.எச். ஹஸ்புல்லாஹ்

புனர்வாழ்வு என்றால் என்ன? புனர் வாழ்வு யாருக்கு? புனர்வாழ்வு பற்றி எவ்வாறு திட்டமிடுவது? என்ற அம்சங்கள் புனர்வாழ்வு என்ற கருத்துடன் சிந்திக்கப்பட வேண்டியவை களாகும். புனர்வாழ்வு என்பது தனிப்பட்டவர் களின் அல்லது மக்கள் குழுக்களின் வாழ்க்கை, எதாவது ஒரு அல்லது பல காரணங்களால் பாதிக்கப்பட்டிருந்தா அப்பாதிப்பில் இருந்து அம்மக்களின் வாழ்க்கையைப் புனரமைத்துப் புத்துயிர் கொடுக்கும் முயற்சியைக் குறிக்கும். பாதிப்பின் தன்மை, பாதிப்பின் ஆழம், பாதிக்கப்பட்ட காலம் என்பவற்றைப் பொறுத்து புனர்வாழ்வு முயற்சிகள் வேறுபட்டு அமையும். சரியான முறையில் திட்டமிடப்படாத புனர்வாழ்வு முயற்சிகள் எதிர்பார்த்த சாதக விளைவைத் தராது. தவறான திட்டமிடுதலால் உருவாக்கப் பட்ட புனர்வாழ்வு முயற்சிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர்மறையான விளைவுகளையும் கூட எற்படுத்தி, அம்மக்களுக்கு மேலும் துன்பத்தை எற்படுத்தலாம். ஆயின், சரியான விபரங்களை அறிந்த அடிப்படையில் புனர்வாழ்வு முயற்சிகள் அமைதல் வேண்டும்.

இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான "புனர்வாழ்வு" என்ற அம்சம் இன்று இலங்கையில் பரவலாக சிந்திக்கப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த அடிப்படையில் இனப்பிரச்சினையின் வெளிப் பாட்டால் பாதிக்கப்பட்ட "வடமாகாண முஸ்லீம் களுக்கான புனர்வாழ்வு" என்ற அம்சம் இங்கு சீர்தூக்கிப் பார்க்கப்படுகின்றது. இனப் பிரச்சினையின் வெளிப்பாடாக எவ்வாறு வடமாகாண முஸ்லீம்கள் பாதிக்கப்பட்டார்கள்? அவர்கள் தாம் காலாகாலமாக வாழ்ந்து வந்த சமூக, பொருளாதார கிராம சூழலை விட்டு ஆயுதமுனையில் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளால் ( LTTE) ஒக்டோபர் மாதம் 1990ம் ஆண்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள். இன்றுவரை (1994ம் ஆண்டு வரை) தமது இருப்பிடத்துக்குச் சென்று தமது வாழ்க்கையைத் தொடர முடியாமலும் காணப்படுகின்றார்கள். இப்பலவந்தமான வெளியேற்றமும், அதன் விளைவாக எற்பட்ட கஷ்டங்களும் இம்மக்களுக்கு எற்படுத்திய தாக்கத்தை **இரண்டு** பிரதான பிரிவுக்குள் நோக்கலாம்.

**ஒன்று** தாம் வாழ்ந்து பழகிய சமூக, கலாசாரச் சூழலில் இருந்து இம்மக்களை அவர்களின் விருப்பத்துக்கெதிராக வெளியேற்றிய மையும், அதனால் இம்மக்களுக்கேற்பட்ட பொருளாதார ரீதியான நஷ்டமும், சமூக உளவியல் ரீதியான தாக்கமும். **இரண்டாவது** அகதிகளாக தற்காலிகக் குடிசைகளையும், மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகளையும், கொண்ட "அகதி முகாம்களில்", கடந்த நான்கு வருடங்களாக வாழ்கின்றமையும், அதனால் எற்பட்ட பாதிப்பும். அகதி வாழ்க்கையில் எற்பட்ட பாதிப்புகளாக, உடல் நல சீர்கேடு, கல்வி கலாசார வீழ்ச்சி, குடும்ப உறவில் பாதிப்பு ஆகியவைகளைக் குறிப்பிடலாம்.

ஆயின் மேற்குறித்த விவரண அடிப் படையில் பாதிப்புகளைக் கொண்ட மக்கள் குழுக்களுக்கான ஒரு புனர்வாழ்வு எவ்வாறு இருக்க வேண்டும்? எங்கு? எப்போது ஆரம்பிக் கப்பட வேண்டும்? என்ற அம்சங்கள் முதலில் சிந்திக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

வடமாகாண முஸ்லீம்களின் பொருளாதார, வரலாற்றுப் பாரம்பரிய, இன உறவு அம்சங்களை கருத்திற்கொண்டு நோக்குகின்ற போது இம்மக்கள் திரும்பவும் வட மாகாணத்தில், தாம் வாழ்ந்து வந்த பிரதேசங்களிலேயே மீள் குடியேற்றம் செய்யப் படுவது பொருத்தமானதாகத் தோன்றுகின்றது. இதற்கு ஆதாரமாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். **ஒன்று** ஒரு குறிப்பிட்ட மக்களின் குடியிருப்பு வசதி, பொருளாதார அடிப்படைகள், பழகிய பௌதீக, சமூக, சூழல் அம்மக்களின் வாழ்க்கையை இலகுவில் செப்பனிடுவதற்கு ஒரு பொருத்தமான வழியாகும். ஆயின் அப்படியான வசதிகள் வடக்கில் தான் காணப்படுகின்றன. **இரண்டாவது** ஒரு மனிதன்

தன்மானமான உணர்வுடன் சுதந்திரமாகத் தனது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள விரும்புவது தான் பிறந்து வளர்ந்த தாயகத்திலாகும். இது மனிதனின் அடிப்படை உரிமையும் ஆகும். ஆயின், பொருத்தமான சூழ்நிலை ஒன்று உருவாகுமானால் வடமாகாண முஸ்லீம்கள் தாம் பிறந்து, வளர்ந்து, பழகிய சூழலில் தமது பொருளாதார அரசியல் உரிமைகளைப் பெற்ற அடிப்படையில் புனர்வாழ்வு முயற்சிகள் செய்யப்படுவது சாலப் பொருத்தமானது.

புனர்வாழ்வு முயற்சிகள் எப்பொழுது ஆரம்பிக்கப்பட வேண்டும்? என்பது மற்றும் ஒரு வினா. உண்மையில் மக்களுக்குப் பயனுள்ள ஒரு புனர்வாழ்வு முயற்சியை மேற்கொள்வதற்கு திகதி குறிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. அது எதுவித தாமதமுமின்றி உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். அவ்வாறாயின் இப்புனர்வாழ்வு முயற்சிகள் காலகட்டங்களாக செய்யப்படுவது பொருத்தமானது. இந்த அடிப்படையில் **மூன்று** காலகட்டங்களை அடையாளப்படுத்தலாம். **முதலாவது** காலகட்டமானது அகதிவாழ்க்கையின் போது மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு முயற்சிகளாகும். அக்கட்டத்தில் அகதி மக்களை மீள்குடியேற்றத் திற்கும், ஐக்கிய வாழ்க்கைக்கும், உடல்நல ரீதியாகவும், உளரீதியாகவும் தயார்படுத்தும் கட்டமாகும். மறுவார்த்தையில் அகதிமக்களின் உடல்நல ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட நிவாரணத்திலும் கல்வி, சமூக, கலாசாரச் சூழலிலும் திருப்தியான சீர்திருத்தங்கள் உடனடியாக செய்யப்பட வேண்டும். **இரண்டாவது** காலகட்டமாக, மீள்குடியேற்றத் துக்கு மக்களைத் தயார்படுத்தலும், அதனை நடைமுறைப்படுத்தலையும் கொள்ளலாம். தற்போது பாதிக்கப்பட்ட இவ்வகதி மக்கள் நாலாதிசையிலும் சிதறிக் காணப்படுகின்றார்கள். இம்மக்களை கிராம, உறவினர், நண்பர்கள் அடிப்படையில் இனங்கண்டு அம்மக்களை மீளகுடியேற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். **மூன்றாவது** கட்டம், மீள் குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் செய்யப்படுகின்ற புனர்வாழ்வு முயற்சிகளாகும். முற்றாக வேரறுக்கப்பட்ட ஒரு சமூகம், திரும்பவும் மீள் குடியேற்றம் மூலமாகப் புத்துயிர் கொடுக்கப்பட இங்கு முயற்சிக்கப்படுகின்றது. இம்முயற்சி புனர்வாழ்வு திட்டமிடலாளருக்கு பெரியதொரு சவாலாகும். இக்காலகட்ட புனர் வாழ்வு மீள்குடியேற்றத்துக்குட்பட்ட இச்சமுதாயத்தை மீண்டும் உருவாக்கியெடுப்பது மட்டுமல்ல, அச்சமுதாயத்தில் ஏலவே காணப்பட்ட குறைகளைக் களைந்து, புதிய நவீன காலகட்டத்துக்குப் பொருத்தமான சமுதாயமாக உருவாக்கி எடுக்க வேண்டும். மேற்குறித்த அம்சங்களை முறைப்படி செய்கின்ற போது அது பூரணமான புனர்வாழ்வாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமையும்.

***

## முஸ்லிம்களைஅகதிகளாக்கியிருப்பது கேலிக்குரியது !

பல நூற்றாண்டுகளாக தமிழர்களுடன் இஸ்லாமியர்களாக அன்னியோன்னியமாக வாழ்ந்த ஒரு சமூகம் இன்று நம்பிக்கை வைத்தவர்களாலேயே நாடற்றவர்களாக, நாதியற்றவர்களாக நாய்களைப் போல் விரட்டப்பட்டது. பலிக்களத்திற்குச் செல்லும் செம்மறியாடு போல் தான் பிறந்து வளர்ந்த தன் உயிரினும் மேலாக நேசித்த தன் சொந்த மண்ணிலிருந்து, தாய் தேசத்திலிருந்து வேற்று நாட்டவர் போல் விரட்டப்பட்டது. பள்ளி வாசல்களுக்குள்ளும், கிராமங்களுக்குள்ளும் புகுந்து ஈவு இரக்கமின்றி வேட்டையாடப்பட்டது. இத்தனைக்கும் முஸ்லிம்கள் செய்த தவறுதான் என்ன?

தமிழீழ விடுதலையை தமதினத்தினதும் விடுதலை என்று கருதி உதவிக்கரம் நீட்டினார்களே அது தவறா?

வியர்வை சிந்தி உழைத்த பணத்தை தாராளமாக "எங்கட பொடியன்களுக்குத் தானே" என்று கூறி தாரைவார்த்தார்களே அது தவறா?

அல்லது இந்தியப்படை புலிகளை வேட்டையாடிய காலத்தில் புகலிடம் அளித்தார்களே. அது தான் தவறா? பின் எது தவறு?

பேரினவாதத்திற்கு எதிராகப் போராடும் ஒரு சிறுபான்மையினம் தன்னிலும் சிறுபான்மையான ஒரு இனத்தின் சுதந்திர உணர்வுகளை , அரசியல் அபிலாஷைகளை அடக்கி, ஒடுக்க நினைப்பது எந்த விதத்தில் நியாயமானது?

எப்படி சிங்கள பேரினவாதத்திற்கு எதிராக தமிழர்கள் போராட ஆரம்பித்தார்களோ, பின் அதே காரணத்திற்காக முஸ்லிம் இனத்தை அடக்க நினைப்பது நியாயமாகுமா?

அரச பயங்கரவாதத்தால் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டார்கள் என்று கூக்குரலிடும் தமிழ் இனவாதிகள் முஸ்லிம் மக்களை அதே பயங்கரவாத ரீதியில் அகதிகளாக்கியிருப்பது கேலிக்குரியதல்லவா?

தேவதாசன் தேவராஜ்
கொழும்பு - 05
நன்றி - சரிநிகர் இதழ் 49

அகதியின் கடைசிப்பக்கம்:

## மீண்டெழும் நினைவுகளும் விடியலின் விலாசமும்

இந்த இயந்திரயுகத்துக் காலம் எப்போதும் விரைவாகவே நழுவிப் போகிறது. நாட்களை நாம் எண்ணுவதுமில்லை. அதுபோல் சிலவேளைகளில் நாம் நம்மைக் கூட எண்ணிப் பார்ப்பதுமில்லை

சரியாக நான்கு ஆண்டுகளுக்கு முன் எம் வாழ்வில் ஓர் அஸ்தமனம் ஏற்பட்டது. நாம் சுடும் இருட்டாகிப் போனோம். எம்மைத் தொலைத்தோம். எம்மைத் தொலைத்துத் தூரமாக்குவதில் "அவர்களுக்கு" சரியான அவசரம் சில மணி நேரங்களில் எம் இருப்பை இல்லாமலாக்க வேண்டி வந்தது.

அவர்கள் "வீரர்களாக " தங்களை இனங்காட்டத் துடித்ததில் நாம் எபபோதும் போல் கோழைகளாகிப் போனோம்!

வாழ்க்கையில் எந்தவொரு தோல்வியுமோ , சறுக்கலுமோ அல்லது மோசமான நிகழ்வுகளுமோ சொல்லிக் கொண்டு வருவதில்லை. அழையாத விருந்தாளியைப் போல் திடீரென்று வந்து சங்கடப்படுத்தும். அப்படித்தான் இதுவும் -எமது புலம், பெயர்க்கப்பட்டதும், நிகழ்ந்தது. இப்படி நடக்குமென்று நாம் கனவில் கூட நினைத்துப் பார்த்ததில்லை. ஏன் நாமில்லாத அவர்களும் கூட நினைத்துப் பார்த்திருக்கமாட்டார்கள். நிகழ்ந்துவிட்டது

எப்போதும் குற்றவாளிதான் தனக்கு எப்போதாவது தண்டனைகிடைக்கும் என்று எதிர்பார்த்திருப்பான்

ஆனால் இங்கே....! எல்லாம் மாற்றமாய் நடந்தது...! மாறிப்போனது....!!

இது நிரபராதிகள் தண்டிக்கப்படுகின்ற காலம் குற்றவாளிகள் தீர்ப்பு வழங்குகின்ற நேரம், எங்களை எம் இருப்பிடம் விட்டுத் துரத்தி தங்ளை முட்டாளாக்கிக் கொண்டார்கள். அவர்கள் கூட எதிர்பாராத எதிர்ப்புக்கள் வந்த போது தடுமாறிப் போனார்கள்; கைசேதப்பட்டார்கள். நிறையச் சாட்டுக்கள் சொல்லி நியாயப்படுத்த முனைந்தார்கள்

நாம், வாழ்வில் கண்டிராத துன்பங்கள் துயரங்கள் சுமந்து......

எம் உடமைகள், உழைப்புக்கள் இழந்து...., நாட்டின் ஒவ்வொரு பகுதிகளிலும் அடைக்கலம் புகுந்தோம்

எம்மில் அனுதாபம் கொண்டு எல்லோரும் உதவி. ஒத்தாசை புரிந்தார்கள் . இருப்பிடம் தந்தார்கள். இன்னும் என்னவெல்லாமோ தந்து உதவினார்கள்

"தூங்கிக் கொண்டிருக்கும் " ஒரு சமுதாயத்தின் புதிய முஹாஜிரீன்களாய் நாங்கள் மாறிப்போன போது புதிய அன்ஸாரீன்களும் உருவானார்கள் .

மொத்தத்தில் நாம் எங்குமே இல்லாத வரலாறாய் ஆகிப்போனோம்

நாட்கள் நகர..நாம் என்னவானோம் என்பது கூட மறந்து போகும் நிலைக்கு சிலர் மாறிப் போனார்கள் எமக்கென்றொரு தாயகம் இருந்தது இறந்தகாலம் போல் சிலருக்குத் தெரிந்தது

நழுவியதை விட்டு விட்டு , கிடைத்ததை கட்டிக் கொள்வோம் என்று சிலர் நினைத்துக் கொண்டார்கள்

'வா ஊருக்குப் போவோம்' என்று பலர் உரத்துக் கூறினார்கள்.

இப்படி எமக்கு எத்தனையோ நிலைகள், காலமும் நேரமும் எதனையும் கண்டு கொள்ளவில்லை. நகர்ந்து கொண்டேயிருந்தது; இருக்கிறது.

இப்போது நாம் "புதிய மனிதர்களாய்" ஆகிப் போய் நான்கு வருடங்கள். நான்கு வருடங்கள் என்பது வெறும் குறைவான நாட்களல்ல. காலமும், நேரமும் எப்போதும் பெறுமதியானது. அவற்றின் பெறுமதி அவரவர் தேவைகள், அவசியங்களுக்கு ஏற்ப வேறுபடும். எமது தேவைகள் , அவசியங்களைத் தீர்ப்பதில் அல்லது தீர்வு வழங்குவதில் சுமார் 1460 நாட்கள் அடங்கிய இந்த நானகு வருடங்கள் என்ன பங்களிப்புச் செய்தன என்பது எல்லோருக்கும் முன்னுள்ள கேள்விகள் தான்.

எமக்காகப் பலர் இன்று வரையில் குரல் கொடுத்து வருகிறார்கள். எம் சகோதர இனத்தவர்கள் கூட எமக்காக, நாம் இழந்த உரிமைகளை மீளப் பெறுவதற்காக ........, "எம்முடைய தாயகமும் வடக்கே" என்பதை உறுதிப்படுத்துவதற்காக குரல் கொடுத்தார்கள். கொடுக்கிறார்கள்.

இப்போது நாட்டில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்து எல்லோருக்கும் ஆறுதல் தருகிறது. அது போல் பல எதிர்பார்ப்புக்களையும் தருகிறது.

எப்போதும் எல்லோருக்கும் நல்லது நடக்க வேண்டுமென்தே எல்லோரிகனதும் அவா.

இப்போதைய சந்தர்ப்பம் நல்லது நடக்கப் பயன்பட வேண்டும் என மக்கள் காத்திருக்கிறார்கள்

நாட்டின் இன்றைய முக்கிய சக்திகளான அரசு -புலிகளிடத்தில் தாராளமான மனமாற்றம் ஏற்பட்டுள்ளது நம்பிக்கையின் ஒளிக் கீற்றுக்களை பரவச் செய்கிறது.

எம்மை பற்றி உணர்ந்த நிலையில் "அவர்களும்," உணர்த்தும் நிலையில் " இவர்களும்" ........நாம் சந்தோஷப்பட வேண்டிய தருணம்தான் இருந்தாலும் சற்றுத் தயக்கமாய்த்தான் இருக்கிறது வழமைபோல் எம்மை வைத்து காய் நகர்த்தத் தொடங்கி விடுவார்களோ என்ற பயம்........!

தீர்வுகள் காணப்படாத நடைமுறைகளால் பாதிப்பும், பயமும் ஏற்படுவது எம்மைப் போன்ற பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான்....!

கனியும் வரை காத்திருக்கத்தான் வேண்டும்

"காத்திருக்கும் வரை நம் பெயர்
காற்றென்றே இருக்கட்டும்
புறப்பட்டு விட்டால்
புயலென்று புரியவைப்போம்......."

என்ற மு.மேத்தாவின் கவிதைதான் ஞாபகத்திற்கு வருகிறது. நாம் காத்திருப்பதா.... ? புரியவைப்பதா....? அல்லது புரியும் வரை காத்திருப்பதா.......?

எமக்குச் சேவை புரிவதற்காய் எம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை அரசு அமைச்சராக்கியிருக்கிறது. அவரை நாம் நல்ல எதிர்பார்ப்புக்களுடன் வரவேற்போம். அவரும் பல திட்டங்கள் பல முன்வைக்கிறார். புலிகளிடம் எமக்காகப் பேசப்போகவும் தயாரென்கிறார். எது எவ்வாறிருப்பினும் "எம்முடைய தாயகம் வடக்கே" தான் என்பதில் எமக்குள் இரண்டு நிலை இருக்கக் கூடாது.

சில சலுகைகள் சொகுசுகள் எம் யதார்த்தத்தை மாறச் செய்து விடக்கூடாது

மழைக்காக ஒதுங்கும் இடங்களெல்லாம் எம் இருப்பிடங்களல்ல!

இன்றைய அஸ்தமனம் நாளைய உதயத்திற்கான அறிகுறிதான்

எமது அஸ்தமனம் நாளைய விடியலையும் சேர்த்து இருட்டாக்கி விடக் கூடாது!

விளக்குகளின் வெளிச்சத்தை நம்பி இருட்டில் மறையும் நிலவு தன் இருப்பைத் தொலைத்துவிட்டதென நினைக்கக் கூடாது.

நாம் நடந்து வந்த பாதைகளை திரும்பிப் பார்ப்போம். நடக்க வேண்டியவைகளை எண்ணிப்பார்ப்போம். நல்லவை நடக்கப் பிரார்த்திப்போம்

விடியலின் வெளிச்சம் எம்மிலும் பட்டுத் தெறிக்கட்டும்.!

ஒன்று படுவோம்! வெற்றி பெறு வோம்!!

## 'வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு'

## NORTHERN MUSLIMS' RIGHTS ORGANIZATION" (N.M.RO)

பிரதான குறிக்கோள்

1. மீண்டும் பூர்வீகவிடத்தில் வாழும் உரிமை.
2. பலவந்தமாக வெளியேற்றப்பட்டதால் ஏற்பட்ட அசையும், அசையாத ஆவண இழப்பீடுகளை மீளப்பெறும் உரிமை.
3. மீளக் குடியேறும் வரை இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் பொழுது சகல வசதிகளையும் பெற்றுக் கொள்ளும் உரிமை.
4. வட மாகாணத்தில் மீளக்குடியேறும் போது அச்சமின்றி தனித்துவத் தோடும் பூரண பாதுகாப்புடனும் வாழும் அரசியல் உரிமை.

**மேற்படி குறிக்கோள்களை அடைவதற்காக பின்வரும் செயல் திட்டங்களை இவ்வமைப்பானது நடைமுறைப்படுத்தும் .**

1. வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் புள்ளிவிபரங்களைத் திரட்டுவது.
2. அவர்கள் மத்தியில் எதிர் காலத்தைப்பற்றிச் சிந்திக்கும் மனோநிலையை ஏற்படுத்துதல்.
3. இலங்கையில் வாழும் ஏனைய மக்கள் மத்தியிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் வடமாகாண முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியம் பற்றியும், அகதிகள் தொடர்பாகவும் அறிவை வழங்குதல்.
4. இந்நோக்கத்தை அடையும் பொருட்டு கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பத்திரிகையாளர் மாநாடுகள் போன்றவற்றை நடத்துதல். இவ்வகையான முயற்சிகளின் பிரதிபலன்களை பிரசுரங்களாக வெளியிடுதல்.
5. அரசியல் தீர்வொன்றிற்கு வடமாகாண முஸ்லிம்களின் அபிப்பிராயங்களை ஒன்று திரட்டி அதற்காகத் தயார்படுத்தல்
6. இந்தக் குறிக்கோளை அடைவதற்கு தேசிய சர்வதேச ரீதியில் பொது அபிப்பிராயத்தை ஏற்படுத்துதல் என்பனவாகும்.

இவ்வமைப்பில் அங்கம் வகித்து, தாயக மண்ணை மீட்பதற்கும், எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கும் தங்களது பங்களிப்பைச் செய்ய முன்வர விரும்புவோர் இதன் அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்கவும்
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**செயலாளர்,**

**வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு**

**15 ஏ, ரோகினி வீதி, வெள்ளவத்தை,**

**கொழும்பு - 06.**

# புறப்படு

பிறந்த மண்ணையே
மறந்து விட்டாயா?
அகதிக் குடிசையே
உனக்கு.....
நன்றெனக் கொண்டாயா?

ஊரிலே உன் சொத்துக்களை
விடுத்திட்டே
அகதிக் குடிசை
நுழைந்தாய்...!
இப்போது
உன் மனம்
அந்நிய மண்ணையே
நாடுகிறதா?
இந்நிலை ஏன் உனக்கு....?
பிறந்த புண்ணிய பூமியில்
பற்றில்லையா?

உன் குடிசையோ
அந்நிய நிலத்தில்
அதிலிருந்து உன்னை
தூக்கி விட எத்தனை
கழுகுகள் வட்டமிடுகின்றன
அது உனக்குப் புரியவில்லையா?
எனவே, நிம்மதி ஓங்க
புறப்படு..........!
உன் சொந்த மண்ணுக்கு!

எல்லாம் தலை விதியென
மூலையில் முடங்கிவிடாதே
செயலால் விதியை
வெல்ல முடியும் மறந்து விடாதே!

உறங்கிய உன்னை
"அகதி" தட்டி எழுப்பிய
பின்னும்
ஏன் இந்த மௌனம்?
எழுந்து முகம், கை கழுவி
N.M.R.O உடன் இணைந்து
செய்ய வேண்டிய
ஆயத்தங்களை சிரமேற் கொள்
இது உன் தலையாய கடமை.

முஸ்லிம்கள் எதிலும்
சளைத்தவர்கள் அல்லர்
என்பதை
தெளிவு படுத்து
உடனே N.M.R.O உடன்
இணைந்துகொள்
உன் பணி
உன் ஊர் செல்வதற்கு
தேவை என்பதை
மறந்துவிடாதே!
உடனே புறப்படு........!

றசூல் புதுவெளி
ஏ. சி. எம். அஜ்மல்